salt usually melting when exposed to heat. It is opposed to உருகா வுப்பு which see.

உருகை, புல்லூரி, a parasitic plant; 2. அறுகம்புல், which see.

உருக்கம், உருகுகை, the act of melting or fusing; 2. தொடை, thigh.

உருக்கரக் கடை, see உருக்கரக்கு.

உருக்கரக்கு, நெருப்பி லுருகும் அரக்கு, seed-lac melted and formed into thin cakes — Shellac.

உருக் கரம், வெண்காரம், borax.

உருக்கல், உருக்குதல், to melt; to liquify.

உருக்கல், செங்கல், brick; 2. உருகின கல், அதாவது சிட்டம், over - heated or brick over-burnt in brick - kilns.

உருக்க ளடித்தல், உடம்பை யிளைக்கச் செய்தல், to reduce to leaness; to cause to emaciate; 2. கருகச் செய்தல், to scorch; to blight.

உருக்கன், உடம்பை யிளைக்கச் செய்யு மோர் நோய், a wasting disease, such as consumption, diabetes etc.

உருக்காங் கட்டி, உருகிப் போன செங், கல். See உருக்கல்.

உருக்காங் கல், செங்கல் சிட்டம், see உருக்கல்.

உருக்காட்டுதல், உரு வெளியாகத் தோற்றல், presenting an unreal vision as in a hallucination; 2. உருவெளித் தோற்றம், illusion; 3. உடம்பு ரூபமாகத் தோன்றல், to appear in flesh and bone (in physical body)

உருக்காரம், வெண்காரம், borax.

உருக்கி, உருகச் செய்வது, that which induces melting, see உருக்கினம்; 2. இளைக்கச் செய்வது, that which causes one to be reduced, said of a disease or a medicine bringing about such a condition.

உருக்கிச் சாய்த்தல், உலோகங்களை உருக்கி நீளமாக அச்சில் ஊற்றல், casting metals into moulds and then taking out as bars; 2. வாத முறையில் உலோகங்களை யுருக்கி மருந்தினங்களி லூற்றல், (In Alchemy) pouring a melted metal into a liquid medicine as a method of its purification.

உருக்கி யூற்றல், உருகிய உலோகங்களைச் சாதாரணமாகச் சாய்த்தல், an ordinary process of casting. See உருக்கிச் சாய்த்தல்.

உருக்கி வார்த்தல், see உருக்கிச் சாய்த்தல்; 2. உருக்கின உலோகங்களைக் கருவில் வார்த்தல், to cast or run a melted metal into moulds to get it in bars or into a particular shape, as is done in a foundry.

உருக்கின சத்து, உருக்கிய சத்து, essence obtained by melting.

உருக்கின சரக்கு, உருக்கிய சரக்கு, any melted substance.

உருக்கினச் சத்து, வெண்காரம், borax. It is so called because it is used by workers in metal as a flux.

உருக்கினச் சரக்கு, உலோகங்களை யுருக்குவதற்காக வுபயோகிக்குஞ் சரக்கு, any one of a class of substances or mixture used for promoting fusion or melting of metals or minerals — Flux.

உருக்கினத் தாது, வெண்காரம், borax.

உருக்கினத்திற் காதி, உலோகங்களை உருக்குவதற்கு ஆதாரமா யுள்ள சரக்குகள், அவை யாவன — நிலவுகாய், குக்கில், மொச்சை, கருங் கொள்ளு முதலியனவும், சவ்வாது, சவ்வீரம், முப்பு, இணங்கன் (வெடியுப்பு) வெண்காரம், துருசு, மால்தேவி, வெள்ளைப் பாஷாணம், ரெங்கு, வெள்ளைக் குன்றிமணி, தேன், புறா வெச்சம், வெல்லம், ஆமணக்கு, முதலியனவும், a class of primary substances that form a basis for promoting fusion of metals, such as, madar fruit, bdellium, country bean, black horse - gram etc, and also civet (Jawad) corrosive sublimate, universal solvent known as the three salts, nitre, borax, blue vitriol, orpiment, white arsenic, white crab's eye, honey, dung of doves, jaggery, and castor seed. See உருக்கினச் சரக்கு.

உருக்கினத்துக் காதி, see உருக் கினத்திற் காதி.

உருக்கினத்துக் குடோரி, உலோகங்களை நெருப்பிலிட நீல நிறமாக உருகி யாடும்படிச் செய்வதற்காகத் தயாரிக்கும் ஓர் கார மருந்து, இதன் முறைக்குப் போகர் நூலைப் பார்க்கவும், a corrosive chemical preparation used in melting or fusing metals for the purpose of making it shine with a glowing blue flame.

உருக்கினத்துச் சரக்கு, நெருப்பிற் குருகும் கந்தகம் அல்லது தங்கம், வெள்ளி, செம்பு, முதலிய வுலோகங்கள், metals or a class of other substances such as gold,

silver, copper, sulphur etc, which are fusible in fire. c.f. உருக்கினச் சரக்கு.

உருக்கினம், அஞ்சன பாஷாணம், which see; *2.* உலோகங்களை உருக்கக் கூடிய வெண்கார முதலிய சரக்குகள், a class of substances that facilitate the melting or fusion of metals such as borax etc; *3.* தேன், honey; *4.* மெழுகு, wax, see உருக்கினத்திற் காதி.

உருக்கு, எஃகு, இது விசேஷமாய்ச் சேலத்தில் செய்யப்படும். இதை அயத்தோடு கரி சேர்த்துச் செய்வதுண்டு. இது கடினமாயும், அரத்திற் கசையாததாயும், கண்ணாடியை அறுக்குங் குணம் வாய்ந்ததாயும், கல்லோடு அடிப்பதனால் நெருப்புப் பொறி பறக்கச் செய்யும் தன்மை யுள்ளதாயும், காந்த சக்தியைத் தன்னிடத்து நாள்பட நிலைக்கச் செய்யும் வல்லமை பொருந்தியதாயு முள்ளது. இதை நெருப்பில் காய்ச்சுவதால் இக் கடினத் தன்மை குறையும், குளிருவதற்கு நெடு நேரம் செல்லும்.

இரும்பை எஃகாகச் செய்வதற்கு நமது தேசத்தில் வெகுகாலத்திற்கு முந்தித் தெரிந்துள்ளார். சாதாரணமாக இவ்விடத்தில் காந்த மண்ணைக் கொண்டு செய்த அயத் துண்டுகளோடு ஆவிரைக் கொம்புகளைக் கலந்து மூசையி லிட்டுப் பிறகு, அதன்மேல் இலைகளையும் களி மண்ணையும் சேர்த்துப் பொதிந்து, சீலை செய்து எரித்து உருக்கு எடுப்பதுண்டு, (lit) the term means sharpness — Indian steel. It is specially made in Salem. It is iron *(அயம்)* combined with a small quantity of charcoal *(கரி)*. It is brittle, resists the file, cuts glass, emits sparks when struck on flint, and retains the magnetic virtue for a long time. It loses this hardness by being heated in fire and it cools but very slowly.

The art of converting iron into steel has been known to the Indians from a very long time. Here, it is prepared from small pieces of malleable iron obtained from magnetic ore. They are packed in crucibles with pieces of Cassia auriculata wood or twigs and then covered with leaves and clay and subjected to fire.

உருக்கு, எஃகு, steel; *2.* உருக்குதல், melting or fusing; *3.* எருக்கு; Madar — Calotropis gigantea; *4.* உருக்கின வஸ்து, anything which is melted; *5.* கரைவு, dissolution; the melting of ice, snow, hail etc. — Thaw.

உருக்குக் காரம், வெண்காரம், borax; *2.* உருக்குச் சரக்கு, anything which

promotes melting or fusion. See உருக்கி.

உருக்குகை, உருக்குதல், the act of melting.

உருக்குக் குகை, உலோகங்களையும், மற்றச் சரக்குகளையும் பலமாய் உருக்க வேண்டி யுபயோகிக்கு மோர் பெரிய மூசை, a big and strong crucible used for melting metals and other substances requiring higher temperature; *2.* கன நெருப்பைத் தாங்குவதற்கேற்ற சரக்குகளை உபயோகித்துச் செய்த வச்சிர மூசை, a crucible specially made of heat - producing substances and fire proof materials, so as withstand great heat or higher temperature.

உருக்குக் குடோரி, உலோகச் சத்துக்களை எளிதில் உருக்குவதற்காக வேண்டித் தயாரிக்கும் இரசாயனச் சரக்கு, இது சாதாரணமாக வெடியுப்பு, பூ நீறு, வெள்ளைப் பாஷாணம், வெங்காரம், தாளகம், இரசம், கல்லுப்பு ஆகிய சரக்குகளை எருக்கம் பாலை விட்ட ரைத்து வாலையிலிட் டியக்கிய பதங்கம், (In Alchemy) a chemical preparation of the nature of a flux obtained by the process of distillation or sublimation. Generally, nitre, fuller's earth, white arsenic, borax, orpiment, mercury and rock-salt are taken and ground together with madar milk and the lump obtained is placed in a vessel and then sublimated. The product so derived is used in melting metals and metallic ores, See உருக்கினத்துக் குடோரி; *2.* வெள்ளைக் கிலு கிலுப்பை, white - flowered crotolaria — Crotolaria verrucosa. It is perhaps so called from its use in the fusion of metals.

உருக்குக்கு மித்திரன், வெள்ளை யாமணக்கு a white variety of castor plant — Rieinus communis.

உருக்குச் சட்டம், வார்த்த இரும்பு, iron which has been cast into moulds — Cast iron.

உருக்குச் சரக்கு, வெண்காரம், borax, see உருக்கினம்.

உருக்குச் சிந்தூரம், எஃகைக் கொண்டு செய்த செந்தூரம், a dark red-oxide of iron prepared from a steel by the process of calcination as per method described in Tamil Medical science.

NOTE.— This should not be confounded with *(அயச் செந்தூரம்)* the one prepared from iron filings.

உருக்குச் சுண்ணம், எஃகைக் கொண்டு புடமிட் டெடுத்த **சுண்ணம்,** an alkali preparation containing iron and insoluble calcium carbonate as chief ingredients — A kind of ferrous carbonate.

உருக்குச் செங்கல், கற்சிட்டம், over-burnt brick.

உருக்குச் செந்தூரம், see உருக்குச் சிந்தூரம்.

உருக்குதல், தீயிலிட்டுக் கரைத்தல், to melt in the fire or with heat; 2. இளகச் செய்தல், to fuse with heat; 3. கரையச் செய்தல், to dissolve; 4. மெலியச் செய்தல், to reduce; to emaciate 5. வருத்துதல், to afflict.

உருக்குதனை செம்பாக்கி, செவ்விறகு, இது எஃகைச் செம்பாக்குவதா லிப் பெயர் red wood (unidentified). It is so called because it is said to be capable of converting steel into copper, but it is not known to which plant this refers to, for the reason that it has not been identified by Botanists of the present day.

உருக்குதனை பற்பமாக்கி, கிளுவை, hill balsam tree — Balsomodendron candatum.

உருக் குத்துதல், அம்மை குத்தல், to vaccinate; 2. உருக்கி வார்த்தல், which see.

உருக்குத் தைலம், வெண்ணெய், கோழி முட்டைக் கரு முதலிய வஸ்துக்களி னின்றும் இறக்குந் தைலம், an oil extracted from butter, the yolk of fowl's eggs etc; 2. எஃகை யுருக்குந் தைலம், a universal solvent for melting steel.

உருக்கு பற்பம், எஃகைப் புடமிட்டெடுத்த பற்பம், a calcined oxide of steel.

உருக்குப் பாய்ந்த, செங்கற் சிட்டம், சிலாசத்து முதலியவைகளைப் போல் உருகி இளகிய, having undergone changes by fusion, as in overburnt bricks, bitumen or igneous rocks, and so on.

உருக்குப் பாறை, உட்குட்டினாலிளகி மொத்தையாகத் திரண்ட கற் பாறை, (In Geology) Massive Rocks called also Plutonic or Igneous rocks which are believed to have undergone fusion. They lie beneath all the other rocks or have sometimes been forced up through them from beneath. They were once in a melted state and on cooling at the surface, formed the original crust of the globe.

உருக்குப் பிரமியம், இரத்தப் பிரமியம், gonorrhoea with a discharge of blood; see also இரத்தப் பிரிமியம், 2. உடம்பை உருக்கும் நீரிழிவு, diabetes, which is a wasting disease; 3. வெள்ளை ஒழுக்கு, simple gonorrhoea; 4. உடம்பை உருகச் செய்யும் பிரமேகம், any urinary disease followed by emaciation; 5. சலக் கழிச்சல், excessive discharge of urine — Polyuria.

உருக்கு மணல், அய மணல், iron ore; sand combined with iron.

உருக்கு மண், see உருக்கு மணல்.

உருக்குமம், பொன், gold.

உருக்குமுக பாகம், உருக்கு முறை, melting process.

உருக்கு முகம், உருகி வரும் சமயம், the stage at which fusion or melting takes place — Melting point.

உருக்கு முறை, முறியாதபடிச் சரியான பதமாய் உருக்கி யெடுத்தல், melting in consistence with the principle of melting process.

உருக் குருக்கு, ஓர் வகைக் கற்பூரம், a variety of camphor.

உருக் குலைதல், நோய், நெருப்பு முதலிய காரணங்களினால் உடம்பின் வடிவம் மாறுதல், to be emaciated or disfigured, as does the body by illness or in scalding, scorching, etc.

உருக்கு வளை, மெரு காணி, an instrument for polishing metals.

உருக்கு வேதை, எஃகைப் பொன்னாகச் செய்யும் வாத வேலை, the process of transmuting steel into gold; 2. உலோகங்கள் உருகும் போது, உருக்கு முகத்தில் கிராசம் கொடுத்தல், கட்டல், மாரணஞ் செய்தல் முதலிய முறைகளினால் அவைகளைப் பொன்னாக மாற்றுதல்.

பொதுவாக வேதை பலவிதம் அவையாவன — சிடிகை வேதை அல்லது நொடி வேதை, இரச வேதை, மாற்றுயர்வு வேதை, இலவணம் அல்லது உப்பு வேதை, மாரண வேதை, பரிசன வேதை, மகா குரு வேதை, தொந்த வேதை, குளிகை வேதை முதலியன. முழு விவரத்திற்கும் வேதையின் கீழ்ப் பார்க்கவும், the transmuting into gold metals in a state of fusion, by any of the processes such as, by animating or otherwise increasing their potent power by adding other chemicals to them, by consolidating them or by

killing their retarding effects or by eliminating the impurities in them.

The processes of transmuting baser metals into refined gold consist of many kinds and those enumerated above are only general classifications.

For fuller details see under வேதை.

உருக் கொள்ளல், கரு வுருவாதல், formation of organs in the fetus in the womb; development of the embryo in the womb; 2. ஆவேசங் கொள்ளல், to be possessed, as by a spirit or a devil.

உருங்குதல், உண்ணல், to eat.

உருச கதம், நாம் சுவாசிக்கும் காற்றின் நான்கு பங்கில் மூன்று பங்கா யிருக்கும் உப்பு வாயு, Nitrogen which forms 3/4 of the air inhaled by us; 2. உப்பு வாயு கலந்த வஸ்து, a compound containing nitrogen — Nitrogenous compound.

உருசக தேந்திரி யோபாதன பூதங்கள், (உருசகத + இந்திரிய + உபாதான + பூதங்கள் = Nitrogenous + organic + medium + compounds) உப்பு வாயு சேர்ந்த கூட்டு முறை — Nitrogenous organic compounds.

உருசகம், உப்பு வாயு அடங்கிய உப்பு, salt containing nitrogen — Nitrogenous salt 2. ஆமணக்கு, which see; 3. மாதளை, pomegranate — Punica granatum; 4. கொம்மட்டி மாதளை, melon lime — Citron medica; 5. இரணம், புண் முதலியவைகளுக் கிடும் காரம், caustic applied to wounds, sores etc; caustic application.

உருசி, சுவை, taste; 2. மதுரம், sweetness; 3. காரம், savour; 4. இனிமை, pleasantness; 5. இனிய சுவை, good taste.

உருசி கரம், இனிமையானது, that which is delicious or savoury; 2. கொறுக்காய்ப் புளி, sweet babool — Pithecolobium dulce.

உருசி கறி, அரைக் கீரை, which see; 2. மதுரமான கறி, delicious curry.

உருசி காணுதல், சுவையறிதல், to get a taste.

உருசிக்கப் பண்ணல், சுவையுறும்படிச் செய்தல், to give a good flavour or an agreeable taste to; to season; to give a relish to.

உருசி தட்டுதல், சுவை தோன்றல், giving an agreeable taste.

உருசித்தல், சுவை பார்த்தல், to taste; to relish.

உருசி பார்த்தல், உருசித்தல், the act of tasting — Degustation.

உருசி மாந்தம், பேரீச்சம் பழம், date - Phoenix dactylifera.

உருசிய சிம்மக குட்டம், ஓர் வகைக் குட்ட நோய். இதனால் உடம்பில் பல கொப்புளங்கள் (முட்களைப் போல் நீண்டும்) மெல்லியதாயும், பிசுபிசுத்தும், சுர சுரத்தும், உள்ளில் கறுத்தும், முனையிற் சிவந்தும், நெருக்க மாகவும், எழும்பி, இரணங்களாக ஏற்பட்டு, அவைகளில் புழுக்கள் நெளிந்து வலியையும் எரிச்சலையு முண்டாக்கும், leprosy characterised by large blisters or blebs closely scattered all over the body and followed b development of masses of granular tissue. These blisters turn to be viscid and sometimes rough. They will be dark internally, red externally, full of germs and generally marked by pain and burning sensation — Nodular leprosy.

உருசியம், காட்டுப்பசு, a wild cow; 2. மயிர்களடர்ந்த எருமையைப் போன்ற மான், a very large kind of deer resembling a buffalo with hair grown thick or bushy — A kind of Yawk; 3. ஓர்வகைக் குட்டம், a kind of leporsy.

See உருகிய சிம்மக குட்டம்.

உருசி யற்ற, சுவையற்ற, unsavoury.

உருசியான, சுவையான, palatable; pleasing or agreeable to the taste.

உருசி யுணவு, வாய்க்கினிமையான உணவு, highly - seasoned food; delicious food.

உருசி வர்க்கம், இனிமையான உருசி யுள்ள பண்ட வகைகள், a class of food substances which are nice and exquisitely delicious to the taste — Dainties.

உருசு பகந்த விரணம், வாத பித்தத்தினால் பிறந்து குத வளையங்களை யொட்டி, ஒழுங்கான துவாரங்களை யுண்டாக்கி, சீழையொழுகச் செய்யு மோர் வகை விரண நோய், fistula marked by well - defined openings at the anus and discharge of pus there from. It is said to arise from the concerted action of wind and bile in the system.

உரு செபித்தல் மந்திரம் உச்சரித்தல், chanting Mantrams (sacred letters and words)

உருசை, see **உருசி.**

உருசை தரும் பூ, *கறி யுப்பு,* common salt. It is so called from its lending taste to food or other preparations.

உருச் சிலை, *கருங்கல்,* granite stone with which images are made.

உரு டகம், *கருநாவி,* black aconite.

உருட்டிக் காய், *பெருந்தும்மட்டி,* callous leaved Bryonia.

உருட்டிப் பார்த்தல், *விழியை உருட்டிப் பார்த்தல்,* staring, after rolling the eyes; **2.** *கண் சிமிட்டாது விழியை உருட்டி உற்றுப் ார்த்தலாகிய வோர் மரணக்குறி,* a symptom of death in which the dying person rolls his eyes and stares at or looks intently; **3.** *கபால சன்னியில் விழியை யுருட்டிக் கீழாகச் சொருகி, மேற்புருவம் வளையமிட்டுக் காணுதல்,* a peculiar expression of the eyes in meningitis due to downward rolling of the eye-ball and retraction of the upper lid — Post basic stare.

உருட்டிப் போடல், see *உருட்டி விடுதல்;* **2.** *உருண்டையாகத் திரட்டிப் போடல்,* to roll into a small ball, as pills are rolled.

உருட்டி மங்கலம், *செங்கத்தாரி,* false peacock's foot tree — Niebuhria linearis.

உருட்டி விடுதல், *சாகச் செய்தல்,* to cause to die.

உட்டி விழித்தல், see *உருட்டிப் பார்த்தல்.*

உருட்டுதல், *மருந்தை உருண்டையாக அல்லது மாத்திரையாகச் செய்தல்,* rolling medicine into tiny balls or pills or globules; **2.** *உருண்டையாகச் செய்தல்,* forming any substance into a ball by rolling.

உருண்டகம், *அவுபல பாஷாணம்,* which see.

உருண்ட நிர்புட்பி, *மாதுளை,* Pomegranate - Punicum Iranatum.

உருண்ட விசிகை, *உருண்டையான தசை நார்,* round ligament — Ligamenta rotunda.

உருண்டு போதல், *இறத்தல்,* to dic.

உருண்டை, *திரட்டிய மருந்து,* medicine made into globules; **2.** *மாத்திரை,* pill; **3.** *அபினி யுருண்டை,* a slang term specially signifying opium ball.

உருண்டை உடைசல், *தைலம், குழம்பு, பாயசம் முதலியவைகளைக் காய்ச்சும்போது, பதம் தவறிச் சரியானபடிக் கரையாமல், கட்டியாகவும், கசடாகவும் திரளல்,* any sediment or precipitate coarsley formed in a thick solution as is sometimes found in the preparation of medicated oils and solutions, pastries etc, owing to some defects in the process of heating or boiling.

உருண்டைக் கட்டி, see *உண்டைக் கட்டி.*

உருண்டை போடல், see *உண்டை போடல்.*

உருண்டைப் பிரண்டை, see *உருளைப் பிரண்டை.*

உருண்டை விசிகை, *வாத்தின் இறகைப் போற் பருமனுடைய நார்ப் பந்தனம். இது கருப்பையையும், அல்குல் தசையையும் பக்கங்களில் அனுசரித்து நிற்கும்,* the band of round ligaments about the size of a goose equill extending to the womb, the mons veneris and the other contiguous parts.

உருதந்தி, ருதந்தி, see *அழு கண்ணி.*

உருதம், *மிருகம், பறவை முதலியவைகளின் சத்தம்,* the noise made by animals and birds in general.

உருதம் பண்ணுதல், *உச்சரித்தல்,* chanting, as mantrams are done.

உரு திரிதல், *உருமாறல்,* to be metamorphosed; **2.** *உருவம் மாறுபடல்,* Change of features, **3.** *உள்ளாக மாறல்,* internal change.

உருத்தகம், *ஓர் வித சன்னி,* a kind of apolexy. See *உருத்தாக சன்னிபாத சுரம்.*

உருத்த குதம், *ஓர்வகைக் குத நோய். இது நாள்தோறும் மலத்தை யடக்கி விடுதலால், அபான வாயு மிகுந்து, ஆசன வளையம் சுருங்கி, அதனால் மலம் மிக்கப் பிரயோசையோடு வெளிப்படும் போது ஆசன வாய் வெடித்து, புண்ணாகி வலியை யுண்டாக்கும்,* a disease of the anus marked by fissures or sores at its orifce and pain while passing stools, due to the unusual contraction of the sphincter muscles. It arises from the aggravated condition of the vital air 'Apana' due to suppression of stools frequently; **2.** *ஆசன வாயிலேற்படும் வலியுள்ள ஓர்வித விரணம்,* a painful linear ulcer at the margin of the anus — Anal fissure. See *இருத்த குதம்.*

உருத்த மண், பூமி மண், earth.

உருத் தரித்தல், see உருக் கொள்ளுதல்.

உருத்தல், முளைத்தல், sprouting; 2. கன்மம் விளைதல், resulting in effects, as caused by deeds in former births.

உருத்தாக சன்னிபாத சுரம், ஓர்வகைச் சன்னி பாத சுர நோய், இது அவயவங்களில் மிக்க வலி, உடம் பெரிச்சல், காங்கை, கழுத்து வலி, பிரமை, சோர்வு, பிரலாபப் பேச்சு, தாகம், பேதி முதலிய குணங்களைக் காட்டும், typhoid fever characterised by excessive pain in the bodily organ, burning sensation in the body, warmth, pain in the neck, stupor, fatigue, delirious talk, thirst, diarrhoea etc.

உருத்தாக சன்னி வாத சுரம், ஓர்வகைச் சுர நோய், இது இரைப்பு, இருமல், மயக்கம், கழுத்தின் நரம்பிழுத்தல், தாழ்வாய்க் கீல் பிடித்தல், உடம்பு முழுவதும் குத்தல், நடுக்கம், கழுத்திலும், நெற்றியிலும் வியர்வை, பிதற்றல், தவித்தல், இடை பொருந்தாது புரளல், உதடு உலரல், முதலிய குணங்களைக் காட்டும், an acute rheumatic fever marked by the following symptoms:— Hard breathing, cough, giddiness, contraction of nerves in the neck, lock-jaw, acute pain all over the body, shivering or tremor, perspiration on the neck and the forehead, delirious utterence, restlessness, parched lips etc. -- Cerebral rheumatism.

உருத்திர கிரந்தி, மூலாதாரமும் சுவாதிட்டானமும், a common term for the two mystic centres situated in the Pelvic region; 2. ஓர் கொடிய கிரந்திப் புண், a severe type of syphilitic or venereal ulcer.

உருத்திர கோபம், பெருங்கோபம், vehement anger; wrath; 2. மருதாணி, nail dye — Lawsonia alba.

உருத்திர சடை, திருநீற்றுப் பச்சை, sweet basil — Ocimum basilicium.

உருத்திரசம், பாதரசம், mercury; 2. மாரடைப்பு, a disease of the heart marked by suffocation and syncope — Angina pectoris.

உருத்திர சன்னி, கொடிய சன்னி, a virulent or fatal type of apoplexy.

உருத்திர சாரம், கூர்ச் சாரம், a caustic or corrosive salt; pungent salt; 2. சிவ சாரம், a very strong and powerful salt used un Alchemy. It is opposed to சத்தி சாரம், which see.

உருத்திர சிங்கி, கொங்கணவர் சொல்லிய வாத முறைப்படித் தயாரித்த ஓர் வீரிய மருந்து, இதனால் சூதம் சாகும், பாஷாணங்கள் கட்டும், நவலோகங்கள் வேதிக்கும், a powerful alchemical compound prepared as per process laid down in Konganava's work on Alchemy. It is supposed to have an extraordinary virtue of killing or destroying the poisonous principle in mercury, consolidating poisons especially arsenic and transmuting the nine kinds of metals into gold.

உருத்திர தாகம், கொடிய தாகம், intense thirst — Polydipsia.

உருத்திர நங்கை, கருப்புக் காய் அதாவது கருப்பு அகரம். இது அறுபத்து நாலு கடைச் சரக்குகளி லொன்று, one of the sixty - four kinds of bazaar drugs contemplated in Tamil Medical science.

உருத்திர நட்சத்திரம், வீரம், corrosive sublimate — Perchloride of Mercury; 2. பூரம், see இரச கற்பூரம்.

உருத்திர பத்திரம், சிவப்பாமணக்கு, a red variety of castor plant. See ஆமணக்கு.

உருத்திர பலம், மிக்க பலம், exalted strength — Hyperasthenia.

உருத்திர புடம், செம்பரத்தை, shoe-flower — Hibiscus mutabilis.

உருத்திர புட்பம், செம்பரத்தை, shoe-flower — Hibiscus rosa - sinensis.

உருத்திர பூ, see உருத்திர பூமி.

உருத்திர பூஷணம், பாம்பு, snake, so called from its being worn by Rudra.

உருத்திர பூண்டு, பெருமருந்து, Indian birth-wort — Aristolochia indica.

உருத்திர பூமி, சுடுகாடு, burning ground.

உருத்திரம், மஞ்சள், turmeric — Curcuma longa; 2. பெருங் கோபம், violent anger; fury; 3. சிவப்பு, redness.

உருத்திர ரசம், பாதரசம், mercury See உருத்தி ரசம்.

உருத்திர ரோகம், மார்பில் ஏற்படும் நோய். இது மூச்சு விட முடியாது துள்புறுத்தும், இது உருத்திரனுக்கு உறை விடமாகிய அனாகதம் அல்லது மார்பின் பாகத்தில்

ஏற்படுவதா லிப்பெயர், a disease of the thoracic region characterised by spasmodic suffocative attacks — Angina. It is so called because it is a disease on the Anagatham *(அனாகதம்)* or Rudra-centre, one of the dynamic nerve-plexus in the human body; **2. ஓர்வகைக் காச ரோகம்,** a disorder of respiration in asthma, characterised by difficulty in breathing, cough and expectoration; **3. பொதுவாக மார்பின் உள்ளுறுப்புகளில் உண்டாகும் நோய்,** any disease of the organs contained in the chest such as, the lungs, the heart etc.

உருத்திர வயிரவம், வாதம், வலிப்பு முதலான நோய்களுக்கு அகஸ்தியர் வைத்திய காவியம் *1500-ல்* சொல்லியபடித் தயாரித்த கடலைப் பிரமாணமுள்ள மாத்திரைகள், pills of the size of Bengal grams prepared as per process laid down in Agastyar's medical works 1500 and prescribed for rheumatism, convulsions etc.

உருத்திர வாதம், இருதயத்தின் பலவீனத்தாலும், அதில் கொழுப்புப் படிவதாலும், அல்லது அசீரணத்தாலும், மார்பின் இடது பக்கத்தின் இருதய ஸ்தானத்தில் குத்தல், நோய், மூச்சு முட்டல், முதலிய குணங்களைக் காட்டு மோர் வகை வாத நோய். இதற்குத் தமர்வாதம் என்றும் பெயர், a disease of the heart, characterised by spasmodic suffocative attacks, and cardiac pain on the left side of the chest. It is due to weakness of the heart or accumulation of fat or to indigestion — Angina pectoris.

உருத்திர வாயு, தமரக வாயு, இது வாயு கோளாறடைவதால் மார்பு வலி, மூச்சுவிட முடியாமை, முதலிய குணங்கள் ஏற்பட்டுத் திடீரென நொடிக்குள் கொல்லும் இருதய சம்பந்தமான நோய், a disease of the heart due to the deranged condition of Vayu in the system arising from indigestion, flaluency etc.

It is marked by pain in the region of the sternum (breast bone), suffocation, swoon, inability to sit erect or breathe while in an upright position and so on; at times it even ends in sudden death.

உருத்திர விஷக் கலிக்கம், குப்பை மேனித் தோல், வெந்த தலையோடு, செம்புத் தூள், துரிசு, துத்தம், புளியிலைச் சாறு முதலியவைகளை அரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு, சன்னி, காமாலை, முயல் வலி முதலிய நோய்களுக்குக் கண்ணிலிடு மருந்து, an eye-salve applied in cases of apoplexy, jaundice, convulsions etc. It is prepared by grinding the following medicines: viz. bark of the rubbish plant (Acalypha indica), burnt human skull, copper filings, blue vitriol, white vitriol, juice of tamarind leaves etc.

உருத்திர வுப்பு, வெடியுப்பு, nitre or saltpetre — Potassium nitrate.

உருத்திர வேங்கை, ஓர்வகை வேங்கை மரம், a kind of kino tree probably உதிர வேங்கை, which see.

உருத்திர வைரி, கருப்புக் கடலை, black Bengal gram.

உருத்திரன், திரு மூர்த்திகளில் ஒருவர். இவர், வேதத்தின்படி யுக முடிவில் ஏற்படும் உகாந்த வாயுவுக்குக் கர்த்தா. புராணக் கொள்கைப்படி, அழித்ததற்கு வல்லமை யுடைய கடவுள். ஏகாதச ருத்திரரில் ஒருவர். கிரீக் தேசத்திய கடவுளாகிய அப்பொல்லோவுக்குச் சமமாக சொல்லலாம். one of the three principal deitics. (In the Rig-Veda) he is the god of tempests i.e., the destructive wind that prevails at the end of the world. (In Purana) a name of shiva denoting the destroying power of the deity. (According to South Indian books) he is one of the eleven forms of manifestations of Rudran. There is some similiarity in him to Apollo, the god of the Greeks, as both the gods bear the bow, have knowledge of medicine and are represented with the mouse sacred to both.

NOTE.— The term 'Rudra' is derived by Sayana from the roots 'Rudran and Vaidya' meaning 'he who drives away sorrow' and consistent with this derivation, he is called in the Rig-Veda itself as the bountiful and the 'Healer' possessed of various remedies (later vaidyanathan) 'benign' and 'gracious'.

The ideal of the Highest God has, from the beginning been centred round the person of Rudra or Siva in the Rig-Veda and we find him described as the "Lord of Sacrifices and prayers" and we find this maintained, even in the days of Valmiki when beliefs in other deities were slowly gaining ground. (Studies in Saiva Siddhanta)

உருத்திராக்கம், see உருத்திராட்சம்.

உருத்தி ராங்க சன்னி, ஓர்வகை சன்னி, a kind of delirium.

உருத்திராங்கபீசம், காகோளி, a plant Tizyphus napeca.

உருத்தி ராங்க பீசம், காகோளி, a plant Tizyphus napeca.

உருத்தி ராட்சக் கிழங்கு, ஓர்வகைக் கிழங்கு, Rood-rauk yam — Dioscorea crispata. It is so called from its appearance of a tuber.

உருத்திராட்சந்தம், நாய்ப் பாகல், buffalo carolah — Momordica hispida alias Bryonia mysorensis. It is a medicinal plant of the Senna species.

உருத்திராட்ச மரம், உருத்தி ராட்ச மணியின் மரம். இது மரமாகவும், பெரிய செடியாகவு முள்ளது, பூக்கள் சிறியவை. இது நமது நாட்டிலும், ஜாவா தேசத்திலு முண்டு, இதன் காய் கறிக் குதவும். ஊறு காய்க்கும் துவையலுக்கும் உபயோகிக்கலாம். இதன் கொட்டை தான் உருத்திராட்ச மணி. இது கல்லைப் போல் கெட்டியாக விருக்கும். அதிதாகம், விக்கல் இவைகள் போம். bracelet tree — Eleocarpus ganitrus alias E.tuberculatus. It is a tree or a large shrub with simple leaves and small flowers. It is found in our country and also in Java and other tropical parts. Fruit contains a very hard nut with edible pulp surrounding it. It is used in curries and also in pickles (chutney). It is a useful remedy in cases of intense thirst and hiccough.

உருத்தி ராட்ச மரம், துப்பாக்கி மரம் அல்லது தேன் பச்சை மரம், இது 40 முதல் 60 அடி வரைக்கும் வளரும். இலை மாறி மாறியும், பூக்கள் சிறியவைகளாயும், வாசனையாயும் இருக்கும்.

பட்டையின் மேல் செதில் ளைம்பி யிருக்கும், உட்பக்கம் சிகப்பும் கபில நிறமும் கலந்தது. உருசியும், வாசனையும் கிடையாது. உள்பட்டையைக் கஷாயம் வைத்து யானைக் காலுக்கும், முத்தின மரத்தின் பட்டையை வியர்வையை யுண்டாக்குவதற்கும், மற்றும் மார்பு வலி, சரும நோய், முதலியவைகளுக்கும் கொடுக்கலாம். கஷாயத்தில் சிரட்டைக்குப் பதிலாக வுபயோகிக்கலாம், musket tree or honey-fruit tree — Guazuma tomentosa. Tree grows 40 to 60 ft.; leaves alternate; petals five; many-seeded; flowers scented; bark very scaly and underneath, reddish brown. It is without any taste or smell.

Decoction of the inner bark is used in elephantiasis; the bark of old trees is used as a sudorific and is also given in diseases of the chest and cutaneous complaints. It is a substitute for calumba and gentian.

உருத்தி ராட்சம், உருத்தி ராட்ச மணி, the nut of a tree — Eleocarpus ganitrus; 2. உலங்காரை, wild olive — Eleocarpus serratus; 3. துப்பாக்கி மரம், the musket tree, see உருத்திராட்ச மரம்.

உருத்தி ராணி, சத்தி சாரணை, a species of Trianthema.

உருத் திரிச்சி, பூ வழலை, an efflorescent salt grown in the saline soil impregnated with soda.

உருத் திரிதல், see உரு திரிதல்.

உரு பட்சா, பெருங்காயம், asafoetida.

உருபு, see உருவு.

உருபுகம், உருபூகம், ஆமணக்கு, which see.

உரு பேதம், ஐ காரம், the mystic letter 'I'; 2. கரு பேதம், change effected in the embryo; 3. தோற்றம், நிறம் முதலியவைகளின் பேதம், change in colour, appearance etc.

உருப் படுதல், மருந்தைப் புடமிட்டுப் பூர்த்தி செய்தல், giving a finishing touch or stroke to a medicine after its calcination; 2. உருவாதல் அதாவது உருவாகத் திரளுதல், formation of organs as in the development of a fetus in the womb; 3. சீர்ப் படுதல், attaining perfection. See உருக் கொள்ளல்.

உருப் படுத்தல், உருக் கொள்ளும்படிச் சீர்திருத்தல், உருவேறப் பண்ணுதல், causing to develop or bringing to perfection in shape and form; 2. மருந்தைப் புடமிட்டுப் பூர்த்தி செய்தல், completing the preparation of a medicine by calcining it.

உருப்பம், வெப்பம், heat , as of the sun; temperature as of the atmosphere; 2. கோபம், anger; 3. தினைமா, ground millet-flour, 4. மிகுதி, intenseness; abundance.

உருப் பிரமம், ஆட்டுக் கொம்பு, sheep's horn.

உருப்பு, see உருப்பம்.

உருப் போடல், மந்திரம் செபித்தல், chanting mantrams a number of times to bring about effect.

உரும காலம், கோடைக் காலம், summer season; 2. நடுப்பகல், mid-day.

உருமணி, கரு விழி, the iris of the eye.

உருமம், மத்தியானம், noon; **2. நடுப் பகல்,** mid-day; **3. உஷ்ணம்,** heat as of the sun; sultriness.

உருமலை வாரி, உலோக மணல், metallic ore; sand containing iron or any metal.

உரும வேளை, உச்சிப் பொழுது, noon.

உரு மாம்பழம், மாதுளை, pomegranate — Punica granatum.

உரு மாறல், வேற் றுருவல் கொள்ளல், to be changed into or assume a different form; to transform; **2. உடம்பை மாற்றுதல்,** to assume a different body — Metamorphose. See **உரு மாற்றம்; 3. சரீரம் வேறுபடல்,** change of features, as a result of some disease; to get changed in appearance as in bodily infirmity; **4. நிறம், தோற்றம் முதலியவை மாறுதல்,** change of colour, appearance etc.

உரு மாறுதல், see **உரு மாறல்.**

உரு மாறு மூலி, தொட்டாற் சிணுங்கி, humble plant; touch-me not — Mimosa pudica. it is so called from its leaves mimicking sensibility by folding themselves at the slightest touch.

உருமாற்றமை, see **உருவ மாற்றுமை.**

உரு மாற்றம், உருவம் வேறுபடல், (literally) change of shape or form; **2. மிருகங்கள் அல்லது பூண்டு களிலாவது அவைகளின் பகுதிகளிலாவது ஏற்படும் வேறுபாடு,** a change of form in animals or plants or in their parts during life; **3. தத்துவங்கள் மாறி வேற்றுருக் கொள்ளல்,** (In Biology or Morphology) the modification of organs or structure in form and function; **4. மூலப் பிரகிருதி அதாவது இப் பிரபஞ்சத்தின் காரணமான மாயையின் வல்லமையால் ஒன்று மற்றொன்றாக மாறுதல்,** (In Evolution), the secular change from a simple or rudimentary condition to one that is more complex and of a higher order; **5. இரசாயன நூலின்படி ஒரு வஸ்துவின் ரூபம் வேறுபடுதல்,** (In Chemistry) the change of a compound into a new form — Chemical change; **6. மனித உருவத்தை மாற்றி வேறுருவங் கொள்ளல், இவ்வித்தை தெட்சிணா மூர்த்தி பட்சணி 110லும், அகஸ்தியர் தண்டகம் 100லும் சொல்லியுள்ளது.** (In Psychology) the change of human body into a quite different one as desired, by enchantment or other supernatural means — Metamorphosis. This is a secret art described in the Siddhar's work on magic viz., Dakshinamurthi 110, and Agastya's magic 400.

NOTE.— Metamorphoses are the changes which the body of an animal or a plant undergoes after its birth. They are the modifications in various degrees of the organization form and appearance from mode of life condition, structure etc. Such changes are not peculiar to certain classes only, but are common to all animals and plants without exception.

In human beings, this process of changing in form or substance is brought about by magic, witchcraft or other supernatural means. It also takes place naturally when man becomes after sometime a woman and vice versa.

உரு மித்தல், புழுக்க மாதல், to be sultry; **2. உட்டணித்தல்,** to become hot; **3. மன வெப்பமடைதல்,** growing excited in mind.

உருமிப்பு, உஷ்ணம், heat; **மன வெப்பம்,** heat of the mind; mental heat.

உருமியம், பெருச்சாளி, bandicoot — Mus giganteus.

உருமை, உப்பு விளையும் பூமி, a saline soil.

உரும், அச்சம், fear.

உரும் பரம், பெருங்காயம், asafoetida — Ferula asafoetida; **2. பாம்பு,** snake; **3. செம்பு,** copper; **4. செம்பு நிறமான பிசின்,** gum of copper colour.

உரு ரசம், சுத்த ரசம், refined mercury; **2. பாத ரசம்,** quick silver.

உருகு, கருப்புக் கலைமான், a black species of deer (Mammalian family)

உருவகம், see **உருவம்; 2. உள் ளிருக்கும் கரு,** the ovum in the uterus; **3. உள் ளுறுப்பு,** internal organ.

உருவங் காட்டி, கண்ணாடி, mirror as forming images by reflection; looking glass.

உருவ சாஸ்திரம், உறுப்புகளின் அமைப்பினால் ஏற்படும் மனிதருடைய குணம், அதிர்ஷ்டம், முதலியவைகளைக் காட்டியும், முகத்தின் வடிவம், அமைப்பு, குறிகள் முதலானவைகளைப் பற்றிக் கூறியும், ஏற்பட்டுள்ள நூல். இது அறுபத்து நான்கு கலைக் கியானங்களுள் ஒன்று. the science

relating to the art of discovering the temper, character and the fortune of a person, foreknowing them by the features of his countenance, structure etc. It is classified as one of the sixty-four arts and sciences.

NOTE.— It includes Physiognomy, Palmistry, Chiromancy etc. and so, it is considered a science indicating the moral and mental characteristics of an individual.

2. நோய்களைத் தீர்மானிக்க ஏதுவான முகக்குறிகளைப் பற்றிக் கூறும் நூல், (In Medicine) the science describing the facial expression and appearance as means of diagnosis.

உரு வசியம், ஓர் வகை நோய், an unknown disease; **2. கரு வசியம்,** a magic paint preapred from the fetus for alluring persons.

உருவ மாற்று மை, உருவத்தை மாற்றுமை, (In Magic) an unguent or black paint used in witchcraft or sorcery for transforming the body. See **மாற்று மை.**

உருவ மெடுத்தல், வடிவங் கொள்ளல், see **உருக் கொள்ளல்.**

உருவம், உடல் human body; **2. வடிவம்,** shape or figure; **3. அழகு,** beauty; **4. உடலுறுப்பு,** bodily organ; **5. நிறம்,** colour; **6. மந்திர வுரு,** repetition of mantras; **7. பிரதிமை,** (In Magic) an image made of clay or flour for puposes of invoking evil spirits in it by chanting mantrams. See **பாவை.**

உருவர், பெருஞ்சீரகம், anise-seed — Illicium anisatum.

உருவலி, ஓர்வகைப் பூண்டு, இதனால் இரத்த மேகம் போம், an unknown plant said to cure Hematuria.

உரு வழிதல், மேனி வேறுபடுதல், to be disfigured or deformed; **2. கரு வழிதல்,** abortion; **3. அழகு குலைதல்,** being impaired in beauty or excellence oif symmetry.

NOTE.— This generally takes place in diseases through emaciation, as in Consumption, Tuberculosis, Diabetes, Fever, Small-pox, Cholera, etc.

உரு வாக்கல், உருக்கொள்ளும்படிச் செய்தல், to give a shape; to develop into a form.

உரு வாசம், வெள்ளரி, see **உருவாரம்.**

உரு வாணி, கழுத்திலுள்ள முதல் முள்கிய சேட ளெலும்புக்கு அடியி லிருக்கும் இரண்டா மெலும்பு, the second vertebra of the cervical region in the vertebral column; **2. மெலிந்த வுடம்பு,** a reduced or an emaciated body through diseases, like consumption etc.

உருவாணிப் பற்றுதல், மெலிவடைதல், to be emaciated; **2. இளைத்தல்,** growing lean.

உருவாதல், see **உருவமெடுத்தல்; 2. உருவமாகத் திரளுதல்,** assuming a shape as does a fetus in the womb.

உரு வாரசம், கலப்பு, mixture; **2. வீழி,** see **உருவாரச் சம்மட்டி.**

உருவாரச் சம்மட்டி, வீழிச் செடி, a straggling shrub with greenish flowers; Chilli fruited caper — Cadaba indica.

உருவாரம், வெள்ளரி, mottled melon; cucumber — Cucumis utilissimus.

உருவாரி யுப்பு, நாயுருவி யுப்பு, see **உருவி யுப்பு.**

உருவாரு, வெள்ளரிச் செடி, the creeper of cucumber, see **உருவாரம்.**

உருவி, நாயுருவி, Indian burr — Achyranthes aspera; **2. செம் முள்ளி,** thorny nail-dye — Barleria prionites; **3. முள்ளி,** Indian night shade — Solanum indicum; **4. புல்லுருவி,** honey - suckle mistletoe — Loranthus longiflorus.

உருவிச் செல்லல், துளைத்துக் கொண்டு போதல், to pierce through gently.

உரு விடுதல், see **உருப் போடுதல்.**

உருவிப் பாய்தல், வேகமாகத் துளைத்துக் கொண்டு செல்லல், piercing through rapidly.

உருவி யழுதல், விம்மி யழுதல், செருமி யழுதல், to weep with covulsive catchings of the breath.

உருவி யுப்பு, நாயுருவி யுப்பு, salt obtained from the ashes of the brunt plant known as Indian burr — Achyranthes aspera; **2. கார சார வுப்பு,** an all-powerful salt used in Alchemy; one of those minerals in which there is saltness or acrimony.

உரு விரக்கம், கஸ்தூரி நாறி மரம், a tree which emits fragrance like musk.

உருவிலி, உருவில்லான், one who is destitute of physical body; **2. உருப்படாத கரு,** an undeveloped fetus or one before organs are formed.

உருவிழிப் புடைத்தல், கண் வலித்து மிகப் புடைத்து, விழி மேனோக்கிச் சிவந்து, நீர் வடிந்து, பீளை கட்டி, வாய் குளறிச் சொல் தடுமாறி, உண்ட வுணவு வாந்தி செய்து, இடை கொடுக்காமற்படித் துன்புறுத்துமோர் வகைக் கண்ணோய், reflex ophthalmia arising from a constitutional disease. It is marked by pain, swelling, inflammation and muco - purulent discharge, incoherency of speech, vomiting, restlessness etc.

உருவின கோலம், ஆடையைக் களைந்த நிலைமை, அதாவது நிருவாணம், the state of not having covering or a customary clothing on — Nakedness.

உருவு, உருவம், which see; **2. அச்சம்,** fear; **3. உரு வெள்ளேவல்,** pressing gently and drawing the hand down over the sprained portion of the body.

உருவுகை, சுளுக்குப் பாய்ந்த இடத்தை விரல்களினா லமுக்தி மெதுவாய் உருவுதல், a gentle movement of the affected part by some one else pressing with the fingers and drawing the hand down a number of times — Passive movement.

உரு வுடம்பு, தூல வுடம்பு, physical body. **2. பருமனான வுடம்பு,** stout body; **3. அங்க லட்சண முடைய வுடம்பு,** symmetrical body.

உருவுதல், சுளுக்கைப் போக்க அமுத்தித் தடவுதல், to massage gently any part of the body so as to remove sprain on that particular part; see **உருவுகை; 2. தழை முதலியவைகளை யுருவுதல்,** striping off branches of leaves; **3. கை, கால்களை உருவுதல்,** drawing the hand with pressure down the limbs to remove or allay pain.

உருவு பற்றல், பெண் கருப்பையி லுள்ள பிண்டத்திற்கு அவயவங்க ளுண்டாதல், formation of organs in a foetus in the womb; the development of the product of conception— Gestation.

உருவுள்ளு, கொள், gram — Dolichos uniflours.

உருவெடுத்தல், see **உருவு பற்றல்.**

உருவெளி, உரு வெளிப்பாடு, an imaginary appearance of a person or other object; a visionary object chiefly applied to the supposed sight of an absent lover.

உருவெளிக் காட்சி, see **உருவெளித் தோற்றம்.**

உருவெளித் தோற்றம், நினைத்த வஸ்துவை உள்ளன போலக் காட்டும், போலித் தோற்றம், a hallucination in which the perception of an external object is experienced when no such object is really present; an illusion in which the sensual perception of an external object involves a false belief or conception. c.f. Delusion.

உருவெளிப்பாடு, see **உருவெளித் தோற்றம்.**

உருவெளி மயக்கம், உடம்பின் நரம்புகளின் பலவீனத்தால், பலவிதமான ரூபங்கள் புலனுக்குத் தோன்றல், a disease due to nervous weakness, in which a variety of strange images float before the mind.

NOTE.— This is should not be confused with illusions created in Magic or with the spiritual visions actually experienced by a sitting Yogi during his practice.

உருவேறல், see **உருவு பற்றல்; 2. ஆவேசம் அதிகப்படல்,** excessive enthusiasm in spiritual ecstasy.

உருவேற்றல், மந்திரம் செபித்தல், chanting mantrams a number of times; **2. ஆவேச முண்டாக்கல்,** bringing about a condition of spiritual ecstasy.

உருவை, சூரைச் செடி, jackal jujube — Zizyphus oenoplia; **2. முள்ளி,** see **உருவி.**

உருவைக் கார்த்த வீடு, நஞ்சுக் கொடி, navel-cord. It is so called beacuse it sets up a medium of communication between the mother and the child.

உரு வொளி, ஊருவிச் செல்லத் தகுந்த வொளி, light enabling bodies to be seen through distinctly; **2. ஒளியின் பிரதி பிம்பம்,** the change of direction of light which is thrown back; an image produced by a reflecting suface — Reflection.

உருளிசி, கொத்துமல்லி, coriander seed — Coriandrum sativum.

உருளல், இறத்தல், dying or to die; **2. புரளுதல்,** rolling.

உருளி, எலும்புப் பொருத்து, (in Anatomy) ball and socket joint i.e., a joint in which the globular head of one bone is received into a socket in another, such as in the hip-joint — Enarthrosis.

உருளி பாதம், கம்பம் புல், stalk grass — Panicum grossarum.

உருளி பரட்சி மூட்டுப் பிசகல், displacement of a joint.

உருளி புரளுதல், மூட்டு நழுகல், to be dislocated as in the case of a joint.

உருளி பெயர்தல், பொருத்து விலகுதல், see, உருளி புரளுதல்.

உருளி யெடுத்தல், பொருத்துப் புரட்சியை எடுத்தல், to remove the dislocation of a joint.

உருளி வாரம், எலும்புப் பொருத்து அல்லது மூட்டுகளில் வரும் வாதப் பிடிப்பு, affection of the joints — Arthritis.

உருளுதல், சாதல், to die.

உருளை, வெள்ளைப் பாஷாணம், white arsenic — Arsenicum album; 2. முட்டை, egg; 3. வாலை, retort for distillation; a still.

உருளைக் கந்தகம், சுருள் கந்தகம், roll of sulphur.

உருளைக் கல், பரற் கல்; பருக்கைக் கல், small or tiny pebbles.

உருளைக் காந்தம், ஓர் வகைக் காந்தக் கல், a kind of loadstone.

உருளைக் கிழங்கு, இது உணவுக்குரிய கிழங்குளுற் சிறந்தது. உருளையா யிருத்தலைப் பற்றி யிதற்கிப்பெயர். இது வருடந்தோறும் தோண்டி யெடுப்பினும், வேர் மாத்திரம் இரண்டு வருடம் வரை பலன் தருவதற்குதவும். இதன் அடித் தண்டு 1 முதல் 3 அடி உயரம் வளரும். கணையு முள்ளு மற்றது. பூக்கள் 1 அல்லது 1 1/2 அங்குலம் சுற்றளவு, வெண்மை அல்லது ஊதா நிறம் வாய்ந்தவை. கிழங்கு உருளையாயும், மண்ணிறமாயுமிருக்கும். அளவில் கிச்சிலி அல்லது எலுமிச்சை பருமனுள்ளது. இலை, தழை, சிறிது மயக்கத்தைத் தரத்தக்கது. இது பெரு தேசத்துச் செடியாயிருந்து, இந்தியாவிற்குக் கொண்டு வந்து பயிராக்கப் பட்டது; காட்டினமோ கசப்பாயும், உறைப்பாயும் இருக்கும். இதன் தண்டின் கணுவைத் தண்ணீர் விட்டலம்பி, அதனின்று கூழ்ப்பசை போன்ற சத்தெடுத்துப் பிறகு அதைப் புளிக்க வைத்துக் காய்ச்சிச் சாராயமும், சர்க்கரையு மெடுப்பார்கள்.

பர்மா முதலிய பிரதேசங்களி லிதைச் சாப்பிடுவதால் வாத ரோகம், ஆமவாதம் என்கிற கீல்வாயு முதலியன தீருமெனக் கருதப்படுகிறது. இக்கிழங்கின் சாறு வாதத்தை கண்டிக்குமென்பது ஆங்கிலேயர் அபிப்ராயம். ஆகவே பச்சைக்கிழங்கை இயந்திரத்தி லிட்டுப் பிழிந்து, அதிலிருக்கு மாப் பசையை நீக்கிப் பிறகு காய்ச்சி, அதனின்று மருந்து செய்து, முழங்காலி லுண்டாகும் நரித் தலை வாதத்திற்கும், கீல்வாயுவுக்கும் கொடுப்பார்கள். இதன் தைலத்தை வெந்நீரிற் கலந்து நசுக்குண்ட அல்லது வேறு விதமாகக் காயமடைந்த உறுப்புக்கு ஒத்தடங் கொடுக்க அதிக குண முண்டாகும். வெந்நீரி லிக்கிழங்கை அரைத்தும் சார்பிழிந்தும் காயத்திற்கும், தீச்சுட்ட புண்ணிற்கும், மேற்பூச்சாகப் பூசலாம். இதில் கருச்சத்தும், கஞ்சிப் பசையு மதிக மிருத்தலால், இது உடம்புக்கு பலத்தையும், கொழுப்பையும், கொடுப்பதுடன் சருக்கரையையு முண்டு பண்ணும். இதை விடாமற் பல நாட்கள் உபயோகப் படுத்த வுடம்பு வலிவும், புத்தி வன்மையும் மந்தப் படும்.

Common potato plant, Round root — Solanum tuberosum alias Lycopersicum alias L. tuberosum alias S. esculatum. It is superior to all edible roots used in food and is so called from its round shape. It is a perennial herbaccous palnt; stem from 1 to 3 ft. high, without thorns or prickles; flowers 1 to 1 1/2 inches in a diametre, white or purple; the bulbous root globular, browinsh, of the size of an orange or a lime. Herbage has a slightly narcotic smell. It is a native of Peru introduced into and naturalised in India; in wild state it is bitter and acrid. A pure starch is obtainable from the pulverised tubercles by washing with cold water. It is convertible into sugar and alcohol by fermentation.

In Burma and other foreign countries, it is considered that, by consuming this root, rheumatism and arthiritis or other affections of the joints are cured. Raw root is pressed and from the juice in prepared a medicine after eliminating the starch. It is prescribed for rheumatic arthritis and other diseases of the joints. The oil from this root is mixed with tepid water and fomented to contused wounds and other injuries. The root is grond with ho water and used as a pase externally. In cases of wounds, scalds and burns. It serves to add strenth, sugar and fat to the system. Using the continuously in food, tends to decrease the bodily strength and intellectual faculties.

உருளை நீர், முட்டையின் வெண் கரு, the white of an egg — Albumen.

உருளைப் பிரண்டை, கோப் பிரண்டை, a long, round and smooth creeper of vitis (genus)

உருளையடி, see உருளைக் கிழங்கு.

உருளை வாதம், see **உருளி வாதம்.**

உருள் வண்டு, பீ வண்டு, dung beetle — Geotrupes stercorarius.

உருட்சம், மொந்தன் வாழைக் கிழங்கு, tuber of Kuntela plantain — Musa paradisiacea (troglodytaram)

உருட்சண சிகிச்சை, கபம், கோழை, முதலியவைகளை அறுத்துத் தள்ளி, அந்தந்த வுறுப்புகளுக்கும், தாதுக்களுக்கும் போஷணையை யுண்டாக்கு முறை, a form of treatment with tonic, which braces up every organ and increases the tone of the nervous system by completely removing the phlegm and the watery mucous from the lungs — Tonic treatment.

உருட்சை, வாழைக்கிழங்கு, the root of the plantain tree — Musa paradisiaca.

உருதி, ஆயில் பட்டை, which see.

உருப சொருபம், பார்வையின் உருவம், the object of sight.

உருபதன்மாத்திரை, பஞ்ச தன்மாத்திரையிலொன்று அதாவது பஞ்ச பூத மூலத்திலொன்று, one of the rudimentary elements of the five senses i.e, the primitive element of sight.

உருபம், உருவம், form; shape; **2. அழகு,** beauty; **3. பிரதிமை,** image; **4. நிறம்,** colour; **5. நிலை,** posture; **6. சாயல்,** features.

உருபிகரித்தல், கருவி லுருப்படல், see **உருவு பற்றல்.**

உருபிகை, வெள்ளெருக்கு, white madar — Calotropis gigantea (albiflora).

உருப்பியம், பொன், gold; **2. வெள்ளி,** silver; **3. வெள்ளை,** white; **4. ஊதின வெள்ளி,** wrought silver.

உருமிச் சோம்பு, ஓர்வகைச் சோம்பு, a kind of sweet fennel seed.

உரை, பொன், gold; **2. இழைத்தல்,** rubbing; **3. தேய்வு,** attritionl; **4. மாற்று,** fineness of gold or silver, as tested on the touch stone; **5. பொன் மாற் றறியு முறை,** the process of finding out the fineness of gold or silver by rubbing it on the touchstone; **6. தமிழ் தேசத்தில் பிரேதத்தின் முன்னிலையில் இறந்தவரைக் குறித்துப் பெண்கள் கற்பனையாகப் புலம்பும் ஓர் பாட்டு,** a funeral song in vogue especially in the Tamil country recited by the women folk in the presence of the dead.

உரை கட்டல், மந்திரத்தினால் நாவெழாதபடி, அதாவது பேசாதபடி செய்தல், restraining the action of the tongue and thereby rendering one unable to talk. This is generally done through black-art.

உரை கலங்கல், பேச்சுத் தடுமாறல், to get confused in speech.

உரை கல், கட்டளைக் கல் அதாவது மாற்று அறிவதற்காகப் பொன், வெள்ளி இவைகளை உரைக்குங் கல். இது கருப்பாயும், கனமாயுமிருக்கும். இக்கல்லை முலைப்பாலில் உரைத்துக் கண்ணிலிட கண்மாசு அறும், a compact, dark-coloured siliceous stone used for rubbing gold and silver and comparing the mark left with that of the touch needles and thereby ascertaining the purity and the exact quality of a particular gold or silver — Touch stone. It is smooth and somewhat glossy. The stone when rubbed with woman's breast milk forms an application in eye diseases.

NOTE.— The stone is first well rubbed with the metal to be tried and it is then pressed against a dark-coloured wax (mom). It leaves a small portion of the metal on the wax from which the quality is judged.

2. மருந்தரைக்கும் சிறு சந்தனக் கல், a small grindstone used for triturating or rubbing with milk or honey, pills and other forms of medicine into a fine paste.

உரைசுதல், தேய்த்தல், to wear away as does one's foot by walking.

உரை சொல்லல், பிரேதத்தின் முன்பு மார் அடித்துக் கொண்டு பெண்கள் புலம்பிக் கற்பனையாகப் பாட்டுச் சொல்லுதல், mournful singing by the females lamenting at the funeral with rhythmic breast-beating for the departed soul.

உரைத்தல், தேய்த்தல், rubbing; **2. மருந்திழைத்தல்,** to rub into a fine powder or paste; to levigate or triturate; **3. மாற்றறியத் தேய்த்தல்,** rubbing as on the touch-stone for finding out the purity of gold or silver; **4. பூசுதல்,** smearing; **5. மெருகிடல்,** to polish.

உரை நூல், கவுபால சித்தர் செய்த ஆணிக் கோர்வை (நூல்), see **ஆணிக் கோர்வை.**

உரைப்பு, தேய்ப்பு, rubbing as is done with pills; **2. இழைப்பு,** assaying or testing the fineness of gold or silver by rubbing it on a touch-stone.

உரை மருந்து, பெருங்காயம், சுக்கு, மாசிக்காய் முதலிய சரக்குகளை வெற்றிலைச் சாறு அல்லது முலைப் பாலில் இழைத்துக் குழந்தைகளுக்கு மாந்த நோய் முதலியவைகளுக்குக் கொடுக்கு மருந்து, a home - remedy administered to children in cases of indigestion etc. It is prepared by our women by rubbing on a stone orr macerating bazaar drugs such as asafoetida, dry ginger, mace etc., after steeping them in betel leaf juice or a woman's breast milk.

உரை மானம், தேய்ப்பு, rubbing, See **உரைப்பு.**

உரை மெழுகு, உரை கல்லில் தேய்த்த பொன் வெள்ளிப் பொடிகளை ஒற்றும் மெழுகு, a soft black wax intended for collecting the dust of the tested gold or silver on the touch - stone.

உரையறி கருவி, see **உரைகல்; 2. மாற் றறியும் ஆணி,** a small bar of gold or silver used on the touchstone to compare with and test the quality of gold or silver in question — Touch-needle.

See **ஆணிக் கோர்வை.**

உரை யாணி, மாற்றாணி, see **உரை யறி கருவி.**

உரையிகழி, கொத்துமல்லி, see **உருளரிசி.**

உரை யிலக்கணம், see **உரை நூல்.**

உரொட்டி, கோதுமையாற் செய்த அடை, bread, an article of food prepared by backing wheat flour.

உரோக கக்கினம், நோய்களைத் தீர்க்கு மருந்து, medicine or any substance that cures diseases.

உரோககரம், நோய்களைக் கண்டித்தல், the art of healing diseases, therapeutics.

உரோக கரி, நோய்களைக் கண்டிக்கு மருந்து, therapeutic agent.

உரோக காரி, நோய்களைத் தீர்ப்பவன், one who cures diseases; **2. வைத்தியன்,** physician; doctor.

உரோ கக்கினம், see **உரோக கக்கினம்.**

உரோக சஞ்சீவி, மகாவாத நோய்கள், சன்னி பாத சுரம், கொடிய காசம் முதலிய நோய்களைத் தீர்த்து உயிர் தரும் ஓர்வகைத் தைலம், a medicated oil capable of restoring life by rooting out all grave diseases such as rheumatism, typhoid, fever, lung diseases etc., from the system.

NOTE.— It is a term which may refer to any medicine in general capable of bringing about a radical cure of diseases.

உரோக சாந்தகன், நோயைச் சாந்தப் படுத்துபவன், one who alleviates pain and cures diseases; **2. வைத்தியன்,** a doctor.

உரோக சிரேட்டம், சுரம், fever, as the principal one of all diseases.

உரோகணி, ஓர்வகைக் கடுக்காய், a kind of chebulic myrobalan. See **அரோகணிக் கடுக்காய்.**

உரோகதம், மார்புவலி, pain in the chest.

உரோகதி, நாய், dog.

உரோகஸ்தன், நோயாளி, a sickly man; a patient.

உரோக நிதானம், நோயைச் சோதித்தல், diagnosis of diseases by their distinctive marks or symptoms; **2. நோயின் கூறுபாடுகளையும், அதன் காரணம், குறி முதலியவைகளையும் கூறும் குணவாகடம்,** a science relating to the nature of diseases and the changes caused by them — Pathology.

உரோக நீருறை, பிணி நீர்ப்பை, a sac containing a liquid or a semi-solid — Cyst.

உரோகம், நோய், disease; **2. பூ வரும்பு,** bud.

உரோக ராசம், உரோக ராட்டு, நோய்களுக்கரசன் அதாவது சய ரோகம், the king of diseases namely consumption.

உரோகாதம், நெஞ்சிடித்தல், மார் துடிப்பு, palpitation of the heart.

உரோகி, நோயாளி, a sickly person; patient; **2. செம்மரம்,** red wood.

உரோகிணி, ஒன்பது வயதுப் பெண், a girl nine years old; **2. கடுகுரோகிணி,** a purgative drug called Christmas rose — Helleborus niger; **3. பீதரோகிணி,** stinking hellebore — Himalayan hellebore. It is used in diseases of the eye; **4. கடுக்காய்,** Indian gall-nut or Chebulic myrobalan — Terminalia chebula; **5. ஓமை,** mango tree — Mangifera indica; **6. சிறுகாஞ்சொறி,** small climbing nettle — Tragia involucrata (cannabina)

உரோகிணிக் கடுக்காய், see **உரோகிணி.**

உரோகிதப் பட்டை, செம்மரப்பட்டை, இது துவர்ப்பா யிருத்தல் பற்றி மருந்துக் குதவும். இது வெளிப்புறம் சிறிது கருப்பாயும், உட்புறம் சிறிது சிகப்பாயு முள்ளது. the bark of red wood. It is used as a medicinal astringment. It is of a black brownish colour externally and the substance inside is of a deep reddish brown colour.

உரோகிதம், செம்மரம், இதன் விதையினின்று வடிக்கு மெண்ணெய் வாத ரோகத்திற்குதவும், red wood — Amoora rohituka. The oil from the seeds is a stimulant in rheumatism; 2. நரி முருக்கு, an inferior kind of Erythrina; 3. மஞ்சள், turmeric — Curcuma longa; 4. சிவப்பு, redness.

உரோகி தாசுவம், நெருப்பு, fire.

உரோகிதோவா, செம்மரம், see உரோகிதகம்.

உரோகி நேயம், கற் றுளசி, stone-basil — Ocimum genus.

உரோ கிரகம், மார்புப் பிடிப்பு, chest seizure; inflammation of the pleura (a membrane; that invests the lungs) — Pleurisy.

உரோகீ, செம் மரம், see உரோகிதகம்.

உரோ கீஷம், கலை மான், the male red-deer — Stag.

உரோங்கல், உலக்கை, pestle.

உரோசல ரோகம், நெஞ்சறைக்குள் நீர் சேருவதா லுண்டாகு மோர்வகைக் குத்தல் நோய், the presence of an effused fluid in the pleural cavity due to venous obstruction. It is marked by pricking pain — Hydrothorax.

உரோசனகம், எலுமிச்சை, lime — Limonia acidissima.

உரோசனக் களிம்பு, உரோசனம் என்னும் ஓர் வகைப் பிசினைக் கொண்டு செய்யு மோர் களிம்பு, a medicated preparation with resin as an ingredient, applied externally.

உரோசன மூங்கில், கல் மூங்கில், hard bamboo — Bambusa arundinacea.

உரோசனம், முள்ளிலவு, thorny cotton tree Bombax malabaricum; 2. கோரோசனை, see உரோசனை; 3. ஓர் பிசின், a resin.

உரோசனி, கோ ரோசனை, bezoar; 2. கடுகு, (கருப்பு), black mustard — Sinapis nigra; 3. செந்தாமரை, red-lotus — Nymphae rubra; 4. சிறு

காஞ்சொறி, small climbing nettle — Tragia involucrata (cannabina); 5. கற்பாசி, இது மேற் பூச்சு மருந்தாக வுபயோகப்படும். lichen growing upon rocks — Lichen rotundus. This is used in medicine as a liniment.

உரோ சனியம், கடுகு, mustard — Sinapis nigra.

உரோசனை, கோரோசனை, a biliary calculus in a cow-Bezoar; 2. ஓர் வித பித்தம், bile, yellow in colour resembling bezoar; 3. கடுகு, see உரோசனியம்; 4. மூங்கி லுப்பு, bamboo salt; 5. மகிட ரோசனை முதலிய ரோசனை, concretions in general found in the intestines of some animals especially ruminants like ox etc., 6. செந்தாமரை, red lotus — Nymphae rubra.

உரோசி, சூரியகாந்தி, sunflower — Helianthus annuns.

உரோசிகாரம், பேய்ப் புல், a poisonous red grass — Cyperus genus.

உரோ சித்தல், see உரோஷப் படல்.

உரோசினி, சிறுகாஞ்சொறி, small climbing nettle — Tragia involuerata (cannabina).

உரோஷப் படல், சுவரணை கொள்ளல், to be sensitive; to feel sensitiveness; to grow spirited.

உரோஷி, பேய்ப்புல், see உரோசி காரம், It is a grass full of little clots.

உரோணி, கடுகுரோணி, see உரோகிணி, 2. ஓர்வகைத் தொண்டை நோய், inflammation of the throat.

உரோதகம், see உரோசல ரோகம்.

உரோதல், அழுதல், to cry; to weep.

உரோதனம், அழுகை crying; weeping; 2. கண்ணீர், tears.

உரோதனி, see உரோசினி.

உரோதித்தல், அழுதல், see உரோதல்; 2. அழச்செய்தல், to cause to weep.

உரோத்த பத்திரம், விஷப்பாலை, a poisonous milky plant — A kind of Mimusops.

உரோ பந்தனம், மார்புக் கட்டு, a bandage round the chest.

உரோ பந்திகை, காசித் தும்பை, balsam flower, snapweed — Impatiens genus.

உரோமக சுவணம், மயிர்க் கூச்சிடுதல், a sensation in which hairs stand on end.

உரோமகம், சாகம்பரி யென்னும் ஓர் உயர்தரமான வுப்பு. இது இராஜபுதனத்தில், சாம்பர் ஏரியில் விளையும், the best and the purest of evaporated salts, obtained from Sambhar lake in Rajputana. The name 'Romaka' is derived from the river 'Ruma'. See சாகம்பரி; **2.** நால்வகைக் காந்தக் கற்களு ளொன்று. மற்ற மூன்று வகைகளுக்குப் பிராசிகம், சும்பகம், திராவகம், இவைகளைப் பார்க்கவும், one of the four kinds of loadstones. For other kinds mentioned above, see under those words.

உரோமகி, முதியார் கூந்தல், a plant (un identified) e.f. Drowpady's hair — Prana racemosa.

உரோம குரு, see உரோம குரு பீடம்.

உரோமகுரு பீடம், பிண்டம், foetus in the womb.

உரோம கூபம், மயிர்ச் சிலிப்பு, the standing on end of the hair through emotion — Horripilation.

உரோமக் கட்டி, வயிற்றினில் மயிர்கள் போய்த் தங்குவதா லேற்படும் கட்டி. சூதகத்தாற் பைத்தியங் கொண்ட பெண்கள் மயிரை விழுங்குவதாலும் இது காணும், a concretion in the stomach due to the accumulation of hair — Trichobezoar. It is very common in hysterical women who swallow hairs.

NOTE.— This should not be confused with hair-ball (called also hair-cash or hair-mass) which is a concretion in the stomack composed of hair, vegetable fibre, etc.

உரோமக் கட்டு, நிறை மயிர், hairs thickest on the body - flairy; fullness of hair.

உரோமக் கழலை, மயிர்க் கால்களுக் கேற்படும் கழலைக் கட்டி, a tumour of hair-follicles — Trichofibroma.

உரோமக்கால், மயிர்த்துவாரம், hair follicles.

உரோமக் கால் ரோகம், மயிர்க் கால்களுக் குண்டாகும் நோய், disease of the hair follicles, see உரோம ரோகம்.

உரோமக் கிழங்கு, வசம்பு, sweet flag — Acorus calamus.

உரோமக் குணக்கு, உள் வளைந்த மயிர், a condition of ingrowing hairs about an orifice, or of ingrowing eye-lashes-Trichiais.

உரோமக்குறடு, மயிரைப் பிடுங்குவதற்காக வுபயோகிக்கும் குறடு அல்லது சாமணம், tweezers for pulling out hairs — Tricholabis.

உரோமக் கூச்சம், உடம்பின் மயிரைத் தொட வுண்டாகும் கூச்சம், the sense which one perceives when the hairs of the skin are touched; hair sensibility — Trichoesthesia.

உரோமக் கேடு, மயிர்க் கால்களுக்குக் கெடுதி யேற்பட்டு மயிர் முறிதல், an atrophied condition of the hair-bulbs, leading to brittleness of the hair — Trichatrophia.

உணருதல், காய்தல், to dry; **2.** பட்டினியாயிருத்தல், to starve; **3.** வாடல், to fade, to wither; **4.** பரிசித் தறில், to perceive.

உணரு மறிவு, இயல்பி லுண்டான வறிவு, instinct; ready apprehension

உணர், see உணர்ச்சி.

உணர்காங்கை, உணர்ச்சியினா லறியும் சூடு, heat that can be felt, sensible heat

உணர்ச்சி, உணருந் தன்மை, consciousness; **2.** மனம், mind; **3.** அறிதல், sense of perception; **4.** சுவரணை, susceptibility; **5.** மனச்சாட்சி, conscience.

உரோமக் கொட்டு, தலையின் மயிர் உதிர்தல், falling off of the hair through affections of the scalp or through some enfeebled condition of health; rapid loss of hair — Trichorrea.

உரோமங் கொள்ளல், மயிரைப் புசித்தல், the practice of eating hair; hair-eating — Trichophagy; **2.** மயிர் வளர்தல், growing of hair.

உரோம சக்கிரி, சவுக்கு மரம், casuarina tree.

உரோம சங்காரி, உடம்பில் அதிகமாக முளைத்திருக்கு மயிரைப் போக்குவதற்காக வுபயோகிக்கு மருந்து, any substance or preparation used in removing the superfluous hair on the body — Hair-destroyer.

உரோம சத்தி, கெந்த மாஞ்சள், round zedoary — Curcuma aromatica. It strenghens the hair; **2.** அரைக்கிரை which see.

உரோம சயரோகம், தலைவழுக்கை, lack or loss of hair; baldness — Alopecia.

உரோம சல்லடை, see, *உரோமத் துவாரம்*

உரோமசன், see *உரோம ரிஷி.*

உரோம சாலியான், கக்கரி, cucumber — Cucumis sativus.

உரோமச் சங்கு, முட்சங்கு, chank or conch shell with thorn like points — Turbinella rapa.

உரோமச் சிலிர்ப்பு, மயிர்க் கூச்சு, a sensation in which hairs stand on end.

See *உரோம கூபம்.*

உரோமச் சுருளி, see *உரோம விருட்சம்.*

உரோமச் சுழி, மயிர்ச் சுழி, அதாவது மனிதர்களுக்கும், மிருகம், பறவை, முதலிய உயிர்ப் பிராணிகளுக்கும், உடம்பின் சில பாகங்களில், மயிர் வளையமிட்டிருத்தல், இதைச் சோதித்து, நன்மை, கெடுதி, அதிர்ஷ்டம் துர் அதிர்ஷ்டம் முதலியவைகளைக் குறிக்கலாம், a spiral growth of hair found at a particular spot on the surface of the body of both the human and the animal kingdoms and by examining it, good or evil, fortune or misfortune is said to be predicted.

உரோமச் செம்பு, மயிரி லிருந்து எடுக்கும் செம்பு, copper extracted from hair.

உரோமஞ் சிலிர்த்தல், see *உரோம கூபம்.*

உரோம தரு, see *உரோம விருட்சம்.*

உரோமத்தி விடை, மயிரி விடைத் துவாரம், the opening or the cavity in the hair.

உரோமத் துவாரம், மயிர்க்கால், pores of the skin through which hairs shoot out — Hair-follicle.

NOTE.— According to Tamil Medical science, it is calculated that there are about 3 1/2 crores of hair folicles in the human body.

உரோமத் தைலம், மயிரினின்று இறக்கிய தைலம், oil extracted from the hair; **2. மயிருக் கிடும் தைலம்,** hair-oil for the growth of hair.

உரோம நாக்கு, நாக்கில் முள் பாய்தல்; நாக்குச் சொரசொரப்பு, hairy state of the tongue due to a thickening of the papillae (small elevations on the tongue) — Trichoglossia.

உரோம நிவாரணி, மயிர்களை நீக்குந் தன்மையுள்ள வஸ்து, any application to remove the hair without injuring the skin and without smarting pain and irritation.

See *உரோம சங்காரி.*

உரோம நீர், வியர்வை நீர், perspired water; water secreted from the hair-folicles — Sweat; **2. அசுத்த சலம்,** dirty water.

உரோம பயம், மயிரைக் கண்டு திகிலடையுமோர் நோய், morbid dread of hair — Trichophobia.

உரோம புளகம், மயிர்ச் சிலிர்ப்பு, see *உரோம கூபம்.*

உரோம புளகிதம், see *உரோம கூபம்.*

உரோம பூமி, உடம்பின் மேற்றோல், the skin on the surface of the body.

உரோமப் பரப்பு, மயிர் அடர்த்தி, thick or close hair.

உரோமப் பரிட்சை, மயிரைச் சோதித்தல், examination of the hair — Trichoscopy.

உரோமப் பிளப்பு, see *உரோம வெடிப்பு.*

உரோமப் பைத்தியம், பைத்தியம் அல்லது சன்னி கொண்ட காலத்தில் தன் மயிரைப் பிய்த்துக் கொள்ளுதல், the pulling out of the hair by delirious or insane persons — Trichomania.

உரோமப் பொடிப்பு, see *உரோம கூபம்.*

உரோமப் போஷணம், எண்ணெய், தைலம் முதலியவைகளைத் தடவி மயிரை வளர்த்தல், applying hair oils to promote development and growth of hair; nutrition for the hair.

உரோமமது, சீமை சாராயம், foreign liquor formerly exported from Rome.

உரோமமுட்டி, புறங்கை நாறி, which see.

உரோமமுள்ளோன், உடம்பெல்லாம் மயிருள்ளவன், hairy man.

உரோம முறிவு, மயிரின் மிருதுத் தன்மையை இழந்து முறிதல், a condition in which hair becomes brittle and breaks off — Trichorexis.

உரோம முறைப்பு, மயிரின் நொய்மை, brittleness of the hair — Trichoclasis.

உரோம முனி, see *உரோம ரிஷி,* a Rishi or Prophet of immense age overgrown with hair.

உரோமம், *புற மயிர்,* the down of birds; **2.** *தலை மயிர்,* hair on the head; **3.** *உடம்பின் மயிர்,* the hair on the body; **4.** *மயிர்ப் பரப்பு,* thick or close hair; **5.** *வழலை,* an euphemistic name for fuller's earth.

உரோமம் சிலும்பெறிதல், *மயிர் சிலிர்த்தல்* see *உரோம கூபம்.*

உரோம ரஞ்சம், *மயிர் சிலிர்த்தல்,* see *உரோம கூபம்.*

உரோம ராசி, *மயிரொழுங்கு,* the order in which the hair is grown, see *உரோம ரேகை.*

உரோமரிஷி, *பதினெண் சித்தர்களி லொருவர், இவர் வாதம், வைத்தியம், யோகம், ஞானம் முதலிய தமிழ் நூற்களைச் செய்தவர். இவருக்கு உடம்பெல்லாம் மயிர் நிறைந்துள்ளதா லிப்பெயர். இவர் இப்பொழுதும் உயிரோடிப்பதாகக் கருதப்படும்,* one of the eighteen Siddhars mentioned in the Tamil Medical science. He is the author of many works in Tamil, on Alchemy, Medicine and Yoga philosophy. He is a celebrated Rishi blessed with exuberant or excessive growth of hair all over the body and a long age and is reputed to be still living.

உரோமரிஷி கற்பம், *உரோம ரிஷி காய கற்பத்துக்காக வேண்டி யுண்ட மயிலெச்சம்,* the excreta of the peacock taken in by a Siddha named Roma for the purpose of longevity.

உரோம ரேகை, *மயிரொழுங்கு,* the line of hair in females reaching up to the navel.

உரோம ரோகம், *மயிர்க் கால்களுக் கேற்படும் நோய்,* disease of the hair - follicles — Trichocryptosis; **2.** *மயிருக் கேற்படும் நோய்,* disease of the hair — Trichopathy; **3.** *பொதுவாக மயிருக்கு உண்டாகும் நோய்,* any disease of the hair — Trichonosis.

உரோம ரோசனை, *வயிறு அல்லது குடலுக்குள் ளுண்டாகும் மயிர் உருண்டை, இது சாதாரணமாக மருந் திட்டினால் ஏற்படுமென்று கருதப்படும்,* a hair-ball or a similar concretion found within the stomach or the intestines — Trichobezoar. It is generally believed to be due to the introduction of love-philter by jealous wives or husbands.

உரோமர் வேதை, *மயிலெச்சக் களங்க வேதை,* a process in alchemy followed by Roma, in which the excreta of the peacock is used as the chief ingredient.

உரோம லம்பம், *வண்டு,* beetle.

உரோம லவணம், *இலகு குணமுள்ள ஓர் பூர்வ வுப்பு,* a salt with light qualities in use formerly.

உரோமவல்லி, *காக்கணம்,* hair - creeper — Clitoria ternatea.

உரோமவழற்சி, *மயிர்க்காலுக்கேற்படும் தாபிதம்,* inflammation of the hair bulbs - trichitis.

உரோம வளர்த்தி, *மயிர் மிகுதியாக வள்ருதல்,* abnormal growth of hair — Trichosis.

உரோம விருட்சம், *மகா மூலிகைகள் இருபத்து மூன்றில் ஒன்று. இது காய கற்பத்துக் கேற்றது. இதற்கு அனேக சிறந்த குணங்களுண்டு, சூதத்தைக் கட்டும், வேருக்குள் பாஷாணம் சுத்தியாகும். இது அபூர்வமாக மலையில் முளைக்கும், இதற்குப் பல பெயர்களுண்டு.* this is an unknown tree said to be rarely found on mountain tops. It is classified as one of the twenty-three all-healing drugs of high potency, capable of rejuvenating the system. It has also other marvellous virtues and is capable of consolidating mercury. The root is useful for cleaning or purifying arsenic and arsenical poisons. It is a rare plant grown on hills and is known by several names.

உரோம வீருகம், *கல்லத்தி,* stone-fig — Ficus altissima.

உரோம வுள்ளம், *மயிரைப் போல் மேலே முசுமுசுப்பாயுள்ள இருதயம் அல்லது தாமரைக் காய்,* a hairy appearance upon the heart; hairy heart — Trichocardia.

உரோம வெடிப்பு, *மயிர் இரண்டாகப் பிளத்தல்,* splitting of the hairs — Trichoschisis; **2.** *மயிர் முனை பலவாகப் பிளத்தல்,* a hair split at the end in a star like form — Stellate hair.

உரோம வேங்கை, *உதிர வேங்கை,* which see.

உரோம வேதை, *தலை மயிரினின்று செம்பெடுத்துப் பிறகு வாதத்திற் குபயோகப்படுத்து முறை,* a process of extracting copper (pure) from the hair and then using it for transmuting baser metals into gold.

உரோமன், உதிர வேங்கை, which see.

உரோமன் பொன், உரோமன் என்னும் மூலிகையைக் கொண்டு செய்யும் பொன், இப்பொன் தலையில் இருக்க, வெட்டுக் குத்து ஏறாது, வில் அம்பு பாயாது, பூத கணம் நாடாது எனக் கருதப்படும். an alchemical gold obtained by a secret process known only to Siddhars. It is said to be derived from the all healing drug named 'Roman'. It is believed that when worn on the body, it has a power of resisting any power or force likely to cause danger to life such as, infliction of wounds by stabbing with a knife or by the shooting of arrows, or by the mischief of evil spirits etc.

உரோ மாஞ்சம், உரோ மாஞ்சலி, உரோ மாஞ்சிதம் உரோமப் பொடிப்பு.

உரோமப் புளகம், erection of the hairs of the body by emotion.

உரோமாதிக்கம், அதிகமாகவும் நீளமாகவும் மயிர் வளருதல், excessive growth of hair; long and luxurious growth of hair — Hypertrichosis.

உரோமாதீதம், see உரோ மாதிக்கம்.

உரோமாம்பரம், கம்பளம், blanket.

உரோமாரிஷம், மயிர்ப் புளகம், see உரோ மாஞ்சிதம்.

உரோமாவலி, see உரோம ரேகை.

உரோமி, மயிர்ச்சிகைப் பூண்டு, pea-cock's crest — Actiniopteris dichotoma.

உரோமிகி, see உரோமி.

உரோருகம், முலை, woman's breast.

உரோவி பந்தம், மார்பில் ஏற்படும் சங்கடம், oppressive feeling experienced in the chest; 2. காச நோய், asthma.

உலகங் காத்தான், அவுரி, indigo plant — Indigofera tinctoria.

உலக சஞ்சாரம், இப்பூமி முழுதும் சுற்றி வருதல், சித்தர்கள் இரசக்குளிகை பூண்டு, ஆகாய மார்க்கத்தில் வெகு விரைவாகச் சுற்றி வருவார்கள், travelling round the world; this can be done ony by Siddhars who travel in the aerial regions with the aid of animated mercurial pills, the preparation of which is known only to themselves.

உலக ஞானம், உலக அனுபவம், worldly wisdom; 2. கருவி நூல் அறிவு, secular knowledge.

உலகத்தார், உலகப் பற்றுடையார், those devoting their lives to the worldly enjoyments; materialists.

உலக நாபி, கோழி யவரைக் கொடி, fowl's bean — Canavalia ensiformis.

உலகப் பற்று, பூலோக பாசம், attachment to the world.

உலக மாதா, உமை Uma, the Mother of the Universe; 2. சிகப்பு மணித் தக்காளி, a red variety of night shade — Solanum rubrum.

உலகம், சிவ ராசிகம், (figuratively) the created beings; all creatures in the world including human beings; 2. ஆகாயம், ethereal regions.

உலக லட்சணவான், சோசியன், an astro-longer.

உலக வாஞ்சை, உலக விஷயங்களி லுண்டான பற்று, burning desire for worldly enjoyments.

உலக வாழ்வு, இக வாழ்வு, material existence as opposed to spiritual one.

உலகு, ஆகாயம், sky; the ethereal region; 2. பூமி, earth.

உலகுலம், திப்பிலி, long-pepper — Piper longum; 2. திரிபலை, the three myrobalans used in Indian medicine.

உலகோத்தம ரசம், நகம், உந்தி, முதலிய விடங்களில் தடவினாலும் புட்பச் செண்டில் தெளித்து முகர்ந்தாலும், பேதியாகுந் தன்மை வாய்ந்த மருந்து, a medicinal preparation having the power to bring about purging on an application of it to the nails, the navel and the other parts of the body or on smelling or inhaling it after strewing or sprinkling it on a bouquet or a bunch of flowers.

உலக்கை, மருந்திடிக்கும் ஓர் மரத் தண்டம், a long wooden instrument for pounding medicine or for bruising herbs etc, in a mortar; 2. வெருகன் கிழங்கு, a long bulbous root of the plant — Arum macrorhizon; 3. அழிவு, சாவு, death; disaster; 4. இருப்புத் தண்டு, an iron pounder; 5. அரிசி குற்று முலக்கை, a pestle; a rice pounder.

உலக்கைக் கணை, தேய்ந்து போன வுலக்கை நுணி, the worn-out end of a pestle; 2. உலக்கைப் பூண், the ferrule of a pestle.

உலக்கைக் கனி, தேங்காய், cocoanut — Cocos nucifera.

உலக்கைப் பாலை, ஓர்வகைப் பாலை மரம், Indian mimusops — Mimusops hexandra.

உலக்கைப் பூண்டு, மரவட்டை, wood-louse — Millepedes.

உலக்கை வள்ளி, உலக்கையைப் போல் நீண்ட வள்ளிக் கிழங்கு, a long and stick sweet potato resembling a pestle — Dioscoria sativa.

உலங்கலம், கற் பாத்திரம், stone - vessel.

உலங் காரணை, அவுரி, Indigo plant — Indigofera tinctoria.

உலங் காரை, உருத்தி ராட்சம், wild olive tree; Paralysis seed tree — Eleocarpus serratus.

உலங்கு, கொசுகு, mosquito — Calicidae.

உலண்டங் கொல்லி, புழுக் கொல்லி, a plant whose medicinal effects counteract the poison of worms, bees etc. — Aristolochia indica.

உலண்டம், கோற் புழு, case-worm; 2. பட்டுப் பூச்சி, silk - worm; 3. பறவைப் புழு, a worm which is converted or metamorphosed into an insect — Caseworm. It is found on branches of trees; a worm which becomes a chrysalis.

உலண்டு, see உலண்டம்.

உலத்தல், குறைதல், to become lessened; being wasted; 2. சாதல், to die; 3. நீங்குதல், to leave.

உலத்தி சூலை, see உலர்த்து சூலை.

உலப்பு, அழிவு, wasting; 2. சாவு, death; 3. கேடு, injury; 4. அளவு, limit; 5. குறைவு, deficiency or defect.

உல மரல், துன்பம், suffering; affliction; 2. அச்சக் குறிப்பு, manifesting symptoms of fear.

உலம், திரண்ட கல், a large pebble; 2. தானாய் சமைந்த லிங்கம், a cylindrical stone developed like a Lingam.

உலம் பேசம், காட்டு முல்லை, wild jasmine — Jasminum angustifolium.

உலரல், see, உலருதல்.

உலராங் குலை, காயாங் குலை, an unknown plant?

உலரி, ஒலரி யென்னும் ஓர்வகை ஆற்று மீன், a kind of frest - water fish.

உலருதல், காய்தல், drying, withering; 2. வாடுதல், pining away; 3. இளைத்தல், becoming emaciated.

உலர்ச்சி, பசி, நோய், முதலியவைகளால் உடம்பு வாட்ட மடைதல், emaciated condition of the system through hunger, disease etc.

உலர் தல், see உலருதல்.

உலர் தேலம், உலர்த்தும் எண்ணெய், drying oil; any ointment for healing.

உலர்த்தல், உலரச் செய்தல், causing to dry; to remove moisture from.

உலர்த்தி, see உலர்ச்சி; 2. வாட்ட மடையும் படிச்செய்வது; that which tends to emaciate the system.

உலர்த்திச் சூலை, see உலர்த்து சூலை.

உலர்த்து சூலை, பித்த வுஷ்ணத்தினாலும், வறட்சி, குன்மம், முதலியவைகளினாலு முடம்பு வீங்கி வற்றி உளைக்கச் செய்வதுடன் குத்தலையும் வலியையு முண்டாக்கு மோர் வகைச் சூலை நோய், a constitutional disease arising from the heated condition of the aggravated bile, dryness of the skin and mucous membrance through excess of heat, or dyspeptic or other digestive disorders. It is marked by swelling, emaciation, piercing pain etc. 2. பித்த உஷ்ணத்தினால் உடம்பில் வறட்சி கண்டு, அதனால் மூட்டுகளிலுள்ள பசையை வற்றச் செய்து, வீக்கத்தையும், குத்தலையு முண்டாக்கி, அப்பாகங்களைச் சூம்பச் செய்யும் சூலை நோய், a painful disease of the joints characterised by acute inflammation and swelling of the part, followed by gradual and progressive atrophy (wasting of the muscles) of the joint structures.

It is said to be due to a constitutional disease arising from the absorpton of the fluid secreted therein owing to the excessive heat caused by the deranged condition of bile in the system.

e.f. Dry joint.

NOTE.— In women, it is caused by irregularity of menstruation.

உலர்த் துதல், உலரச் செய்தல், to cause to dry.

உலர்ந்த இஞ்சி, சுக்கு, dried ginger.

உலர்ந்த இருமல், வறட்சியினா லுண்டாகு மிருமல், dry cough.

உலர்ந்த இறைச்சி, உப்புக் கண்டம், dried or seasoned meat.

உலர்ந்த கொடி முந்திரி, திராட்சை, raisins or dried grapes — Uva.

உலர்ந்த சரக்கு, காய வைத்த பச்சிலை மூலிகைகள், green drugs which are dried up and sold in bazaars; **2. கடைச் சரக்கு,** bazaar drug.

உலர்ந்த திராட்சை, பத மிட்ட திராட்சை, commercial currants or raisins — Uva passae minores.

உலர்ந்த தேங்காய், கொப்பரைத் தேங்காய், dried cocoanut

உலர்ந்த நா, வறண்ட நாக்கு, parched tongue.

உலர்ந்த பச்சிலை, see **உலர்ந்த சரக்கு; 2. காயவைத்த இலை,** dried up herbaceous leaves.

உலர்ந்த பூடு, காய்ந்த பூடு, a dried medicinal plant; bazaar drug. See **உலர்ந்த சரக்கு.**

உலர்ந்த பேரிந்து, கர்ச்சூரம், dried dates.

உலர்ந்த போசனம், ஈர மற்ற வுணவைப் புசித்தல், the eating of dry food — Xerophagia.

உலர்ந்த மீன், கருவாடு, dried fish.

உலர்ந்த மூலி, see **உலர்ந்த பூடு.**

உலர்ந்தம், தண்டு, stalk.

உலர்ப் பெலி, ஓர் வகை எலி, a species of rat.

உலர் மரம், பட்டுப் போன மரம், a lifeless or decayed tree.

உலவ மரம், see **இலவ மரம்.**

உல வாசிகை, காயா வரசு, a peepful tree not bearing fruit.

உலவை, ஓடைக் கொடி, oval-leaved wheel creeper — Combretum ovalifolium alias C.laxum; **2. காற்று,** wind; **3. கிலுகிலுப்பை,** rattle-wort — Crotolaria verrucosa; **4. தழை,** a green twig with leaves; **5. விலங்கின் கொம்பு,** horn; tusk; **6. குடைவேல்,** umbrella thorn-babool — Acacia planifrons; **7. வள்ளிக் கொடி,** sweet potato creeper — Discorea sativa digitata; **8. வாத ரோகம்,** a common term for gout, rheumatism, paralysis etc; **9. ஒடை,** oval leaved wheel creeper.

உலவைச் சீவியம், கருவீழி,

உலவை நாசி, திப்பிலி, lond pepper; **2. திப்பிலி மூலம்,** the root of long-pepper — Piper longum.

உலறல், see **உலருதல்.** c.f. **உலரல்.**

உலறுதல், காய்தல், whithering.

உலாகம், கூகை, hawk.

உலா குணம், see **உலாகுமம்.**

உலா குதம், கருவாப்பட்டை, cinnaman — Cinnamomum zeylanicum.

உலாகுமம், மனோசிலை, arsenic sulphide — Realgar.

உலாங்கம், see **உலாகுமம்.**

உலாங்கிலி, காவட்டம் புல், citronella grass — Andropogen nardus; **2. கருந் தும்பை,** black leucas — Leucas genus.

உலாங்கு, கிலு கிலுப்பை, rattle-wort — Crotolaria verrucosa; **2. கொம்பன் பாகல்,** spiked bitter cucumber — Momordica charantia. It is so called from the shape of the fruit like a horn; **3. காவட்டம் புல்,** citronella grass — Andropogon nardus. See **உலாங்கிலி.**

உலாங்குசம், கழற்சிக்காய், Bondue nut — Caesalpinia bonducella.

உலாங்குலி, see **உலாங்கிலி; 2. பெருஞ் சீரகம்,** chinese anise — Illecium anisatum.

உலாஞ்சல், கிறுகிறுத்தல், having a whirling or giddy sensation; . **தலை சுற்றல்,** dizziness or reeling of the head; **3. தள்ளாடல்,** to stagger or sway in walking.

உலாஞ்சுதல், see **உலாஞ்சல்.**

உலாதை, சிலந்திப் பூச்சி, spider.

உலாத்த கண்டன், ஓனான், a kind of lizard.

உலாத்தல், உண்ட பின் உலாத்தல், to take an easy and light walk after meals; **2. சிறு நடை கொள்ளல்,** walk taken by a patient in convalascent state.

உலாத்தி, see **ஊழலத்தி.**

உலாத்து, உலாவுகை, walking up and down leisurely.

உலாந்தா, மேனாட்டினோர் தேசம் அல்லது நாடு, a country in the west — Holland.

உலாந்தா கமலம், உலாந்தா தேசத்து மட்ட வயிரம், a cut diamond of Holland of an inferior quality.

உலாந்தா லிங்கம், பம்பாய் லிங்கம், இது உலாந்தா தேசத்தினின்று ஏற்று மதியாகும் சரக்கு. இது இரசம் நிறைந்து கருஞ் சிவப்பு நிறம்

வாய்ந்து, ஊசிக் கம்பிகள் போல ஈர்க்குக எமைந்துள்ளது. Bombay vermilion — It is prepared in Holland, and exported to India — Red sulphuret of mercury. It contains a large quantity of mercury and as such is considered highly useful in medicine. It is dark red in colour and is artificially prepared from sulphur and mercury. It consists of needle - shaped fibres with a shining surface.

உலாமா, கொழுமிச்சை, citron — Citrus aurantium (Bigaradia); **2. கடுகு ரோகிணி,** Christmus rose — Helleborus niger.

உலா வரிசி, வெட் பாலரிசி, blue dyeing rose-bay — Wrightia tinctoria.

உலாவல், மெல்ல நடத்தல், light walk; to walk about after sickness.

உலாவ விம்பம், அத்தினி சாதியாகிய பெண் வகை நான்கினுள் ஒன்று, one of the four classes of women divided according to lust.

உலிமனி, நாயுருவி, Indian burr — Achyranthes aspera.

உலிமிடி, மாவிலிங்கை, garlic pear — Crataeva religiosa.

உலிமிடிச் சக்கை, மாவிலிங்கப் பட்டை, the bark of the garlic pear tree.

உலிமிடி வேர், மாவிலிங்க வேர், the root of garlic pear tree.

உலிறகள், வெண்கலம், any amalgam of zinc and copper — Bell metal; white copper or Queen's metal.

உலுகத் தண்டு, கிரைத் தண்டு, a culinary vegetable of Amaranthus genus. The long and stout stalk of it is used in curry.

உலுக மாலினம், நோயை யுண்டாக்கும் ஓர் பேய், the name of a demon causing diseases.

உலுகம், கிரைச் செடி, vegetable greens — Amaranthus (genus) It is synonymous with greens of all sorts.

உலுக்கல், உலுக்குதல், அசையச் செய்தல், causing to move; **2. நடுங்கச் செய்தல்,** causing to shiver or tremble as in ague.

உலுபம், ஓர்வகைப் புல், a species of grass.

உலுபேனா, பாலுடன் கலந்த, முலாம் பழம், வாழைப் பழம், இவைகளின் ரசம் அடங்கிய உண்கலம், a particular dish consisting of milk mixed with the juice of melon, bananas etc.

உலுப்பை, சிறுகாய், unripe fruits in common.

உலுலாயம், காட்டெருமை, wild buffalo.

உலுவம், வெந்தயம், fenugreek or dill-seed — Trigonella fenugraecum.

உலுவா, வெந்தயம், see **உலுவம்; 2. பெருஞ்சீரகம்** — chinese anise — Illecium anisatum.

உலுவாச கெந்தி, தைவேளை, a plant — Cleome felina.

உலுவா வரிசி, பெருஞ்சீரகம், chinese anise — Illecium anisatum; **2. வெந்தயம்,** see **உலுவா.**

உலு வாவிகம், கறிவேப்பிலை — curry-leaf — Murraya Koenigii.

உலுவிந்தை, see **உலு வேந்தம்.**

உலு வேந்தம், ஓர் பூடு, East coast cherry nutmeg — Polyalthia Korinti.

உலூகசம், see **உலூகம்.**

உலூகம், குங்கிலியம், a resinous gum called Bdellium — Shorea robusta; **2. பழந்தின்னி வௌவால்,** bald owls which fly in the night — Pteropus edwardsi; **3. கோட்டான்,** a large booting owl; rock-horned owl — Urrua bengalensis alias U. cavearia; **4. கூஜா,** an earthen bottle for holding water — Godlet; **5. சாக் குருவி,** bird of ill omen; Indian Screech-owl — Strix javanica.

உலூகலம், குங்கிலியம், see **உலூகம்; 2. குங்குமப்பூ,** European saffron — Crocus sativus; **3. உரல்,** wooden mortar.

உலூ கல்கம், குங்கிலியம், see **உலூகம்.**

உலூகாரி, காக்கை, crow.

உலூதம், சிலந்திப்பூச்சி, spider.

உலூதை, see **உலூதம்.**

உலூபி, ஓர் வகை மீன், a kind of fish.

உலேக வாதம், கண் பூ, a disease of the eye — Cataract.

உலை, நீருலை, hot water intended for cooking rice, **2. கொல்லனுலை,** a furnace in a black-smith's forge; **3. நெருப்புள்ள அடுப்பு,** fire place for cooking; **4. பாகஞ் செய்ய**

வைக்கும் நீருலை, a pot of water placed upon a hearth in order to boil rice. 5. மன நடுக்கம், agitation of the mind.

உலைகுழல், துருத்தி, blow-pipe; the bellows of a forge.

உலைக் களம், கொல்ல ஹுலைக்கூடம், a black smith's workshop or forge; 2. அடுப்பு, oven.

உலைக்காலி, முடவாட்டுக் கால், a plant (unidentified)

உலைதல், நிலைகுலைதல், to degenerate in morals or character; 2. மனங் கலங்கல், to be agitated in mind; 3. சீர் குலைதல், to become deranged; 4. பலங் குறைதல், to become weakened; 5. அலைதல், to wander about.

உலைத் தண்ணீர், கொல்ல ஹுலையில், காய்ந்த இரும்பைத் தோய்க்குந் தண்ணீர், water in a black-smith's forge, intended for dipping hot iron; the water with which the smith besprinkles the fire; 2. சோறு சமைப்பதற்குக் கொதிக்க வைக்குந் தண்ணீர், a pot of water boiled for cooking rice; water to boil anything for food.

உலைத்தல், வருத்தல், to trouble; causing to suffer; 2. அழித்தல், to destroy.

உலைத் துருத்தி, see உலைக் குழல்.

உலை நீர், see உலைத் தண்ணீர்.

உலைந்த . பழம், அளிந்த பழம், over-ripe fruit.

உலைப்பு, அழிவு, destruction; 2. வருத்தம் suffering.

உலைப் பெலி, கடிப்பதனால் துன்பத்தை யுண்டாக்கும் எலி, rat the bite of which brings about suffering.

உலை முகத்திற் துரும்பிடல், தகிக்கச் செய்தல், தகித்தல். இது அடியிற் கண்ட செய்யுளால் விளங்கும்.

"உலை முகத்திற் துரும்பை விட்ட வாறு போல
உழன்று வரும் நோயெல்லாம் ஒழிந்து போகும்"

devouring easily as fire does in a furnace. It is taken as a comparison for curing diseases instantaneously.

உலை முகம், கொல்ல ஹுலை வாயில், the fire in the furnace of a smith's workshop; 2. கம்மாளன் உலை, the fire-place of a gold smith's shop.

உலையமுது, உலைத் தண்ணீர், which see.

உலையி லூதல், உலையி லேற்றல், see உலையில் வைத்தூதல்.

உலையில் வைத்தூதல், கொல்ல ஹுலையில் வைத்துக் காய்ச்சல், blowing any metal in a furnace; 2. பொன் வெள்ளியை உருக்க அல்லது மருந்தை நீராக்க வேண்டி, கம்மாளன் குமிட்டிச் சட்டியில் வைத்தூதல். blowing in the fire place of a goldsmith, substances like gold, silver, copper etc. for purposes of melting and also medicinal and metallic preparations secured in a crucible for purposes of calcining them.

உலையிற் பிணந் தின்னி, மாமிச பேதி, a kind of ore capable of converting flesh into a liquid — A solvent of flesh. It is classified as one of the 120 kinds of natural substance and minerals described in the Tamil Medical science.

உலைவு, நடுக்கம், trembling; 2. அலைவு, restlessness of mind; 3. அழிவு destruction; 4. சஞ்சலம், agitation of mind; 5. ஊக்கக் குறைவு, enfeebled state of the intellect.

உலொட லொட்டை யாதல், பலவீன மடைந்து உடம்பு மெலிதல், growing weak and lean by loosing flesh and strength as in chronic dysentery.

உலொடுக்கு விழல், குழி விழல், depression as of eyes; 2. நெட்டி முறிதல், a noise made in walking from weakness.

உலொட்டி, வெறிமருந்து, intoxicating drug; 2. கள்ளுக் குடுவை, toddy-pot.

உலொட்டிக் காரன், உலொட்டி மூஞ்சி, குடியன், drunkard.

உலோக கற்ப ஞானி, கஞ்சா, gunjah — Cannabis sativa.

உலோக காந்தம், இயற்கைக் காந்தம், natural load-stone as opposed to magnet artificially made.

உலோகக் கட்டி, உலோகங் கலந்த மண் கட்டி, a mineral substance consisting of a metal and other substances in combination — Metalliferous mineral, 2. பஞ்ச லோகத்தையும் உருக்கி வார்த்த கட்டி, an alloy of five metals taken in equal proportions and cast into a mould; 3. இரும்புக் கட்டி, a lump or mass of iron.

உலோகக் கலப்பு, பலவகை உலோகங்களின் சேர்மானம், a mixture of differnt metals or metallic compounds by fusion — Alloy.

உலோகக் கலவை, see உலோகக் கலப்பு.

உலோகக் களிம்பு, சாதாரணமாக வுலோகங்களின் மேல்படியும் மாசு, a deposit formed usually on surfaces of metals exposed to air, heat etc. for a long time; oxide or oxide of any metal — Aerugo; 2. இரும்புத்துரு, rust of iron; 3. செம்புக் களிம்பு, rust of copper; sub-acetate of copper — Verdigris.

உலோகங்களை பற்பமாக்கி, காட்டுத் தீ, a great fire useful for calcining metals.

உலோகங்களை பேதிப் பாக்கி, குழலாதொண்டை, common caper — Capparis aphylla.

உலோக சத்தி, கோழித்தலை கந்தகம்.

உலோக சத்துரு, கற்பரி பாஷாணம், a kind of arsenic.

உலோக சித்து, வச்சிரக் கல், a precious stone; one of the nine gems; Diamond — Adamantine.

உலோக சிப்பி, சிப்பி முத்து, oyster-pearl, as distinguised from pearls derived from other sources as described in the Tamil Medical science.

உலோக சுத்தி, இரும்பைக் கலப்பில்லாமற் செய்வது, cleaning the impurities of iron; 2. பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்பட்ட வுலோகங்களை, வைத்திய முறைப்படிச் சுத்தி செய்து, மருந்திற் குபயோகித்ததற்குக் களிம்பு முதலியவைகளை அகற்றல், cleaning of minerals which are dug out from the earth, as per methods described in the Tamil Medical science before they are introduced or used in medicine; 3. பொன், வெள்ளி, செம்பு, முதலியவைகளை மூலிகை சுத்தி, ஊத்து முறை, எரிப்பு, புடம் முதலியவைகளால் சுத்தி செய்தல், (In alchemy) the process of refining gold, silver, copper, lead etc., by different methods such as cleansing with the essence of drugs, melting by blowing or burning, smelting, or by cupellation.

உலோகச் செந்தூரம், இரும்புத தூளைக் கொண்டு செய்யுமோர் வகைச் செந்தூரம், a calcined red-oxide of iron prepared by Veidyans.

உலோகதம், உலோகத் திராவகம், which see.

உலோக தாது, துத்த பாஷாணம், a kind of arsenic; a mineral poison; பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்படும் உலோகங்கள், metallic ores dug out from the earth; natural metals as distinguished from artificial or wrought metals; 3. வெட்டி யெடுத்த இரும்பு, iron ore.

உலோகதிதம், புன்கு, poonga oil tree — Pongamia glabra.

உலோகத்திரம், வெள்ளிலோத்திரம், the bark of a tree — Simplaecos racemosa.

NOTE.— It is generally believed to be the bark of Feronia elephantum.

உலோகத் திராவகம், துரிசைப் பொரியும்படி வறுத்து, 10. பலம் எடுத்துக் கொண்டு அத்துடன் வெடியுப்பு 10 பலம், சவுட்டுப்பு 20 பலம், சீனம், 10 பலம், சாரம், 5 பலம், ஆக 55 பலத்தைப் பொடியாகச் செய்து ஒரு குப்பிக்குள் ளடைத்து (அரைவாசி யளவாக) கழுத்தின் மேல் மற்றொரு குப்பியை வைத்து மேற்குப்பியின் விலாவில் தமரைப் போட்டுக் குப்பிகளின் நாளம் சமனொக்கச் சீலை செய்து, தமரின் சந்து காணாமல் மண்ணைப் பூசி, அடுப்பி லேற்றிய, பாண்டத்துள்ளே மணலைப் போட்டு, குப்பியை யதற்குள் வைத்துத் தோன்றியபடி மூடிக் குப்பியின் மூக்கி னருகில் பீங்கான் கிண்ணியை வைத்திட குப்பியின் நாளம் வழியாய்ப் புகை யோடி ஒக்கக் கட்டி சலம் வீழும். புகைநின்ற வுடனே திராவகம், வருவதும் நின்று விடும். இதுதான் உலோகத் திராவகம். இதற்கு உலோக நீர், என்றும் மற்றொரு பெயர். The following is the method of preparing the above mentioned acid:—

10 palams of copper acetate is to be taken and fried in an earthen pot till it is parched; Then nitre 10 palams, sodium salt *(சவுட்டுப்பு)* 20 palams, alum 10 palams, sal ammoniac 5 palams, are to be added to it and the whole is to be powdered so as to be well mixed up. A bottle is then to be taken and the said powder put into it so as to be half full.

Another bottle provided with a hole on one of its sides is to be selected and placed with the mouth downwards over the mouth of this bottle containing the powder, so as to fit each other properly. The part where the mouths of the two bottles meet

is to be well-coated over with soft clay and afterwards bound round with piles of coarse cloth so as to make the months air-tight. A tube is to be fixed on to the hole of the bottle placed inversely and this also has to be rendered air-tight with a coating of clay and coarse cloth as mentioned above.

An open, hollow earthen vessel is now to be taken and the whole appratus placed into this and fresh sand is to be heaped up all around and in the bottom as well, up to the neck of the lower bottle; after this, the said earthen vessel is to be placed gently upon a strong fire. A porcelain receiver is then to be placed at the end of the tube projecting from the bottle above. As the tube, through which the smoke, passes is cooled, the acid will be found collected in the receiver.

உலோகத்தைச் செந்தூரமாக்கி, **சிறு கல்லுரி**, an unknown plant capable of reducing iron and other metals into red oxides.

உலோகத்தைத் தகர்த்து சாடுமாருதி, **பொன் நிமிளை**, iron-pyrites occurring in dark yellow nodules. It is a hard mineral of a brass - yellow colour capable of reducing iron into a useful compound.

உலோகத்தை நயத்த வேகன், **பலண்டுறுக பாஷாணம்**, a kind of native arsenic.

உலோகத்தை பேதிக்குங் கன்னி, **ஏகம்பச் சாரம்**, a salt used in alchemy. It is so called owing to its peculiar property of acting on metals and metallic compounds.

உலோகத்தைப் பளிப்பிடக் கூர்மை, **பிடா லவணம்**, a prepared salt used in Alchemy.

உலோக நாத மூலி, **சிறு தும்மட்டி**, a plant whose seeds are medicinal — A species of Bryonia.

உலோக நிமிளை, **நால்வகை நிமிளைகளி லொன்று. இதனால் இரும்பு குருவாகும்**, one of the four kinds of bismuth described in Tamil Medical science. It is said that it is useful in alchemical preparations; **2. இரும்பு நிமிளை**, iron-pyrites.

உலோக நீர், see **உலோகத் திராவகம்**, **2. இரும்புச் சத்துக் கலந்த தண்ணீர்**, water containing or charged with iron — Chalybeate.

உலோக நீறு, **இரும்பு பற்பம்**, calcined iron oxide; **2. பொதுவாக உலோகங்களின் பற்பம்**, any calcined oxide of metal in general.

உலோக பஞ்ச பூதம், **பஞ்ச பூதக் கூறாகிய வுலோக வகைகள்**; the five elemental qualities attributed to the five metals—

பிருதிவி, earth — **தங்கம், பொன்**, gold
அப்பு, water — **இரும்பு**, Iron.
தேயு, fire — **செம்பு**, copper.
வாயு, wind — **காரீயம்**, black lead.
ஆகாசம், sky — **நாகம்**, zinc.

உலோக பத்திரம், **பனைமரம்**, palmyra tree — Borassus flabelliformis.

உலோக பந்தனி, **மான் செவிக் கள்ளி**, spiral leafy milk hedge — Euphorbia Neriifolia alias E.Nivulia.

உலோக பற்பம், **அய வெள்ளை அல்லது அய பற்பம். இது இரத்தத்தை சுத்தி பண்ணி, உடம்பைப் பலப்படுத்தும்**, a cacined oxide of iron contemplated in Tamil Medicine. It is capable of purifying the blood and strengthening the system; **2. உலோகங்களின் பற்பம்**, a common term for any oxide of metal.

உலோக பாதம், **கொசுத் திராவகம்**, see **அவலந்தி**.

உலோக பாந்தவன், **உலோகத்திற்குப் பந்தத்தைப் போல் வெளிச்சத்தைக் கொடுக்கும் சூரியன்**, the sun which gives to the world light, compared to a torch light.

உலோக பாய்ச்சல், **வேதை மருந்துகளை உலோகத்தின் பேரில் உருக்கு முகத்திற் கொடுத்துக் கலக்கும்படிச் செய்து அவ்வுலோகத்தைப் பொன்னாக மாற்றுதல்**, the process of transmuting inferior metals into gold by introducing or adding alchemical compounds to the metal under experiment while in a state of fusion.

உலோக மணல், **இரும்பு மணல்**, iron sand or iron-ore; **2. கரு மணல்**, black sand; **3. மண் கலந்த வுலோக வகைகள்**, a common term for metallic ores.

உலோக மத்தம், **ஓமம்**, bjshop's weel — Sison ammi.

உலோக மாரணம், **வாதத்திற்காக வேண்டி உலோகங்களை மடியச் செய்தல், இது அடியிற் கண்டபடி ஒவ்வொன்றும் பிரிதொரு மருந்தினால் மடியும்**, (In Alchemy) the process of killing or otherwise altering the physical qualities of metals without interfering in anyway, with their potencies or alchemical properties for purposes of converting them into gold. The following are

examples of metals likely tobe deprived of their physical qualities by the action of the different substances set opposite to their names:—

1. வெள்ளீயம், தாளகத்தால் மாண்டு போம், tin is deprived of its physical qualities by the action of orpiment.

2. காரீயம், மனோசிலையால் மாண்டுபோம், lead — by the action of realgar.

3. உருக்கு, இலிங்கத்தால் மாண்டு போம், steel-by the action of vermilion.

4. தாம்பிரம், கெந்தகத்தால் மாண்டு போம், copper — by the action of sulphur.

5. வெள்ளி, மாட்சிகத்தால், மாண்டுபோம், silver — by that of pyrites.

6. பொன், நிமிளையினால் மாண்டு போம், gold — by the action of bismuth.

உலோக முசிக்கல், உலோகங்களைக் களிம்பு முதலிய மாசுகளி னின்றும் பிரித் தெடுக்க வேண்டி, உலைக் களத்தில் வைத்துருகும்படி ஊதுதல், melting or fusing metallic ores for the purpose of separating the metal from the dross in a furnace, with special agents — Smelting.

உலோகம், பலவகைப் பிரிவினையுடைய வுலோக வகை, a common term for different classifications of metals (5,9 or 11 kinds as the case may be); 2. பஞ்சலோகம், the five ordinary metals such as, gold, silver, copper, iron, lead or tin; 3. தாதுப் பொருள், metal in general; 4. பூமி, earth; 5. எழுவகை யுலோகங்கள், the seven worlds contemplated in the Hindu Mythology; 6. இரும்பு, a term peculiar to iron; 7. இரத்தம், blood; 8. அகில மரம், which see; 9. மனிதர், human being.

NOTE.— The differnt ways in which the minerals are classified are as under:—

(a) பஞ்சலோகம், அவைகளாவன: — the five minerals (metals) and they are:—

1. பொன் — Gold.
2. வெள்ளி — Silver.
3. செம்பு — Copper.
4. இரும்பு — Iron
5. ஈயம் — Lead.

(b) சப்த லோகம் — ஏழு வகை உலோகங்கள். அவைகளாவன:- மேற்சொன்ன ஐந்தும் அவைகளுடன் வெண்கலம், தரா ஆக வேழு, the seven kinds of minerals, and they are:— the above five kinds + Bronze and Tara (தராமதுகம் which is an alloy of copper and zinc)

(c) நவலோகம் — ஒன்பது உலோகங்கள் அவைகளாவன:— the nine kinds of minerals and they are:-

1. தமனியம் (பொன்), gold.
2. இரும்பு iron.
3. தாமிரம் (செம்பு) copper.
4. ஈயம், lead.
5. வெள்ளி, silver.
6. மதுகம், (தரா) an alloy of copper and zinc.
7. இரதி (பித்தளை), brass.
8. நாகம், zinc.
9. கஞ்சம் (வெண்கலம்) bronze.

உலோகம் பழுத்தல், இரும்பு, செம்பு முதலிய வுலோகங்கள் பொன்னாக மாறுதல், change or conversion or transmutation of inferior metals such as iron, copper etc. into gold; 2. பொன் பழுத்தல், refining gold to a yellow colour.

உலோக ரஞ்சனம், நீலாஞ்சனக் கல், blue vitriol — Sulphate of copper; 2. அஞ்சனக் கல், sulpheret of antimony — Antimonium sulphuratum.

உலோக ரேட்சை, தன்னைப் போல் மற்றவர்களையும் பார்த்தல், treating others on the same level as self.

உலோகலன், சுத்தமாகப் பேசாதவன், one who does not talk clearly.

உலோக வாதி, இல்லறத்தி லிருந்து கொண்டு வாதம் செய்வோன், one who practices alchemy in his domestic or family life.

உலோக விருட்டம், கழுகு, eagle; 2. பருந்து hawk.

உலோக விரும்பு, உலோகத்தைச் சார்ந்த இரும்பு, metallic iron.

உலோக வேதிச்சி, கருநொச்சி, three-leaved chaste tree — Vitex trifolia.

NOTE.— This Botanical name does not apply to this plant as contemplated by the Tamil Medical Science, for the reason that the latter is rare and useful in Alchemy.

உலோக வேதி யாக்கி, தொட்டி பாஷாணம், a kind of prepared

arsenic — Red arsenic. It is so called from its virtue of transmuting metals.

உலே காசவம், *(உலோகம் + ஆசவம்)* அயப் பொடியோடு மற்றக் கடைச் சரக்குகளையும் கலந்து ஆயுள்வேத முறைப்படிப் புளிக்க வைத்துத் தயாரிக்கு மோர் வகை ஆசவம், இது அடியிற் கண்டபடி தயாரிக்கப்படும், அயப் பொடியுடன் திரிகடுகு, ஓமம், வாய் விளங்கம், கோரைக் கிழங்கு, முதலிய கடைச் சரக்குகளையும் சேர்த்திடித்து அத்துடன் காட்டத்திப் பூவும், பழைய வெல்லமுங் கலந்து தண்ணீரில் கரைத்து, மட்பாண்டத்தில் அல்லது ஜாடியி லிட்டு வாயை மூடிச் சீலை மண் செய்து, 40 நாள் கழித்து வடித் தெடுத்துக் கொள்ளவும். இதுவே ஆசவம், a wine or spirituous liquor obtained by fermenting a mixture of iron filings and other powdered drugs as per process laid down in Ayurveda. It is prepared in the following manner — Purified iron filings are mixed with powdered bazaar drugs such as, dried ginger, pepper, long-pepper, bishop's weed, wind berry, and coray or cyperus root. The mixture is then thrown into a pot or a porcelain jar containing a solution of old jaggery and Kattathi flower (Bauhinia tomentosa). The pot or the jar is then hermitically sealed and allowed to remain for forty days, after which it is taken out and filtered. This is known as 'Ulogasavam'.

உலோகா தீதம், உலக இயல்புக்கு மேற்பட்டது, above or beyond the powers or laws of nature.

உலோ கார்த்தம், இலௌகிக நயம், material benefit; 2. உலக நன்மை, public good, secular advantages.

உலோ காமிலம், உலோகங்களி னின்று தயாரித்த திராவகம், metallic acid.

உலோகா ஸந்தர், வாத வைத்திய நூற்களைத் தமிழில் இயற்றிய அகஸ்தியர் கூட்டத்தைச் சார்ந்த வோர் சித்தர், one of the Siddhar's of Agastiyar's school who compiled various books on Medicine and Alchemy.

உலோகிதகம், செம்புக் கல், ruby stone.

உலோகித சந்தனம், குங்குமப் பூ, English saffron — Crocus sativus.

உலோகிதம், இரத்தம், blood; சிவப்பு, redness; 2. மஞ்சளானது, அல்லது சிவந்தது, that which is yellow or red; 3. சிகப்பு சந்தனம், red sandal-wood — Santanum rubrum.

உலோ கோத்தமம், (உலகு + உத்தமம்) பொன், gold as it is considered a superior thing in the world.

உலோ கோத்தம ரசம், பொன் சத்து, the essence of gold.

உலோச மத்தகம், ஓமம், Bishop's weed — Sison ammi.

உலோசம், கண்மணி, the pupil of the eye; 2. ஆகாயம், sky.

உலோசரா, அவல், which see.

உலோசனம், கண், the eye.

உலோசி, பேய்ப் பசளை, a wild species of purslane; portulaca — Portulaca meridiana.

உலோசிதம், சந்தன மரம், sandalwood - tree Santalum album.

உலோச்சு நோய், தலை மயிரைப் பிய்த்துக் கொள்ளும் ஓர் நோய், a devilish disease tempting one to pull off the hair by the root.

உலோடகம், ஒடை மரம், whell creeper — Combretum ovalifolium.

உலோட்டம், இரும்புக் கிட்டம், which see; 2. மண் கட்டி, a clod or a lump of clay.

உலோட்டி, வெறியைத் தரும் சாராயம், an intoxicating liquor.

உலோத்திரக் கிரமம், see உலோத்திரம்.

உலோத்திரச்சம், வெள்ளிலோத்திரம், the bark of a tree — Simplocos racemosa; 2. சவரிலோத்திரம் (குறட்டைப் பருப்பு) the pulp of the seed of a tree — Trichosanthes palmata.

உலோபம், எறும்பு, ant; ஆசை, greediness.

உலோபணாதி, சொற்பனம், கனவு, dream.

உலோமசம், சடாமாஞ்சில், a medicinal grass; Indian spikenard — Cyperus stoloniferus.

உலோமத கரி, கல்லால், Dalhousie's fig — Ficus Dalhousie alias F.tjakela.

உலோமம், மயிர் வால், hairy tail.

உலோலம், அசைவு, shaking; 2. காமம், cupidity; lust.

உலோ லம்பம், வண்டு, beetle.

உலோலர் சிஷ்ணம், see ஆதொண்டை.

உலோலன், காம விகார முள்ளவன், a voluptuary.

உலோ லாட்ச விருட்சம், மலை மா, hill mango — Balsmodendron candatum.

உலோலிதம், அசைவு, shaking; 2. நடுக்கம், trembling.

உலோலுபன், விஷய சுகங்களில் ஆசை யுள்ளவன், one indulging in sensual pleasures.

உலோலை, நாக்கு, the tongue.

உல், கழு மரம், impaling stake.

உல்பகம், முலைப்பால் சலத்தாற் உண்டாகி குழந்தையைத் தாக்குதலினால் குழந்தைகட் குண்டாகு மோர் நோய், a disease in children arising from the impaired condition of mother's breast milk.

உல்பம், கருப்பையில் சிசுவைக் கவர்ந் துள்ள வோர் பை போன்ற தோல் அல்லது சவ்வு, the membraneous sac covering the foetus in the womb.

உல்மஸ், பருத்த இலைகளுடைய வோர் வகைக் காட்டு மரம், broad-leaved elm grown in the forests of Europe.

உல்லங் கருவாடு, காயவைத்துப் பதப்படுத்திய உல்ல மீன், the salted sable fish.

உல்ல மீன், see உல்லம், இது இரு வகைப்படும், sable fish, It consists of two species:-

1. கடல் உல்லம் — Esox sphyraena.
2. ஆற்றுல்லம் — Esox gymnocephalus Klein.

உல்லம், ஓர்வகை மீன், இது வெள்ளியைப் போன்ற நிறமாயும், இடையே மஞ்சளும், நீலமுங் கலந்ததாயு முள்ளது. இது எல்லா ஆறுகளிலும் குளம் குட்டைகளிலு முள்ளது. சாப்பிட ருசியா யிருக்கும். செரிப்பதற்கு நேரம் செல்லும், இது மிக்க உயர்வாகச் சொல்லப் படும் "உள்ளதை விற்று உல்லத்தைக் கொள்ளு" என்ற பழமொழியுமுண்டு. Sable fish — Clupea ilisha. It is silvery, white-spotted gold, and purple. It is found in all the rivers, tanks etc and is excellent for food, but heavy to digest. It is said to be the best of fishes and hence the proverb "Self what you have and buy the sable fish". It is spoken of very highly because of its quality; 2. மற்றோர் வகைக் கடல் மீன், another kind of sea-fish — Clupea toli.

NOTE.— The other species are:— Clupea palasah; C. fimbriata (sardine); C.longiceps (Malabar oil sardine); C. alba (white-bait) and C.herengus (herring).

உல்லரி, தளிர், bud, shoot.

உல்லாகம், சொஸ்தம், the gradual recovery of health and strength after disease or from sickness — Convalascence.

உல்லாசமாய்ப் போதல், உள்ளக் களிப்போடு உலாத்தல், to take a walk for recreation.

உல்லாசம், உள்ளக் களிப்பு, delight in mind; internal joy.

உல்லாபம், மழலைச் சொல்ல the prate or babble of little children; 2. நலிந்த தொனி, feeble voice due to sickness; 3. மாற்றுக் குரல், change of voice.

உல்லாபன், நோயினின்று தேறி எழுந்தவன், one who has recovered his health after sickness — Convalascent.

உல்லான், see உள்ளான்.

உல்லி, வெங்காயப்பூ, onion flower; 2. தலை, head; 3. பாலிருள் செடி, a species of இருள் (செடி) which see; 4. ஒல்லி, slim; மெல்லிய ஆள், a thin or lean person; 6. உல்லி பாஷாணம், a kind of arsenic.

உல்லி பாஷாணம், ஓர்வகைப் பாஷாணம், a kind of poison?

உல்லிய நூல், கிணறு, குளம், ஏரி முதலியவைகளை வெட்டுவதற்காக வேண்டிப் பூமியிலுள்ள ஊற்று நிலங்களை தெரிந்து கொள்ளுவதற் குண்டான இரகசியங்களைக் கூறுமோர் நூல், that branch of science relating to the secrets of the nature of the soil to determine the springs or the sources of water-supply underneath the surface of the earth for purposes of digging out or opening tanks, sinking of wells etc.

உல்லியம், பூமியிலுள்ள ஊற்றுக் கால்களை தெரிந்து கொள்ளும் வித்தை, the art of finding out the sources of springs under the earth.

உல்லேகனம், வாந்தி யெடுத்தல், vomiting.

உல் லேற்றல், கழு வேற்றல், to put to death by impaling; transfixing or piercing one through by an upright sharp stake — Impalment.

உவகரி நீர், உப்பு நீர், salt water.

உவ காலி, கடுகு ரோகிணி, a purgative drug — Helleborus niger.

உவகுலம், திப்பிலி, long - pepper; **2. திரிபலை,** the three myrobalans used in Medicine.

உவகை, காமம், sexual desire; **2. மாய யாக்கை,** Maya body; **3. ஆக்கைக் குரிய பதினென் குற்றங்களுள் ளொன்று,** one of the eighteen defects of the body.

உவட்சி, துவளுகை, flexibility.

உவட்டல், குமட்டல், a sudden fit of nausea — Qualm; **2. வெறுத்தல்,** aversion; **3. அருவருத்தல்,** nauseate; **4. எதிரெடுத்தல்,** ejecting; **5. சத்தி பண்ணல்,** vomiting; **6. தேக் கெடுத்தல்,** to satiate.

உவட்டி, அருவருப்பு, which see.

உவட்டித்தல், see **உவட்டல்.**

உவட்டிப்பு, அருவருப்பு, nausea; **2. குமட்டுகை,** the act of vomiting.

உவட்டிற் கூர்மை, மாமிச பேதி, a kind of ore which dissolves flesh. It is one of the 120 kinds of natural substances enumerated in Tamil Medical Science.

உவட்டு, குமட்டு, to nauseate; **2. குமட்டல்,** tendency to vomit; nausea; **3. பெருக்கு,** over-flowing as in blood.

See **இரத்தப் பெருக்கு.**

உவட்டுதல், அருவருப்புறுதல், to loathe; **2. தெவிட்டுதல்,** to satiate; **3. மிகுதல்,** to increase; **4. புரளுதல்;** turning; rolling.

உவட்டு மண், சவுட்டு எண், Fuller's earth i.e. soil impregnated with soda.

உவட் டெடுத்தல், பெருக்கெடுத்தல் to fill with an overflowing abundance.

உவணம், கருடன், brahminy kite; **2. கழுகு** eagle; vulture; **3. மருந்து,** kite.

உவணன், கருடன், see **உவணம்.**

உ உவதி, *16* **வயதுப் பெண்,** a girl of 16 years; **2. பதினாறு முதல் முப்பது வயது வரையுள்ள இளம் பெண்,** a young woman between sixteen and thirty years of age.

உவப்பு, விருப்பம், desire; **2. மகிழ்ச்சி,** delight.

உவமன், ஊமை, a dumb person.

உவரம், கண்ட திப்பிலி, a kind of long pepper of Bengal — Clavica Roxburghii.

உவராகம், கிரகண காலம், the period of eclipse of the sun or the moon.

உவரி, உப்பு நீர், salt or brackish water; **2. கடல் நீர்,** sea water; **3. மூத்திரம்,** urine; **4. கடல்,** sea.

உவரிக் கெண்டை, கடற் கெண்டை மீன், a kind of sea-fish — Sea carp. Literally the term means salt water carp-fish.

உவரி நீர், கடல் நீர், sea-water; **3. மூத்திரம்,** urine; **4. உப்புக் கரிக்கும் நீர்,** water strongly impregnated with salt — Brine.

உவரி லீலை, ஓர் காம விளையாட்டு, see **உபரி சுரதம்.**

உவருப்பின் குலம், கல்லுப்பு, a crystallised prepared salt much akin to **உவருப்பு** which see. It is also a salt found naturally at the bottom of the sea.

உவருப்பு, பூ நீருப்பு, வழலை யுப்பு, an efflorescent salt collected from the soil of Fuller's earth much valued in the Tamil Medical science.

உவர், உவர்ப்பு, the taste of any kind of salt, acid or alkaline substance; **2. உப்புச் சுவை,** saltishness in a moderate degree; **3. உப்பு,** salt, common salt; **4. கடல்,** sea; **5. களர் நிலம்,** brackish soil; **6. உழை மண்,** Fuller's earth; **7. பித்தம்,** bile saline in taste.

உவர்க்கடல், உப்புக் கடல், salt-sea.

உவர்க் கபம், எரிந்து போன பித்த நீருடன் சேர்ந்த கப நீர், saline slimy humour mixed with the over heated bile.

உவர்க்கம், கடற்கரை, sea-shore.

உவர்க்கல், சவர்க்காரம், a hard concretion found in the soil of Fuller's earth; **சாலக் கிராமம்,** a sacred stone of worship found in the river beds,

உவர்க்குழு, மனோசிலை, bisulpheret of arsenic; realgar — Arsenicum bisulphuretum.

உவர்க்களம், சவர் நிலம், brackish soil; saline soil; **2. உப்பளம்,** land in which salt is formed artificially.

உவர்க்காடு, see **உவர்ப் பூமி.**

உவர்க்காரம், சவர்க் காரம், Fuller's earth; Dhoby's earth; soap.

உவர்ச்சங்கம், முட்சங்கு, mistletoe berrythorn — Azima tetracantha alias Monetia tetracantha.

உவர்ச்சார நீர், பூ நீறு, the essence of the salt derived from the soil of Fuller's earth.

See also **உவருப்பு**

உவர்ச்சாரம், see **உவர்ச் சார நீர்.**

உவர்த்தரை, உப்பு விளை நிலம், the land where salt forms naturally or artificially.

See **உவர்க் களம்.**

உவர்த்தல், உப்புக் கரித்தல், to taste saltish; to be saltish; **2. துவர்த்தல்,** to taste astringent; **3. வெறுத்தல்,** to dislike; **4. அரோசித்தல்,** to nauseate.

உவர் நாதம், பிண்ட மாவு, a white coating or cheesy varnish found on the foteus in the womb or on a new born baby — Vernix caseosa.

உவர் நிலம், உவர்ப் பூமி, the soil from which the natural salt is dug out.

உவர் நீரா மிலம், உப்புத் திராவகம், the spirit of salt which is known as Muriatic acid, an old name for Hydrochloric acid.

See also **உப்புத் திராவகம்.**

உவர் நீரி லிடல், உப்புத் திராவகத்திற் கலத்தல், mixing with muriatic acid; **2. மூத்திரத்தில் போட்டு வைத்தல் அல்லது கலத்தல்,** allowing to remain or mixing with urine; **3. உப்பு தண்ணீரில் போட்டு வைத்தல்,** putting into salt-water.

உவர் நீர், உப்புத் தண்ணீர், salt-water; **2. உப்புக் கரைந்த நீர்,** a solution of salt; **3. மூத்திரம்,** urine; **4. உப்புக் கரித்த நீர்,** water containing excess of salt — Brine; **5. கடல் நீர்,** hard-water; sea - water.

உவர் நீறு, பூ நீறு, an efflorescent salt collected in the dew season from the soil of Fuller's earth. It is considered 'King of salts' on account of its extra ordinary virtues.

உவர்ப் பறுகு, உப்பறுகு, which see.

உவர்ப் பில்லாமை, கைப்பில்லாமை, freshness as opposed to saltness in water.

உவர்ப்பு, உப் புறைப்பு; உப்புக் கரிப்பு, saltishness; **2. துவர்ப்பு,** astringency; **3. வெறுப்பு,** aversion; **4. அவா வின்மை,** suppression of desire or passion; **5. மனிதர்களுக்கு இயல்பிலேவுண்டான அறுவகை துர்க் குணங்கள் அவையாவன —** the six different unpleasant dispositions of men and they are:-

1. **ஆசியம் அல்லது அவமதிச் சிரிப்பு,** derision.
2. **இரதி அல்லது பேராசை,** vehement desire.
3. **அரதி அல்லது வெறுப்பு,** dislike.
4. **சோகம் அல்லது சோர்வு,** swoon; deliquium.
5. **பயம் அல்லது அச்சம்,** fear
6. **குற்சிதம் அல்லது அருவருப்பு** abomination or abhorrence.

உவர்ப் பூ, உவர் பூமியிற் பூர்க்கும் பூநீறு, the efflorescence on the fuller's soil.

உவர்ப் பூமி, உப்பு நிலம், which see.

உவர் மண், உமை மண், சவர் மண், fuller's earth; **2. உப்பு மண்,** which see; **3. ஓர் உபரசச் சரக்கு,** crude carbonate of soda — Dhoby's earth; **4. உவர் மண் பூமி,** saline soil.

உவர் மண், இம்மண் வண்ணான் வெளுப்பதற்குபயோகப் படுவதா லிப்பெயர். இது சிறிது வெளிரிய சாம்பல் நிறமாய், மணல் கலந்து பூர்த்த சவுட்டுப்பு, சாதாரணமாய்க் கருங்கல் பாய்ந்த பூமியில் உண்டாகும். மாறுபாட்டினால் கல் லழிந்து உவர் மண் தரையாக மாற்ற மடையும். இதில் அனேகமாய் காற்பங்கு சோடா கலந்துள்ளது. நமது நாட்டில் பல விடங்களிலும் காணலாம். இது வேனிற் காலத்திற் பூர்த்து மழைக்காலத்திற் சுரண்டி யெடுக்கப்படும். இதைப் பல முறை கொதிக்க வைத்துக் கசடு நீக்கிச் சுண்ணாம்புடன் கலப்பதால் மிக்கக் காரமானதாகும். தண்ணீரை மிருதுவாக்கித் துணிகளின் அழுக்கைப் போக்குவிக்கும்.

இம்மண் கிடைக்காத மலையாளம், இலங்கை முதலான விடங்களில் இதற்குப் பதிலாகப் பூண்டுகளையும் தென்ன ஓலைச் சருகையுங் கொளுத்தி அதனா லடைந்த சாம்பலை உபயோகிப்பார்கள். பூ நீறு இதன்று, வேறு, title from being used by washermen in bleaching. It is a whitish grey, sandy efflorescence *(சவுடு)* and covers the country where decayed white granite, forms the surface of the soil. It contains from, 13 to 25% of crude carbonate of soda and is found in several parts of India. It begins to accumulate in the dry weather and after rains, it is to be scraped off the surface. By repeated boiling and the addition of quick lime, an alkali of considerable strength is obtained. It has a softening effect on water and removes the dirt on clothes.

In Malabar and Ceylon where Dhoby's earth is not found, the ashes of burnt vegetables, chiefly cocoanut leavs are used; Dhoby's earth is quite different from Pooncer *(பூ நீறு)* see **உழ மண்.**

உவர் மண் காரம், சவர்க் காரம், an impure carbonate of soda consisting also Aluminium silicae — Dhoby's earth. It is used for washing clothes, hence the name.

உவர்மண் சுண்ணம், உவர் மண்ணோடு கலந்த, பூ நீறு சுண்ணம், a medicinal powder prepared by calcining impure carbonate of soda mixed up with other ingredients, as per process laid down in the Tamil Medical science.

உவர் மண்ணுப்பு, உவர் மண் பூமியி லுள்ள சோடா வுப்பு, carbonate of soda found in fuller's soil.

உவல், தழைகள், twigs of plants; **2. சருகு,** dried leaves.

உவளகம், ஒரு பக்கம், one side; **2. குளம்,** tank; **3. இரட்டை,** couple, a pair; **4. கன்மதம்,** a fossil exuding from rocks during summer; **5. உப்பளம்,** salt pans.

உவளம், சோறு, boiled rice.

உவளித்தல், சுத்தி செய்தல், cleaning; purifying.

உவனம், see **உவணம்.**

உவனாயம், துவைத்துக் கட்டு மருந்து, medicinal leaves bruised or pounded and then applied to a wound or abscess.

உவனித்தல், ஈர லித்தல், which see.

உவா, உவாத் தேக்கு, which see; **2. கடல்,** sea; **3. யானை,** elephant (60 years old); **4. இளமை,** youthfulness; **5. வாலிபன்,** a young man; a lad or one of virile age (from 16 to 70); **6. பௌர்ணமி அல்லது அமாவாசை,** full moon or new moon. See also **உகா.**

உவாதி, கொடுந்துன்பம், வேதனை, severe pain, distress, see **உபாதி.**

உவாத் தேக்கு, ஓர் வகை, உகா மரம் அல்லது உவா மரம். இது 40 அடி உயரம். இலைகள் நாற்கோணச் சாயல்; பூ வொன்று; விதைகள் மொசு மொசுப்பு; மஞ்சட் பூந்தாதுவும் வெள்ளை யிதழு முடைய பூ மரம். இது பரந்து அழகாயும், பூக்கள் வாசனையாயும், காய்கள் பச்சை ஆப்பிள் பழத்தைப் போலு மிருக்கும். ஆந்திர பிரதேசத்தில் அடர்ந்த காடுகளில் பார்க்கலாம்; கோயில்களிலு முண்டு. இதன் பட்டையும், இலைகளும் துவர்ப்பா யிருக்கும்; பழத்திற்கு மலத்தை இளக்குங் குணமுண்டு. காயைச் சர்க்கரை யிட்டு வேக வைத்தால் ஆப்பிள் பழத்தைப் போலிருக்கும்; கறிகளிலும், இறாலுடனும், சேர்த்துச் சமைப்பதுண்டு. புளிப்பான காய்ச் சாற்றில் சர்க்கரை யிட்டுக் குடிக்கக் குளிர்ச்சியைத் தரும். இலைகள் மர சாமான்களை மெருகிட வுதவும்.

Sand paper tree, Hill tree, Pleasing tree (called also *உகா)* which see — Dillenia indica alias D.elliptica. Tree is 40 ft; leaves oblong; one-flowered, seeds hairy; large flowers with white petals and yellow anthers; ornamental tree with spreading habit; flowers fragrant; fruits resemble green apples; found in dense forests of Northern Circars; cultivated in temples.

Bark and leaves are medicinally astringent; ripe fruit laxative; when cooked with sugar resembles apple; commonly mixed in curry especially with prawns; acid juice sweetened with sugar forms a cooling drink; leaves are used for polishing furniture.

உவாந்தி, சத்தி, nausca; vomiting.

உவாந்தி பிராந்தி, வாந்தியும், மயக்கமுங் கூடிய வயிற்றுப் போக்கு, diarrhoea attended with bewilderment.

உவாய், see **உவா,** or **உவாத் தேக்கு;** **2. உகா,** which see.

உவாய்ப் பட்டை, உகாப் பட்டை. இது வாத வலி, வீக்கம், விரணம் முதலியவைகளுக்குத் துவாலை யிட வுதவும், the bark of sand paper tree applied as a liniment in cases of rheumatic pains, swelling and wounds.

உவிதல், நீ வற்றிய யவிதல், to decay for want of moisture in animals or vegetables; **2. நெருக்கத்தினா லவிதல்,** decaying for want of air or ventilation; to rot owing to density or closeness; **3. சாதல்,** dying.

உவித்தல், அவித்தல், to bake in steam.

உவியல், சமைத்த கறி, prepared curry.

உவை, see **உவாத் தேக்கு; 2. உகா,** mustard tree; Mahomadan tooth-brush tree — Salvadora persica.

உவ்வி, தலை, the head.

உழக்கல், see **உழச்சல்.**

உழக் காழாக்கு, காலே யரைக்காற்படி, 3/8 of a measure.

உழக்கு, காற்படி, 1/4 of a measure.

உழக்குதல், கலக்குதல், stirring up; **2. மிதித்தல்,** trampling down; destroying by treading.

உழச்சல், மிதித்தல், இது சாதாரணமாய் மலையாளத்தில் நோயாளிகளுக்குச் செய்யும் சிகிச்சை. இதில் நோயாளியைக் கிடத்தி உடம்பின் மேல் தைலத்தை ஊற்றி அவன் மீதேறி மிதித்துக் குணப்படுத்துதல், a peculiar treatment resorted to by the Ayurvedic physicians in Malabar for purposes of relieving pain from the body or for curing some special diseases such as rheumatism, nervous affections etc. In this, the patient is made to lie prostrate and medicated oil is poured and rubbed on his body and then he is trampled upon or pressed with feet gently and sufficiently on the affected part.

உழச்சாரம், சவுட் டுப்பு, impure carbonate of soda.

உழத்தல், வருந்தல், to suffer; **2. புரளுதல்,** rolling.

உழப்பல், கலத்தல், mixing all together mashing.

உழப்பு வலி, strength; **2 பழக்கம்,** habit.

உழ மண், சவுட்டு மண், dhoby's earth or earth impregnated with soda; **2. பிண்ட மாவு,** a code word for the white coating of greasy or oily substance found on the skin of the foetus or a new- born baby — Vernix caseosa. See **உவர்நாதம்.**

உழ மண், இது மங்கலான வெண்ணிற முள்ள மணற் கலந்த வுப்புப் பூர்த்த மண், பூமிக்குள் வெண் பாறைகள் சிதைந்து மணலோடு கலந்து மண்ணாக மாறுவதினா லிது உண்டாகும். இதில் அரைக்காற் பங்கு அல்லது காற் பங்கு சவர்க்கார முள்ளது. இது வெயிற் காலத்தில் பூமி மேல் ஒன்றாகத் திரண்டு சேருவதனால், மழைக் காலத்தில் சுரண்டி யெடுக்க ஏதுவ்வாயிருக்கும். இவ்வுப்பு வளையல், சோப்பு முதலியவைகள் செய்வதற்கும், துணிகள் அழுக்கெடுத்துச் சலவை செய்வதற்கும் உபயோகப்படும். பூநீறு 'என்பது வேறு, இது உழமண் ணல்ல. உழ மண்ணோடு சுண்ணாம்பிட்டுக் காய்ச்ச மிகவும் காரமான குழம் புண்டாகும். இது தான் சவர்க்கார மென்பது.

தமிழ் வைத்தியத்தில் சவர்க் காரத்திற்கு விசேஷ குணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அது வயிற்றுப் புளிப்பு, அசீரணம், வாய் ரோகம் முதலியவைகளைப் போக்கும். அதைப் பற்றி அனேக வாத நூற்களு முண்டு, ஆயினும் அவைகளை எளிதில் அறிவது அசாத்திய மாகும், fuller's earth. A whitish grey sandy efflorescence. It is found in places where decayed white granite forms the strata or sometimes the surface of the soil.

It contains 13 to 25% of crude carbonate of soda and begins to accumulate in dry weather and after rains, it can be scraped off the surface. It is used in making glass, bangles, soap etc. Dhoby's earth is quite different from 'Poonir'. By repeated boiling and addition of quick lime, the alkali obtained is of considereable strength. It is used by dhobies for washing clothes, for it has a softening effect on water and removes dirt. It cures acidity of the stomach, indigestion, and diseases of the mouth.

It plays an important part in the Tamil Medicine and volumes are written about its significant use in medicines and in alchemy and in spite of this, the processess described are not easily comprehensible and so it remains to be still a mystery. See **உவர் மண்.**

உழ மண் காரம், உவர் மண் காரம், a solution prepared from fuller's earth — Mordant.

உழ மண்ணுப்பு, உவர் மண்ணி லிருந் தெடுக்கு முப்பு, an impure carbonate of soda See **சவுட்டுப்பு.**

உழமண் தரை, பூ நீறு விளையும் பூமி, the soil of fuller's earth from which **பூநீறு** (poonir) is collected in the dewy season.

உழம்பல், குழறல், uttering indistinct sounds.

உழர்தல், வருத்த மாற்றாது புரளுதல், rolling or becoming restles, owing to unberable suffering.

உழலல், பிறந்திளைத்தல், the sufferings undergone in the evolution in births; **2. மனஞ் சுழலல்,** restlessness of mind; **3. வருத்தம்,** being in a state of suffering and distress, as the soul is in connection with births.

உழ லாத்தி, see **ஊழலாத்தி.**

உழலை, பெருந்தாகம், intense thirst — Anadispsia; Dipsosis.

உழலைப் படல், சூரிய கிரணத்தின் கொடுமையினாற் தாக்கப்படல், to be affected by sun-stroke; to be scorched with great heat; **2. தாகத்தால் வருந்தல்,** to be tormented with thirst.

உழலைப் பிணி, நா வறட்சி, அதி தாகம் முதலிய குணங்களோடு கூடிய நோய், any disease attended with parched tongue and intense thirst.

உழ வணிகம், பொன்னாங் காணி, an edible plant bearing yellow flowers — Illecebrum sessile.

உழவு தண்ணீர், சரும நோய்களுக் குபயோகிக்கும் காடி சேர்ந்த சவர்க்காரக் குழம்பு, a solution of sodium ethylate used externally in the treatment of lupus and psoriasis; **2. சவர்க்காரம் சேர்ந்த தண்ணீர்,** water impregnated with soda.

உழற்சி, சுழற்சி whirling as in **தலை சுழற்சி** reeling of the head; **2. வருத்தம்,** suffering, distress; **3. ஆட்டம்,** oscillation; vibration.

உழற்றல், தாகம், thirst; **2. வெப்பம்,** intense heat; **2. நா வுழற்றல்,** parched tongue.

உழற்றி, உடம்பு முறுக்கு வாங்கல், twisting or contorting the body or the limbs; **2. நோயில் வருந்தலால் உடம்பைத் திருப்பல்,** twisting the body about, as in pain; **3. அதி தாகம்,** intense thirst — anadipsia; **4. சுழலுகை,** rolling.

உழற்று, சுழற்சி, wirling; **2. புரட்டல்,** revolving as in **வயிறு புரட்டல்** a feeling experienced in nausea.

உழற்றுதல், சுழற்றுதல், to twist; **2. வருத்திப் புரளல், அதாவது உடம்பின் வலி பொறுக்காது உடம்பையும், கை, கால்களையும் திருப்பல்,** twisting or writhing of the body or the limbs as in excess of pain; **3. வருத்துதல்,** causing to suffer.

உழன்று வருதல், களைப்புறல், to grow tired or fatigued.

உழிஞை, கொற்றான், baloon vine — Cordiospermum helicacabum; **2. சிறு பூளை,** woolly caper — Illecebrum lanatum alias Achyranthes lanatum. It literally means strength-giving.

உழிஞ்சிலை வாகை, see **உழிஞ்சில்.**

உழிஞ்சில், வாகை, common sirissa — Albizzia lebbek; **2. அழிஞ்சில்,** which see.

உழிதல், அலைதல் wandering about.

உழு, பிள்ளைப் பூச்சி, an insect known as mud gryllus, see **உழுவான்.**

உழுகு, எறும்பு, ant, see **உழுவம்.**

உழுந்து, உளுந்து, black gram — Phaseolus mungo.

உழுவம், எறும்பு, an ant; an emmet.

உழுவல், குணம், the disposition and the characteristic of a person or a thing; **2. விடாது தொடர்ந்த அன்பு,** affection or attachment continued through births.

உழுவான், பிள்ளைப் பூச்சி, an insect that undermines the garden-beds — Gryllus gryllotalpa.

உழவுத் தண்ணீர், **உழமண் ணீர்,** water impregnated with soda; **2 உழ மண்,** fuller's earth.

உழுவை, **புலி** tiger; **2. உளுவை,** which see; **3. தும்பிலி,** a sea-fish; **4. ஓர் வகைப் பச்சை நிறமான கடல் மீன்,** a green sea-fish — Gobius ornatus; **5. குண்டால வுழுவை,** a yellow fish found in fresh and back waters.

உழை, **மான்** deer **2. பசு** cow; **3. பூ விதழ்,** the petal of a flower; **4. இடம்** place; **5. விடியற் காலம்,** dawn; **6. பக்கம்,** side.

உழைச் செல்வான், **நோயாளியைக் கவனித்து மருந்தூட்டுவோன்,** one attending on a sick person or a patient for administering medicine etc — Nurse.

உழைமண், **அருக்கெடுக்கும் மண்,** fullers earth capable of removing dirt from clothes.

உழையன், **பித்த ரோகி,** any person suffering from the effects of biliousness or other similar diseases due to the aggravated condition of bile in the system.

உழை வலி, **பக்க வலி,** pain on the sides.

உழை விழித்தான், **நாகப் பாம்பு,** cobra.

உளகுத்தம், **பெருங்காயம்,** asafoetida.

உளப்பு, **நடுக்கம்,** trembling, tremor.

உள மாந்தை, **க்ஷய ரோகத்தின் பிரிவாகிய ஓர் வகை நோய், அது அதிக சம்போகத்தினாலும் மற்றக் காரணங்களினாலு முண்டாகும்,** consumption arising from excessive sexual intercourse or other varied causes. See **உள் மாந்தை.**

உளம், **மனம்,** mind; **2. மார்பு** breast; **3. இருதயம்,** heart.

உளறல், **வாய்க்குழறல்,** incoherent speaking, to prattle like a child; **2. தடுமாறிப் பேசல்,** talking incoherently; **3. பிதற்றல்,** to talk insanely.

உளறு, **தொடை,** thigh.

உளறுதல், **தடுமாறிப் பேசல்,** talking indiscreetly; **2. பிதற்றல்,** the insane repetition of meaningless words and sentences — Verbigeration; **3. தடுமாறிப் பேசுமோர் நோய்,** aphasia in which the patient utters many words conveying no meaning — Gibberial aphasia.

உளறுவாயன், **ஓயாது பேசுவோன்,** one who talks incessantly; **2. பிதற்றுவோன்,** an idle talker; babbler.

உளி, **நகஞ் சீவி,** a knife or instrument for removing superfluous nails or other growths.

உளிகை, **ஐங்காய மென்னும் பஞ்ச மலம்,** the five evils attached to the soul.

உளிக்காரம், see **அரிதாரம்.**

உளிட்டிகம், **களா விழுதி,** purple mountain ebony — Rauhinia purpurea.

உளித்தலைக் கோல் **கடப்பாரை,** crowbar.

உளிப்பாரை, see **உளித்தலைக் கோல்.**

உளியம், **கரடி,** bear.

உளு, **மரத்தைத் துளைக்கு மோர் வகைப் புழு,** wood-borer; wood-worm; wood-fretter; **2. உளுத்தது,** that which is rotten.

உளுக்கல், **காகச் சிலை,** a black loadstone.

உளுக்கு, **நரம்புச் சுளுக்கு,** a violent strain of the muscles or the ligaments of a joint without dislocation — Sprain; **2. மூட்டுப் பிசகு,** dislocation of a joint.

உளுக்குதல், **சுளுக்குதல்,** to be sprained.

உளுத்த, **புழு வரித்த,** worm eaten.

உளுத்த மா, **உளுந்து மாவு,** the flour of black gram; **2. உளுத்ததினா லேற்பட்டமா, உளுப்பொடி,** worm meal or dust, caused by the worm's gnawing the wood.

உளுத்தம் பயறு, see **உளுந்து.**

உளுத்த வெலும்பு, **அரித்த வெலும்பு,** the gangrenous eating of a bone — caries.

உளுத்தல், **அரிக்கப்பட்டுப் பழுதுறல்,** to be eaten up as in bones by certain diseases such as tuberculosis etc.

உளுத்திரம், **மஞ்சள்,** turmeric.

உளுத்துப் போதல், புழு வரித்தல், to be eaten up by worm; 2. வெடியுப்பினால் **உளுத்தல்,** to be corroded by salt - petre.

உளுந்து, இது ஓர் கருப்புப் பயறு, குளிர்காலத்தில் பயிராகும். பூக்கள் மஞ்சள்; ஐப்பசி மாதத்தில் விதை தெளித்துத் தை மாதத்தில் பிடுங்குவார். இதன் வேர் மயக்கத்தைக் கொடுக்கும், பருப்பு உடம்புக்கு வலிவைக் கொடுக்கும். இதன் மாவு மாசாற்றும், blackgram — Phaseolus mungo alias P. radiatus. The seed is black and smooth and flowers yellow. It is cultivated in the cold season. Seeds are sown in October and after $3^{1}/_{2}$ months. i.e. in January, the plants are uprooted and gathered for getting the seeds.

The root is somewhat narcotic and the seed a toic. Flour is detergent and is used in making papadams.

NOTE: The chemical composition of the gram is — water 10.1. albumfnous 22.7, starch 55.8, oil 2.2, fibre 4.3, ash 3.3, phosphoric acid 1.1. per cent.

உளுந்துச் செடி, உளுந்து விளையும் செடி, plant of black gram — Phaseolus radiatus. See **உளுந்து.**

உளுப்பு, உளுத்த மரம், worm-eaten tree.

உளுப்புத் தாவல், புழுக்க ஆரம்பித்தல், to be attacked by destructive worms.

உளுவாய், வெந்தயம், fenugreek — Trigonella foenum- graecum.

உளுவை, ஆறுகளில் சேற்றின் அடியில் புதைந்து கிடக்கும் ஓர் வகை மீன், இது கடல்களிலும், கழிகளிலு முண்டு. இதற்கு முள் கிடையாது. இது உடம்பிலுள்ள பல நோய்களையும், பழைய மலம் முதலியவைகளையும் போக்குவதால், இது தமிழில் வைத்தியத்தில் பத்தியக் கறியாகக் கொள்ளப்படும். இதில் அனேக விதங்களுண்டு. அவையாவன:- mud fish — Gobius (genus). It is so called from its lying buried in the mire at the bottom of the river or the shallow sea. It is generally found in fresh-water (rivers) and back waters (sea). It is free from spines.

It is supposed to cure diseases in the system, and remove old fecal matter from the intestines and is therefore selected as a dietetic substance in the Tamil Medicine.

The different kinds are:

1. **நல்ல தண்ணுளுவை அதாவது ஆற்றுளுவை** - river - goby or Koke — Gobius giuris alias G.Kokius.

2. **வெள்ளுளுவை,** a river fish- known as white caboose — Ophicephalus punctatus.

3. **கல்லுளுவை,** a river-fish generally found under the stone — Aulopus elongatus.

4. **கோரையுளுவை,** a sea fish of brownish grey colour - Sanrida tumbil

5. **கட லுளுவை மீன்** a green sea-fish with brown spots — Gobius ornatus.

6. **மண் ணுளுவை** mud skate — Bynchobatus ancylostomus. It is so called from its frequenting shallow sea bottom.

7. **குண்டல வுளுவை,** ringed goby, a river-fish as well as a sea fish — Gobius striatus. It is found both in fresh-water and back water in Madras.

NOTE: It is also called a thrnless fish and it forms one of the important dietetic substances in the fish diet for patients on account of its medicinal virtues. It is said to be useful in eczema and other itchy eruptions.

உளை, புற மயிர், the hair on the body; 2. **குதிரை,** horse; 3. **உளைதல்,** aching or suffering from pain; 4. **சிறுக்கு வாதம்,** rheumatism through cold, marked by pain in the nerves; 3. **சேறு,** mud; mire; 6. **அழுகை,** weeping; 7. **ஆண் மயிர்,** the hair on a man's head.

உளைக்கால், மயிர்க் கால், hair-follicles.

உளைக்குதல், மார்பு, கை கால் முதலியன குடைச்சலெடுத்தல், suffering from pain in the breast and the limbs.

உளைச்சல், see **உளைவு.**

உளைதல், பிரசவ வேதனைப்படல், to suffer the pangs of childbirth; 2. **கை, கால், முதலியன குடைச்சலெடுத்தல்,** neuralgic pain through cold, or weakness in the limbs; 3. **வயிறுளைதல்,** suffering from colic

or griping pain, as in dysentery; *4.* **மனம் வருந்தல்,** to suffer mentally; *5.* **நெஞ்சு அல்லது மார்பில் வலித்தல்,** suffering from pain in the breast; *6.* **இடுப்புளைதல்,** having pains in the loins.

உளைப்பு, கை கால், நெஞ்சு, தோள் முதலிய விடங்களிலுண்டாகுங் குடைச்சல், aching pain in the limbs, breast and shoulders through cold etc.

உளை மயிர், பிடரி மயிர், mane.

உளை மாந்தம், குழந்தைகளுக் குண்டாகு மோர்வித மாந்த நோய், இதனால் மலசலங்கட்டிப் பால் குடியாமல் குழந்தை அலறி அழுவதுடன் மிரண்ட பார்வையையு முண்டாக்கும், disease in children arising chiefly from indigestion. It is marked by suppression of stools and urine, aversion to milk, screaming, ghastly look etc.

உளை மாந்தை, உடம்பி னுள்ளே மார்பு, குடல், வயிறு முதலிய விடங்களில் பருக்கள் புறப்பட்டுப் பழுத்துடைவதனால் உடம்பு கனத்து வலித்து, குத்தல், குடைச்சல், கை காலெரிச்சல், இருமல், மயக்கம், சுரம், தலைவலி, முதலிய குணங்க ளுண்டாகி, நெஞ்சு, விலாப் பருத்து, இருமலினால் நொந்து, குரல் கம்மி, நினை வழிந்து, உணவு வெறுத்து, தூக்கம் பிடியாமல், உடம்பை யிளைக்கச் செய்யு மோர் வகைச் சிலேட்டும நோய், an incurable internal abscess attended with inflammation in the chest, bowels etc. with purulent matter. It is characterised by the following symptoms: heaviness and pain all over the body, burning sensation in the limbs, cough, giddiness, fever, headache, and also swelling of the chest, weakness through cough, sore-throat, loss of memory, aversion to food, sleeplessness and general emaciation of the body — Tuberculosis; *3.* **உடம்பினுள் ஈரலில் குருக்கள் எழும்பி வெந்தவிந்து, சீழ் கொண்டு உள்ளாழ்ந்து, மார்புவலி, சுரம், மூச்சுவிட முடியாமை, இருமல், கோழை, சில சமயம் இரத்தங் கக்கல், முதலிய குணங்களைக் காட்டு மோர் தீராத நோய், இதுவே சய ரோகம்,** an incurable disease of the lungs characterised by the formation of tuberiles which break down forming in the interior of the lungs cavities filled with purulent matter. It is marked by chest pain, fever, inability

to breathe, and spitting of blood — Tuberculosis of the lugns or Pulmonary phthisis; *3.* **(உளை + மாந்தை = நொதி அல்லது சீழ்க் கட்டு + உள் ளழிவு) உடம்பினுள் சீழ் கட்டி அழிதல்,** (literally) any tubercle degenerated and filled with purulent matter inside the body. See **உள் மாந்தை.**

உளை மாந்தை கொள்ளல், சய ரோகங் கொள்ளல், to become a consumptive.

உளைவு, சீதளத்தாற் காணும் உடம்புக் குடைச்சல், intense pain in the limbs from cold or rheumatism; *2.* **வயிறு றுளைவு,** griping pain in the stomach or the bowels; *3.* **உடம்பு நோய்,** extensive pain in the body; *4.* **பாதத்தை அனுசரித்த வாத நோயி லொன்று,** rheumatism affecting the feet.

உளைவுக் கண், கண் மணியுள் உளைந்து வலிக்கு மோர்விதக் கண்ணோய், inflammation of the iris — Iritis.

உளை வெடுத்தல், நோயுண்டாதல், to be suffering from griping pain; *2.* **நரம்புக் குடைச்சல்,** having neuralgic pain.

உள், மனம் mind; *2.* **உட்புறம்** inside as opposed to outside; *3.* **உள்ளாள்,** which see; *4.* **வெங்காயம்,** onion; *5.* **இரகசியமானது,** that which is private or secret as in **உள் ளங்கம்,** the genital; *6.* **உள்ளிடம்,** internal organ as opposed to external one.

உள் கடுப்பு, உள் வலி, internal pain; *2.* **உள்ளழற்சி,** internal irritation or inflammation.

உள் கரு, see **உட்கரு.**

உள் கருவி, உடம்பினுள் ளிருக்கும் 96 தத்துவங்கள், the 90 constituting elemetns essential for the building up of the body both physically and mentally.

NOTE: They are primordial and eternally existing essences. They sankhyas reckon 25 Tatwams, or mataphysical entities, wherease, the Sheivites postulate 96 Tatwams or constituent principles in nature, including elements, bodily and mental organs, faculties, matter etc.

For further details see under **தத்துவம்.**

உள் கழலை, உள்ளுறுப்புகளுக் குண்டாகும் கழலை, tumour of internal organs.

உள் கொதிப்பு, உடம்பி னுட்காங்கை, internal heat; 2. உட்சுரம், internal fever.

உள் சுரம், சந்தத சுரம், a long-continued internal fever, see உட் சுரம்.

உள் சூடு, see உட் சூடு.

உள் தோல், see உட்டோல்.

உள் நோக்கம், உள்ளே நோக்கல், the act of looking inwardly; 2. தன்னைத் தானறிதல், (In Philosophy) examination of one's own thoughts and feelings — Introspection. See உண்ணோக்கல்.

உள் புண், see உட் புண்.

உள் மரித்த குறி, குழந்தை கருப்பையி னுள்ளே இறந்ததைக் காட்டும் அடையாளங்கள், அதனால் தாய்க்கு, குளிர், அசௌக்கிய வுணர்ச்சி, அரோசிகம், சுவாச நாற்றம், மார்த் தளர்ச்சி, அடிவயிறு கனத்தல், தேகம் சில்லிடல், இருபக்கமும் கனதி தோன்றல் முதலியன ஏற்படும், symptoms of the death of the child in the womb — sudden rigor, uneasiness, bad taste, fetid breath, flaccidity of the breastes, sensation of heaviness and coldness in the abdomen, feeling of the rolling about of a heavy body from side to side as the patient moves etc.

உள் மரித்த சிசு, கருப்பையில் இறந்த குழந்தை, the child dead in the womb. See அகமரித்த கருப்பம்.

உள் மருந்து, உள்ளுக்குச் சாப்பிடு மருந்து, medicine taken internally as opposed to (வெளி மருந்து) external application.

உள் மாந்தம், குழந்தைகளுக் குண்டாகு மோர் வகை மாந்த நோய், indigestion with fever and other complications in children due to disorders of internal organs.

உள் மாந்தை, see உள மாந்தை.

உள் மூலம், அபானத்துள் தசைபோல் வளர்ந்து மலத்தை யிறுகச் செய்து, வயிறு மந்தித்து, மலத்தில் இரத்தம் விழச் செய்யுமோர் அசாத்திய மூல நோய், இது ஆசனத்துள் மறைந்து நிற்கும், a polypus appearing about the innermost ring or groove of the rectum. It lies concealed within the sphincter ani — Internal hemorrhoids. It is opposed to வெளி மூலம், external hemorrhoids, which is situated outside the sphincter ani.

உள் ரோகம், பொதுவாக உடம்பினுள் ளிருக்கும் நோய், an internal disease in common; any disease of the organs within the body.

உள் வந்தை, உள்ளுறுப்புகளி லுண்டாகும் தூக்குணி, internal parasites.

உள் வயிரம், மரத்தினுள் பாய்ந்த வயிரம், the solid portion in the heart of a tree or inside a timber; the core of a tree. See அகக் காழ்.

உள் வயிரிப்பு, புண்ணி னுட்புறத்தில் காணும் கடினமான பாகம், the hard portion found internally in a boil or an abscess — Core.

உள் வறட்சி, உடம்பினுள் ளுறுப்புகள் தாக்கப்படுவதா லேற்படும் ஓர் வகை சன்னி, apoplexy arising from the affection of internal organs; 2. இருமலினாலும், வெட்டைச் சூட்டினாலு முண்டாகும் வறட்சி, dryness due to cough as experienced in asthma, consumption, venereal heat etc.

உள் வலி, புண் புரை முதலியவைகளி னுட் பக்கத்தில் காணும் வலி, inward pain as in an abscess etc; 2. உள் ளுறுப்பின் வலி, pain in the internal organ.

உள் வலிப்பு அறிவழியாது உடம்பினுள் ளுண்டாகும் இழுப்பு, a slight involuntary spasmodic movement with no loss of consciousness — Internal convulsion. It is a kind of petit mal as opposed to grand mal (epilepsy).

உள் வளம், மூளைக்குள் ளிருக்கும் கட்டு, a pair of bands connected with the cerebrum — Crus cerebri.

உள் வளையல், see உள் வளைவு.

உள் வளைவு, உள்ளாக வளைந்திருத்தல், incurvation; concavity as opposed to புற வளைவு, convexity.

உள் வாங்கல், உள்ளுக் கிழுத்தல், drawing in as with the tongue in convulsion and paralysis and with the eyes in cases of death.

உள் வாய், வாயி னுட் புறம், the innercavity of the mouth; **2. வாயி னுட்பக்கம்,** inside of the mouth.

உள் வித்திரிதி, உடம்பினுள் ளுண்டாகுங் கட்டி, an internal deep-seated abscess, such as psoas-abscess, brain-abscess, etc. It is opposed to **வெளி வித்திரதி,** which see.

உள் விப்புருதி, உடம்பினுள் பற்பல உறுப்பு களிற் காணும் கட்டி, a malignant tumour occurring in any part inside the body — Internal cancer; **2. வயிற்றின் இடது பக்கத்தில் கடினமாகக் காணுமோர் விப்புருதிக் கட்டி, இதனால் மிக்க வலி, கோழையுடன் இரத்தங் கக்கல், உடம் பிளைத்தல் முதலிய குணங்கள் ஏற்படும்,** cancer of the stomach which is usually felt to be a hard tumour on the left side below the ribes. It is marked by great pain, vomiting of bloody mucous, emaciation of the body etc. **3. வயது சென்ற பெண்களுக்குக் கருப்பையிற் காணும் கட்டி, இதனால் மிக்க வலி, சூதகமல்லாது காணும் இரத்தப் போக்கு, நாற்றமான நீர் ஒழுக்கு, மிக்க பலவீனம், உடம்பிளைப்பு, முதலிய குணங்களுண்டாகும்,** cancer of the womb causing much pain. It is accompained by bleeding at non-menstrual times, a badly smelling watery discharge etc.

உள் விரணம், உடம்பி னுள் ளுறுப்புகளுக் கேற்பட்ட விரண நோய், இது மிக்க அபாயமானது. இதனால் கட்டி யேற்படும், inflammation of the internal organs such as, the lungs, the liver, the bladder the intestines, the kidney, etc. which may subsequently be developed into tubercles, cancers etc.

உள் விழுதல், see **உள் வாங்கல்.**

உள் வினை, கட்டி, பிளவை முதலியவற்றிற் குள்ளாக விருந்து கொண்டு, வலி, துன்பம் முதலியவைகளை யுண்டாக்கும் வினை, the root cause like micro-organisms of syphilis, tubercle, abscesses, carbuncles, etc., which bring about all sorts of troubles such as pain, sufferings etc. **2. ஊழ் வினை,** inherited fate.

உள் வீக்கம், உடம்பினுள் ளுண்டாகும் வீக்கம், internal swelling.

உள் வீச்சு சன்னி, உள் ளுறுப்புகளுக்குக் காணும் இசிவு சன்னி, convulsions of involuntary muscles such as in those of the heart, the stomach, the intestines and the gullet. It is opposed to **புற வீச்சு சன்னி,** the one attacking voluntary muscles as in epilepsy, tetanus etc., and convulsions of cerebral hemorrhage.

உள் வெக்கை, பல காரணங்களை முன்னிட்டு உடம்பினுள் ளேற்படும் உஷ்ணாதிக்கம், இதனால் இரத்தக் கேடுண்டாகி நரம்பு பலவீனப்படும், internal heat in the system arising from all chronic diseases. By this heat, blood is deteriorated and the nervous system weakened; **2. உட் சுரம்,** fever without external symptoms.

உள் வெக்கை சுரம், நா வறண்டு, தலை வலித்துக் கண்களில் அனல் புகுந்து, அடிக்கடி தண்ணீர் கேட்கு மோர் வகைச் சுரம், a low fever attended with parched tongue, headache, burning eyes, intense thirst etc., due to chronic inflammation.

உள் வெட்கை, see **உள் வெக்கை.**

உள் வெட்டு, பொன் மதிப்பிடும் ஓர் முறை, a process of testing gold; **2. மாற்றுயர்ந்த பொன்,** superior or refined gold.

உள் வெதுப்பு, see **உள் வெக்கை, 2. மனவெறுப்பு,** vaxation of mind.

உள் எக்கரம், see **உள்ளட்சரம்.**

உள்ளக் காட்சி, உள் நோக்கம், the inner sight; **2. மனதிற் தோன்றும் காட்சிகள்,** those that are seen by a Yogi through psychic powers, such as forms like snowfall, smoke, sun, wind, fire, firefly, and lightning; **3. உண்மையான தோற்றம்,** things seen by a Yogi as they are and not as they appear to be; seeing things in their true colours.

உள் ளங்கம், உடம்பினுள் அவயவம், internal organs of the body; **2. இரகசியமான உறுப்பு,** the secret organ such as the genital in male or female.

உள்ளங்க விரத்த வொழுக்கு, hemorrhage of internal organs.

உள்ளங் காலெரிவு, பித்தா திக்கத்தினாலும் அல்லது வாத பித்தம் கோளாறடைந்து இரத்தத்தை அனுசரிப்பதனாலும், உள்ளங்காலி லேற்படும் மோர் வகை எரிச்சல்,

இது அதிகமான நடையினால் சாதாரணமாகவே ஏற்படும் the burning sensation in the soles of the feetc caused by excess of bile or by the deranged local Vayu and Pittam, extending to the blood in the system. It is generally seen to afflict persons of pedestrian habits.

உள்ளங் கால், பாதத்தி னுட்புறம் the sole of the foot — Vola pedis.

உள்ளங் காற் குத்து, வாதத்தை யடுத்த வோர் வகை நோய், இதனால் உள்ளங் காலில் ஊசியாற் குத்துவது போல் வலி யுண்டாகும், a rheumatic disease marked by in-prick pain on the soles of the feet. It is said to be due to disorder of Vatham in the system.

உள்ளங் காற் கை யெரிச்சல், விஷசுரம், பித்தாதிக்கம், வாத நோய், குடற் கோளாறு முதலிய காரணங்களினால் உள்ளங் கையிலும், காலிலும் காணும் எரிச்சல், இதனால் தூக்கங் கெட்டு, உடம்புக்குக் கெடுதி ஏற்படுவதுடன், சில சமயங்களில் இது அதிகப்படில், உடம்பு மெலிந்து, நரம்பு பலவீனமடைந்து காணும், a very troublesome disease causing a most painful sensation of burning in the soles of the feet and the palms of the hands. It is due to malarial influences, bilious disorders, rheumatic affection, bowel complaints etc. It is usually marked by sleeplessness, affection of general health etc. and also sometimes by emaciation and debility which accompany the progress of the malady.

உள்ளங் காற்றிமிர், உடம்பில் வாயுவும், கபமும் கோளாறடைவதனால் உள்ளங் காலி லோர்வித வலியையும், உணர்ச்சியின்மையையு முண்டாக்கு மோர்வித வாயு நோய், இதற்கு வடமொழியில் 'பாத அரிஷம்' என்று பெயர், a disease of the soles of the feet marked at first by a peculiar pain and then by loss of sensation. It is due to the deranged condition of Vayu and Kapam.

உள்ளங் காற் றினவு, உள்ளங் கால் நரம்பில் சீதளந் தோன்றி அதனால் நமைச்சல் மிக வுண்டாகி, வலியையும், குத்தலையும் கொடுக்கு மோர் நோய், இது உள்ளங் கையிலும் தோன்றும், a disease of the soles of the feet, characterised by inense itching and piercing pain. It is due to the affection by excess of cold. This may also arise in the palm of the hand.

உள்ளங் கை, உள்ளங்கை, the palm of the hand — Vola manus.

உள்ளங் கை புறங்கை நக்கல், கஷ்டசீவனம், living from hand to mouth.

உள்ளங் கையில் ஒன்பது கொண்டை முடிதல், பெண்ணின் வல்லமையைக் குறித்துச் சொல்லும் பழமொழி, proverbially said of a woman's dexterity in trying to accomplish impossible or impracticable things.

உள்ளங்கை யெரிச்சல், பித்தத்தினாலேற்படும் உள்ளங்கை எரிவந்தம், burning sensation of the palm due to bilious affects e.f. உள்ளங் காலெரிவு.

உள்ளங்கை யோரம், சிறு விரலிலிருந்து மணிக்கட்டு வரையிலுள்ள கையோரம், உள்ளங் கை ரேகை நூலின்படி இதற்குச் சந்திர மேடு என்று பெயர், the border or the edge of the palm of the hand from the base of the little finger to the wrist — Anti thenar eminence. In chiromancy it is termed the 'Moon eminence.'

உள்ளங்கை ரேகை, உள்ளங்கையிலமைந்த வரிகள், இவைகளைக் கொண்டு, அதிர்ஷ்டம், முதலியவைகளைச் சொல்வதுண்டு, the lineaments on the palm of the hand from which is predicted fortune etc.

உள்ளடக்கம், யோகிகள் ஆன்மாவைப் பிரமத்தி லடங்கச் செய்தல், the art of bringing about the union of the universal soul with the Divine spirit; **2.** மூச்சை யுள்ளேயடங்கச் செய்தல், suppression of breath by a Yogi.

உள்ளடக்கல், எழும்பும் மூச்சு, இருமல், முதலியவைகளை உடம்பினுள்ளே ஒடுங்கச் செய்தல், to suppress as is done with breath, cough etc.

உள்ளடங்கல், வாசியுள் ளடங்கல், அதாவது மூச்சு வெளி யோடாது உடம்பினில் தரிக்குதல், (In Yoga Philosophy) a condition in which the respiration is rendered calm and composed within the system. In other words, the function of breathing is suppressed and is allowed to settle within the body; **2.** சமாதி புகுதல், entering in to Samadhi by a Yogi. See அகால லடக்கம்.

உள்ளடி, உள்ளங்கால், the sole of the feet.

உள்ளடி கனத்தல், பாதத்தைத் தூக்கும் போதும் வைக்கும் போதும் களி மண் அப்பியது போல் அல்லது செத்தை ஒட்டிக் கொண்டது போல் தோன்றிக் கால்கள் மரத்துக் காணுமோர் வாத நோய். இது அதிசீதளப் பிரதேசத்தில் வசிப்பதனாலும், குளிர் காற்று உள்ளங்காலைத் தாக்குவதனாலு மேற்படும். இதற்கு வடமொழியில் 'பாதலக வாதம்' என்று பெயர். a disease in which the patient feels as if the soles were coated with clay or some rubbish sticking to them while raising or planting the feet. It is an affection of the sole due to living in an extremely cold place or to chillness attacking the feet — Loco motor ataxy.

உள்ளட்சரம், குழந்தைகளுக்கு முகமும் நாகமும் வெளுத்து, வாய் வெந்து, மூக்கில் நீர் வடிந்து, சுரத்துடன் தாகமுங் காணுமோர் வகை அச்சர நோய், a form of stomatitis in children due to disordered state of the stomach. It is characterised by inflammation of the mouth, paleness of the face and the tongue, fever and thirst.

உள்ளது, ஆன்மா, soul; spirit; 2. இருப்பது that which exists; 3. விதிக்கப்பட்டது, that which is ordained or decreed.

உள்ள நாள், உயிரோடிருக்கும் காலம், life time, period of existence.

உள்ள நோய், இருக்கும் நோய், existing disease; 2. அனுபவிக்கும் நோய், disease experienced or suffered.

"உள்ள நோய் பிணிகள தீர்ந்தால்
உலகர் பண்டிதரைத் தேடார்"
(விவே. சிந்தா)

உள்ளந் தண்டு, கழுத்தெலும்புகள், bones of the neck — Cervical vertibrae.

உள்ளந்தரங்கம், (உள் + அந்தர் + அங்கம்) உடம்பினுள் ளிருக்கும் இரகசியமான உறுப்பு, (In Psychology) the secret organ inside the body c.f. அந்தக் கரணம்.

உள்ளந்தாள், see உள்ளங்கால்.

உள்ள பானம், ஆசனத்தி னுட்புறம், the interior of the anus — Rectum.

உள்ள பிள்ளை, கருப்பையி லிருக்கும் சிசு, the child in the womb; 2. மெய்யான பிள்ளை, true child in the womb as opposed to the one suspected in cases of Spurious pregnancy.

உள்ளப் புணர்ச்சி, பெண்ணுடன் புணருவதாக் கருதுதல், imagining as having coition; mind prostitution 2. ஆணும் பெண்ணும் மனதினாற் கூடும் புணர்ச்சி, the union of lovers in mind. It is opposed to (மெய்யுறு புணர்ச்சி), bodily intercourse.

உள்ள மட்டும், ஆயுள் வரை, till one's life-time.

உள்ள மிகுதி, ஆனந்தப் பரவசம், ecstasy of mind, as if from divine or spiritual influence; 2. மன மகிழ்ச்சி, excalted state of the mind.

உள்ளம், மனம், mind; heart; 2. கருத்து, intension; 3. விஞ்ஞானம், consciousness; 4. அகச்சான்று, conscience; 5. ஆன்மா, soul; 6. ஓர் வகை மீன், see உல்லம்.

உள்ளம்மி, மருந்தரைக்க வுபயோகிக்கும் ஆழமாயுள்ள குழி அம்மி, a vessel made of granite stone with an ova-shaped cavity, in which ingredienst are pounded.

See also கலுவக் கல்.

உள்ளல், கருத்து, intention; 2. உள்ளான் குருவி, the common snipe — Scolopax.

உள்ள வயவக் கட்டு, உடம்பினுள் ளிருக்கும் உறுப்புகளின் அமைப்பு, the structure of the internal organs.

உள்ளவயவம், உடம்பினுட் கருவி, the internal organ of the body.

உள் ளழலை, உடம்பினுட் கொதிப்பு, internal heat in the system; 2. உள்ளுறுப்புகளுக்குக் காணும் அழற்சி, inflammation of the internal organs.

உள் ளழல், உட் தீ, gastric fire.

உள்ளழற்சி, உடம்பினுள் ளேற்படும் வேக்காடு, inflammation of the internal organs of the body as in tuberculosis.

உள்ளழியு நோய், உள்ளுறுப்புகளை நாசம் செய்யும் சயம் முதலிய நோய்கள், wasting diseases that bring about disintegration or degeneration of internal organs such as tuberculosis, consumption, etc. See உள்ளுருக்கி.

உள் ளளவு, உயிருள்ள வரை அதாவது உயிரோடிக்கும் வரை, till one's life time.

உள்ளறை, *உடம்பினுள் ளிருக்கும் அறைகள்,* internal cavities of the body — Sinuses.

உள்ளனல், *உட் காங்கை,* internal heat.

உள்ளா, *ஓர் வகைக் கடல்,* a carnivorous sea-fish of dark-blue colour — Sphyraena acutipinnis.

உள்ளாக்கல், *உட்படச் செய்தல், நோய்க்குள்ளாக்கல்,* causing to be involved in, as in the case of one suffering from a disease.

உள்ளாடல், *உடம்பினுள் ளாடிக் கொண்டிருத்தல், மூச்சு உள்ளாடல், அல்லது உயிர் உள்ளாடல்,* to be moving inside the body as does life or breath.

உள்ளாடை, *உட் சீலை அதாவது ஆசன சிகிச்சை முதலிய இரண வைத்தியங்களில் உபயோகிக்கும் சல்லா உடை* (In Surgery) a muslin dressing for use mainly in rectal and vesical surgery — Chemise.

உள்ளாயுதம், *உடம்பினுட் சிகிச்சைக்காகப் பிரயோகிக்கும் கருவி,* any instrument set apart for internal use in surgery.

உள்ளாலயம், *இதயம்,* heart.

உள்ளாழம், *(உள் + ஆழம்) புண் புரையினுள் ளோடும் ஆழம்,* the internal depth of the cavity (sinus) in any sore or abscess.

உள்ளான், *உள்ளான் குருவி, இது பலவிதம்,* common snipe; Scolopax — Gallinago media. It is so called from its frequenting marshes. The different varieties are:—

1. *கோரை யுள்ளான்* - one which frequents sedges — Scolopax Madraspatana.
2. *கீரியுள்ளான்* - one which resembles ichneumon.
3. *குத்தாட்டி யுள்ளான்* - water wagtail which shakes its tail continually while walking.
4. *தடி மூக்குள்ளான்* - one with a thick bill or one whose bill resembles the knob of a stick.
5. *துடுப்புள்ளான்* - one whose will resembles a paddle.
6. *மாரி யுள்ளான்* - rain snipe or one which sucks in water. It is the common snipe — Gallinago scolopacinus.
7. *பதுங்கை யுள்ளான்* - one that hides - Scolopax burka.
8. *கோழி யுள்ளான்* - fowl or jack snipe or Judcock — Gallinago gallinula.
9. *மயி லுள்ளான்* - painted snipe (from variegated plumage) Rynchaca bengalensis.
10. *சிவப்பு மூக்குள்ளான்* - snipe with a red bill, see *மயி லுள்ளான்.*
11. *காட்டு ள்ளான்,* wood snipe - Gallinago nemoricola alias Aemoricola nepalensis. It is a snipe found solitary in elevated regions and is uncommon.
12. *சட்டித் தலையுள்ளான்* - one with a big head.
13. *கொசு உள்ளான்* - another kind of snipe.

NOTE: 1, 6 and 13 are mostly used in South India for a favourite dish as their flesh has medicinal virtues.

They are said to cure urinary disorders, digestive troubles, etc. No.1 is specially useful for canvalascents, as it tends to increase the appetite.

உள்ளி, *வெங்காயம்,* onion — Allium cepa 2. *வெள்ளைப் பூண்டு,* Garlic - Allium sativum.

"ஊட்டினும் பல் விரை யுள்ளி கமழாதே"

(வெற்றி. வேற்)

உள்ளிக் கோளம், *கழுத்தின் கீழ் மார்பறையுள் திரண்டு காணுங் கோளம்,* a two-lobed body in the neck and the throax of an infant - Thymus gland.

உள்ளிசிவு, see *உள் வீச்சு சன்னி.*

உள்ளிச் சுவேதம், *வெள்ளை வெங்காயம்,* white onion; 2. *வெள்ளைப் பூண்டு,* garlic - Allium sativum.

உள்ளிடுதல், *புண் புரைகளில் காரச் சீலை அல்லது மருந்துகளைப் புகட்டல்,* inserting into the sinuses of wounds any caustic gauzes or medicines.

உள்ளிடை, *இடுப்பி னுட்பக்கம்,* pelvis inside the hip.

உள்ளித் திரி, வெள்ளைப் பூண்டின் உள்ளிருக்கும் பல், the clove of garlic, one of the several bulbs in a garlic.

உள் ளிந்திரியம், மனது, the internal sense; mind; 2. அந்த ரிந்திரியம், which see 3. சுக்கிலம், semen.

உள்ளிப் பல், see உள்ளித் திரி.

உள்ளிப் பாஷாணம், a kind of arsenic.

உள்ளிப் பூடு,
உள்ளிப் பூண்டு, வெள்ளைப் பூண்டு, garlic - Allium sativum.

உள்ளி யாமணக்கு, ஓர் வகை யாமணக்கு a variety of castor plant — Ricinus communis.

உள்ளி யெண்ணெய், உள்ளி யாமணக்கு எண்ணெய், இதை, வெப்புப் பாவை, வயிற்றிற் குத்து வாதம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கலாம். முறைக்கு அகத்திய வல்லாதி 600ஐப் பார்க்கவும், oil extracted from a variety of castor seeds and prescribed for cancer of the stomach, acute abdominal pain (colic) etc. For details see Agastiyar vallathi (600); 2. வெள்ளைப் பூண்டுத் தைலம், oil obtained from garlic.

உள் ளிரத்த வொழுக்கு, உடம்பினுள் ளவய வங்களி னின்று இரத்தம் வடிதல், இது உடம்பினி லுள்ள இரத்தக் குழாய்களுக்குக் காயம் அல்லது நோயின் காரணங்களை முன்னிட்டுக் காணும். இதனால் சோர்வு, களைப்பு, சீதள வியர்வை, நாடித் தளர்ச்சி, முதலியவைகள் ஏற்படும், இதையே ஒடுக்கமெனக் கொள்ளப்படும், இத்தகைய வொழுக்கே தலைக்குட் காணுமாகில் சன்னிக்குக் காரணமாகும், internal hemorrhage. This occurs from an injury to or a disease of the internal blood vessels. It is accoumpanied by great depression, faintness, cold perspiration, feeble pulse etc., and the condition is described as Colllapse. The same bleeding if it takes place within the head, it is known as apoplexy.

See also இரத்த பித்தம்.

உள்ளிருப்பு, உள்ளிருக்குந் தன்மை, the internal, nature or situation.

உள்ளில் ரோகம், உடம்பினுள் ளிருக்கும் நோய், internal disease.

உள்ளின் மாசு, see உப மலம்.

உள்ளீடு, உள்ளிருக்குஞ் சத்து, the inherent substance of a nut; 2. உள்ளிருக்கும் குழைவு, the tender substance inside of a fruit; 3. வெளியுள்ளதற்குச் சரி யொத்தபடி உள்ளே யமைந்தது, that which corresponds inside to the one existing outside of anything; 4. பலகாரத்திலுள்ளே வைக்கும் வஸ்து, the essentials inclosed in a cake.

உள்ளீரம், உடம்பினுள்ளிருக்கும் ஈரம், the moisture within the body.

உள்ளு, see உள்ளான்.

உள்ளுக்குக் கொடுத்தல், உண்ணும்படி மருந்து கொடுத்தல், to administer or to give medicine to be taken internally.

உள்ளுக்குச் சாப்பிடல், மருந் துண்ணுதல், taking medicine internally.

உள்ளுக்குச் செலுத்தல், உணவு அல்லது மருந்து, முதலியவைகளை வுடம்பி னுள்ளே பிரயோகித்தல், to give food by force or to administer medicine, etc., into the system by insertion, injection, etc.

உள்ளுக்குத் தடவல், உடம்பின் அவயவங்களுக்குள் பூசுதல், the local application into the rectum, the vagina etc.

உள்ளுக்குப் பிரயோகித்தல், see உள்ளுக்குச் செலுத்தல்.

உள்ளுக்கு மருந்து உண்ணக் கொடுக்கு மருந்து, medicine intended to be taken internally.

உள்ளுக் கேற்றல், மருந்து முதலியவைகளைப் படிப்படியாக உடம்பினுட் செலுத்துதல், administering drugs or medicines by degrees.

உள்ளுங் கொண்டு புறமும் பூசல்,
உள்ளுங் கொண்டு மேலும் பூசல், மருந்தெண்ணெய் அல்லது தைலத்தை உண்டு, அதே மருந்தை உடம்பின் மேலும் பூசிக் கொள்ளல், taking medicinal oil internally and also applying the same externally.

உள்ளுடன், see உள்ளீடு.

உள்ளுடை, see உள்ளாடை; 2. கோவணம், a piece of cloth used for covering the genital by a male.

உள்ளுடைதல், மன முறிதல், to be broken hearted; 2. ஊக்க மழிதல், failing in energy.

உள்ளுதடு, இது பெண் குறியின் உட்பக்கத்திலிருக்கும் சிறிய உதடுகள், the internal lips of the vulva — Nymphae. See சிற்றுதடு.

உள்ளுப்புடை, உள்ளாகப் புடை கொள்ளல், an internal swelling as in boils, abscesses, etc.

உள்ளும் புகட்டி மேலும் பூசல், see உள்ளுங் கொண்டு மேலும் பூசல்.

உள்ளும் புறமும், உள்ளும் வெளியும், within and without; inwardly and outwardly; 2. மனதும் தொழிலும், (fig) mind and action.

உள்ளுயிர், நத்தை, snail; உடம்பினுள்ளிருக்கும் உயிர், life within; 3. ஆன்மா, soul; 4. அந்தர் யாமி, gold within.

உள்ளுயிர்க் குன்று, see உள்ளுயிர்.

உள்ளுருகுதல், மனங் கரைதல், to melt, said of the mind; 2. உள்ளுறுப்பு மெலிதல், wasting of the internal organs.

உள்ளுருக்கி, உடம்பை மெலியச் செய்யும் வஸ்து (lit) that which tends to reduce or emaciate the system; said of medicines taken in or of diseases within; 2. சிலேஷ்ம உடம்பினின் பாலைக் குழந்தைகள் குடிப்பதால், இரச தாது ஓடுகின்ற நரம்புகளின் மார்க்கம் அடைபட்டு அதனால் அன்ன ரசம் மேலுக்கு ஏறாமல், இருமல், இளைப்பு, முதலான குணங்களேற்பட்டு, உடம்பை இளைக்கச் செய்யு மோர்வகை கணை நோய். இதற்கு வடமொழியில் 'பால தோஷம்' எனப் பெயர். affection of the mesenteric glands in children resulting in digestive derangement and gradual wasting of the body.

It is said to be caused by sucking the milk of a woman suffering from phlegmatic diseases, as a result of which obstruction is caused in the lymphatic vessels. It is marked by cough, fatigue, etc — Tabes mesenterica.

NOTE: It is a popular name for any morbid process by which the healthy tissues of the various orans and transformed into albuminous substances of waxy degeneration.

உள்ளு லத்தீகம், அசத்தி, which see.

உள்ளு லர்த்தி, கணைச் சூட்டினால் குழந்தைகளின் உள்ளுறுப்புகளை உலரும்படிச் செய்து உடம்பைப் பலவீனப்படுத்து மோர் கணை நோய், an atrophy in children due to the wasting of the muscles of the internal organs of the body arising from defects or failure of nutrition — Infantile atrophy.

உள்ளுலவு, சிற்றொடுவை, which see.

உள்ளுறுத்தல், உட் செலுத்தல், to thrust in. See உள்ளிடுதல்.

ஊசி மல்லிகை, ஊசியைப் போன்ற சன்னமான முல்லைச் செடி, இது முறுக்காயும் இருதய வடிவைப் போன்ற பெரும் இலைகள் வாய்ந்ததாயும், காம்பினடியில் சிறு கொழுந்துகள் நெருங்க முளைத்ததாயு மிருக்கும். இதன் இடையே அனேக வெண்மையான பூக்கள் நிறைந்திருக்கும். அத்தரைப் போல் நறுமணம் கமழும், அதாவது வீசும், eared - jasmine — Jasminum auriculatum alias J.rigidum. It is a small twining shrub having large heart- shaped leaves with a air of minute leaflets on their foot-stalks. It bears numerous middle-sized, white, star-like, very fragrant flowers smelling like Attar.

ஊசி மறுப்பு, see ஊசித் திருப்பல்.

ஊசி மாகிதம், கல்லூரிப் பச்சிலை, a plant (unidentified).

ஊசி மிளகாய், கொச்சி மிளகாய், சீமைப் பச்சை மிளகாய், இது ஊசியைப் போல் சன்னமாயும் வெகு காரமுடையதுமாயு மிருக்கும், காடியில் போட்டும் ஊறுகாயிலும் உபயோகப்படுத்தலாம். needle - chilly or Cochin chilly — Capsicum minimum. It is very firy i.e. hot and is chiefly used in the preparation of chilly vinegar and also in pickles. It is so called from the smallness of the pod.

ஊசி மிளிரை, காசியரளி, a species of oleander with yellow flowers.

ஊசிமுக யோனி, அல்குலின் துவாரத்தை ஊசி நுழையும் துவாரம்போ லாக்கிச் சையோகத்திற் கிடமில்லாமற் செய்து விடுமோர் வகை நோய், a very rarely occuring disease in which the vaginal orifice is almost blocked up leaving only a small a hole of the size of a pin's head, thus rendering the woman unfit for sexual intercourse; the abnormal narrowing of the vaginal canal to such an extent as to render it impossible for coition — Organis stricutre of the vagina.

ஊசிமுல்லை, ஓர் வகைச் சிறு முல்லை, Malabar jasmine Jasmine malabaricum.

ஊசி முறி, இடைக் காடர் என்னும் சித்தர் இயற்றிய வோர் நூல், a poetical work (not extant) compiled by 'Idaikkadar' a Siddha.

ஊசி முனை யளவு, மிகச் சிறிய அளவு, extremely small size or quantity.

ஊசிய, ஊழலித்த, rancid.

ஊசிய சோறு, நொந்து நூலிழைந்த சாதம், boiled rice which is rendered stale and putrid.

ஊசி யாவரை, வெள்ளை யாவரை, Italian senna — Cassia obovata.

ஊசியுப்பு, வெடியுப்பு, nitre — Potassium nitrate.

ஊசி யேற்றல், ஊசியை உடம்பினுட் பாய்ச்சி மருந் தேற்றல், injecting medicines into the system by means of a needle as is doen in hypodermic syringing.

See ஊசி குத்தல்.

ஊசி யோட்டல், see ஊசி யேற்றல்.

ஊசி வேர், சிறு வேர், tiny root, as thin as a needle.

ஊசி வேளை ஓர் வகைச் சிறு வேளை, a kind of small-leaved cleome — Cleome monophylla.

ஊசு, ஊசுதல், becoming stale or fetid.

ஊசுஞ் சுரம், நாட்பட்ட சுரம், chronic fever.

ஊசுதல், see ஊசல்; 2. அழுகல், to putrefy.

ஊசுமுடல், நாற்ற வுடம்பு, the vile or the fetid body.

ஊச்சில், தசை நோய், morbid state of a muscle; pain in the muscle — Myalgia.

ஊஞ்ச மரம், see உசிலை.

ஊஞ்சல், கம்பி கொண்டு உரி போல் கட்டின சங்கிலியை அதற்குள் மாட்டி நடு விட்டமிட்டு ஊஞ்சலைப் போல் செய்து அதில் மருந்துக் குப்பியை வைத்துப் புடத்துக்கு மேல் அவ்வூஞ்சல் நின்று ஆடும்படிச் செய்து,

குப்பிக்குத் தீயேறி வற்ற வற்ற மேலே மருந்தோ அல்லது செய நீரோ ஊற்றிக் கொண்டிருக்க இசையுமாறு அமைந்த வோர் உபகரணக் கருவி, an apparatus consisting of a hoop in which the medicine in quesntion is kept suspended by wires shaped like a swing, just over the burning pile of cow dung cakes with a view to go on adding solutions or other liquid preparations for purposes of calcination.

See நாகரச வூஞ்சல்.

ஊஞ்சல் மரம், see உசில்.

ஊஞ்சற் தோட் பட்டை, முறிந்து ஊஞ்சலைப் போல் முன்னும் பின்னுமாக அசையுந் தோள் பட்டை, a deformity of the scapula in which it moves forward and back-ward like a swing — Angel's wing.

ஊஞ்சற் பட்டை, சிக்கிராம் பட்டை, Albizzia amara (the bark of); 2. உசிலம் which see.

ஊஞ்சற் பிசின், உசில மரத்தின் பிசின், the gum of the tree உசிலம், which see.

ஊஞ்சில், உசில், black sirissa — Albizzia amara (typica).

ஊடகம், ஓர் வகைக் கடல் மீன், a kind of silvery sea-fish — Gerres filamentosus.

ஊடணை, திப்பிலி, long-pepper.

ஊடரக் கல், சக்கான் கல், limestone, see ஊசரக் கல்.

ஊடரம், உவர் நிலம், saline soil; 2. பூவழலை, fuller's earth.

ஊட லொழித்தல், பிணக்குத் தீர்த்தல், husband removing the feigned dislike of a wife for purposes of sexual intercourse.

ஊடல், பிணக்கு, love -quarrel, see ஊடுதல்.

ஊடவர், வெள்ளி, silver.

ஊடன், ஓர் ஆற்று மீன், a fresh-water fish — Gerres.

ஊடன் கொடி, ஓர் வகைக் கொடி, elliptic leaved wheel - Creeper — Combretum extensum.

ஊடாடுதல், உடம்பின் நடுவே திரிந்து கொண்டிருத்தல், moving about in the middle of the system, said of the soul.

ஊடான், see ஊடகம், 2. வெள்ளி நிறம் போன்ற ஓர் வகைக் கடல் மீன், a silvery marine fish — Pristipoma furcatum; 3. மற்றோர் வகைக் கடல் மீன்; another kind of seafish — Zeus Monopterygus alias gerres filamentosus.

ஊடு, நடு, middle; 2. ஆழ்ந்த வுள் பாகம், the innermost part; 4. இடை; waist.

ஊடுசில், கல் லுசில், a kind of உசில், which see.

ஊடு செல்லுதல், see ஊடுருவல்.

ஊடுதல், கலவியிற் பிணங்குதல், feigning displeasuer in sexual affair as does a wife with her husband chiefly with a view to increase his affection.

ஊடு தாக்கல், நோய் மிகுந்து, உடம்பு முழுவதும் பரவல், increasing and pervading the whole body as do some diseases.

ஊடு பூசாவதி, புட்பராகம், a gem — Topaz.

ஊடுருவல், நடுவினுள் செல்லல், to enter into or pass through the central part of anything; to penetrate.

ஊடுருவிச் செல்லல், நடுவினுள் துளைத்துச் செல்லல், passing through the centre of anything.

ஊடுருவிப் பாய்தல், நடுவினுள் வேகமாய் முழுவதையும், துளைத்துச் செல்லல், passing through anything forcibly and rapidly — Inter - penetrating.

ஊடுளைச்சல், மாத விடாய்களுக்கு இடையே காணும் வலி, pain occuring between the menstrual periods — Midpain.

ஊடை மா, தேட் கொடுக்கி, scorpion plant or scorpion sting; Indian heliatrope — Helotropium indicum.

ஊட்டக் குறைவு, போஷணைக் குறைவு, want of nourishment or nutrition.

ஊட்டக் கொடுத்தல், முலை கொடுத்தல், to suckle.

ஊட்டணம், see உஷ்ணம்.

ஊட்டம், *உணவு,* food; **2.** *வலுவைக் கொடுக்கக் கூடிய ஆகாரம்,* food which promotes growth, strength and development — Noruishment; **3.** *கொழுக்கக் கூடிய ஆகாரம்,* nutrition.

ஊட்டல், *உண்பித்தல்,* to nurse by forcing food into the mouth as in children or patients; **2.** *பால் கொடுத்தல்,* breast - feeding, **3.** *பால் குடித்தல்,* the act of sucking in milk; **4.** *இன்ப துன்பங்களை அருத்தல்,* (In Philosophy) causing to experience joys and suffering as the fruits of action in former births; **5,** *பிழைப் பூட்டல்,* restoring to life.

ஊட்டாக் குழந்தை, *நோய் வருத்தத்தால் பாலுண்ணாக் குழந்தை,* a child which does not suckle owing to suffering from disease or pain; **2.** *பால் மறந்த குழந்தை,* a child which has passed through the stage of sucking; **3.** *ஊட்டி வளர்க்காத குழந்தை,* a child not brought up by artificial feeding or by a wet-nurse.

ஊட்டி, *உணவு,* food; **2.** *குரல் வளை,* Adam's apple; **3.** *மழை;* rain; **4.** *மிடறு,* throat; **5.** *தேட் கொடுக்கி,* see *ஊடைடமா;* **6.** *பறவை புணவு,* bird's food.

ஊட்டிக் குற்றி, *குரல்வளை,* the projection at the fore part of the neck — Adam's apple, See **ஊட்டி.**

ஊட்டி பறிப்பூண்டு, *அலரி,* which see.

ஊட்டிரம், *தேட் கொடுக்கி,* Indian turnsole — Helectropium indicum.

ஊட்டு, *குழந்தைக் குணவு செலுத்தல்,* see **ஊட்டல்;** **2.** *உணவு,* food; **3.** *குழந்தை அல்லது நோயாளிக்குக் கொடுக்கும் கவளம்,* a morsel of food given to a child or to a patient.

ஊட்டுக் குழந்தை, *பாலுண்ணும் குழந்தை,* the sucking child; **2.** *செவிலித் தாயால் ஊட்டப்பட்ட குழந்தை,* a child at the breast of a wet-nurse.

ஊட்டுணை, *தலையாட்டம்,* the shaking of the head through old age.

ஊட்டுதல், see **ஊட்டல்,** **2.** *அனுபவிக்கச் செய்தல்,* causing to experience as the fruit of one's deeds.

ஊட்டுந் தாய், *முலைத் தாய்,* a woman who furnishes breast feeding for the infants of others — wet nurse; **2.** *ஊட்டி வளர்ப்பவளாகிய ஐவகைத் தாயுள் ஒருத்தி,* foster mother who suckles the child. She is one of the five classes of mothers intended for bringing up a child. She acts as a mother and nurses the child.

ஊட்டு பரமூலி, *சிறு பூளை,* see **ஊங்கனி மூலி.**

ஊட்டுலாதி, *வெள்வேல்,* white babool — Acacia leucophloca.

ஊட்டுவாள், see **ஊட்டுந்தாய்.**

ஊஷகம், *மிளகு,* pepper — Piper nigrum.

ஊஷகாதி கணம், *உவர் மண்ணிலிருந் தெடுக்கப்படு மோர் வகை யுப்பு,* salt extracted from the fuller's earth.

ஊஷணம் *சுக்கு,* dried ginger; **2.** *மிளகு,* pepper — Piper nigrum; **3.** *மிளகுக் கொடி,* pepper vine or pepper creeper.

ஊஷணை, *திப்பிலி,* long pepper.

ஊஷம், *விடியற் காலம்,* dawn; **2.** *உவர் மண்,* fuller's earth.

ஊஷரக் கல், see **ஊசரக் கல்.**

ஊஷரத் திராவணம், *வெடியுப்பு,* salt-petre; nitre — Nitrate of potash.

ஊஷரம், *உவர் நிலம்,* saline soil impregnated with soda and other alkaline matter; **2.** *பூ வழலை,* see **ஊசரம்.**

ஊஷ்ண கப வாதக்கினி, *புளி நறளைக் கிழங்கு,* the root of the plant called hairy wild vine — Vitis setosa; **2.** *புளிநறளை,* wild vine — Cissues acida.

ஊஷ்ண காரி, *உடம்பில் சூட்டை யுண்டாக்கு மருந்து,* heat producing drug.

See **உஷ்ண காரி.**

ஊஷ்ணங் கொள்ளல், *உடம்பு சூடாதல்,* becoming heated in the system; **2.** *காந்தல்,* burning with bodily heat.

ஊஷ்ண சன்னி, see **உஷ்ண சன்னி.**

ஊஷ்ண சுவாலை, *வெப்பத்தினா லெழும் சுவாலை,* heat - wave.

ஊஷ்ண பரிமாணம், see **உஷ்ண பரிமாணம்.**

ஊஷ்ண முண்டாக்கல், see *உஷ்ண முறுத்தல்*.

ஊஷ்ண முறுத்தல், *உடம்பில் சூடுண்டாக்கல்*, exciting or stimulating the production of heat in the body — Thermo-excitory.

ஊஷ்ணம், *வெப்பம்* heat in the system; **2.** *காந்தல்*, glow; temperature.

ஊஷ்ண ரோகம், *உடம்பில் வெப்பத்தினா லேற்படும் நோய்*, disease arising from excessive heat in the system.

ஊஷ்ண வாதக் கிராணி, *உடம்பினுள் உஷ்ண வாயுவினா லேற்படும் கழிச்சல் நோய்*, chronic diarrhoes arising from excessive heat in the system or through flatulency.

ஊஷ்ண வீச்சு, *வெப்பத்தினால் சுவாலை வீசுதல்*, heat given off from any body and passing through space in the form of waves — Radiant heat; **2.** *உடம்பில் கொதிப்புண்டாதல்*, increase of heat in the system.

ஊஷ்ண வொத்தடம், *சூடாகக் கொடுக்கும் ஒத்தடம்*, hot fomentation.

ஊஷ் மகம், **ஊஷ்மாகமம்**, *கோடை காலம்*, the great summer.

ஊணம், see *ஊணல்*.

ஊணர், *பேருண்டி யுண்போர்*, those who indulge to excess in eating — Gluttons.

ஊணல், see *ஊணா*.

ஊணறல், *உண வின்மை*, want of food as in *'ஊணற்ற போதே உடலற்றுப் போம்'* by want of food the body wastes.

ஊணன், *சாப்பாட்டு ராமன், மிதமிஞ்சிச் சாப்பிடுவோன்*, one who indulges to excess in eating and drinking — Glutton.

ஊணன் கொடி, see *ஊணாங் கொடி*.

ஊணா, *சடைச்சி மரம்*, common Indian linden — Grewia tiliaefolia.

ஊணாங் கொடி, see *உன்னாயங் கொடி*.

ஊணான் கொடி, see *உன்னாகன் கொடி*.

ஊணி, *உணவு கொள்வோன்*, one who eats.

ஊணிறக்க மில்லான், *நோயினால் உணவு கொள்ள முடியாத நிலைமையி லிருப்பவன்*, a patient incapable of taking food from aversion.

ஊணிறக்க மின்மை, *உணவு ஏற்றுக் கொள்ளாமை*, loss of appetite; aversion to food, inability to take food.

ஊணிறக்கம், *உணவு தொண்டை வழியாய் உள்ளிறங்கல் அதாவது வயிற்றிற் புகல்*, the descent of food through the throat into the stomach; **2.** *உணவு உட்கொள்ளல்*, taking in food.

ஊணு, see *ஊணா*.

ஊணுரை, *இரசம்*, the essence of food.

ஊணுறக்க மில்லாமை, *சாப்பிடாமலும், தூங்காமலுமிருக்கும் நிலைமை*, a condition in which one is without of food and sleep, said of a patient or a condition in the practice of Yoga.

ஊணுறக்க மில்லான், *நோயினால் சாப்பாடு ஏற்றுக் கொள்ளாமலும், தூக்கம் பிடிக்காமலும் இருப்பவன்*, he who is suffering from loss of appetite or aversion to food and sleeplessness, as a result of some constitutional disease or grief etc. **2.** *சாப்பாடு, நித்திரை முதலியவைகளை மறந்து சமாதி நிலையில் இருக்கும் யோகி*, a yogi who will have absolutely no consciousness of the body nor of its physical needs for the reason that in this state all the activities of the mind are completely stilled as a result of which the soul transgresses the laws of nature.

ஊணுறக்கம், *சாப்பாடும் தூக்கமும்*, food and sleep.

ஊண், *உணவு*, food; **2.** *சோறு*, boiled rice; **3.** *உண்ணுகை*, eating; **4.** *கர்மானுசாரத்தால் ஆன்மாவுக் கேற்பட்ட சுக துக்க அனுபவங்கள்*, (In Philosophy) the experience of sorrows and pleasures by the soul, as the inevitable fruits of Karma (the deeds of previous birth).

ஊண்டத்தார், *கள்ளி*, a plant — Euphorbia genus.

ஊண்டழல், *(ஊண் + தழல்) உணவின் தீ, அதாவது உதராக்கினி*

gastric fire having the power of digesting food.

ஊண் பாக்கு, சாப்பிட்ட வுடன் அருந்தும் வெற்றிலைப் பாக்கு, chewing of betel nut immediately after food. It is opposed to **வீண் பாக்கு,** areca-nut simply taken at other times without betel.

ஊண் மறுத்தல், சாப்பாட்டை வெறுத்தல், abhorrence of food or abstinence from food, a symptom of mental disorder; **2. விரதத்தினால் அல்லது துக்கத்தினால் உண்ணாம லிருத்தல்,** abstinence from all or some kinds of food in certain religious observances or while mourning.

ஊதலூட்டல், புண் புரைகளுக்குப் புகை காட்டுதல், exposure of wounds, ulcers etc to disinfecting fumes — Fumigation.

ஊதல், வீங்கல், to swell; **2. குளிர் காற்று,** cold wind; child weather; **3. பருத்தல்,** to bloat; to be puffed up; **4. வாத நோய்,** a rheumatism marked by swelling due to exposure to chili weather; **5. வீக்கம்,** swelling due to the accumulation of fluid in the body; **6. துருத்தி கொண்டு ஊதுதல், அதாவது நெருப்பிலிட்டு மாசைப் போக்கல்,** refining gold or other metals by blowing them in heat with bellows; **7.பரவிய வீக்கம்,** a diffuse swelling — Anthorisma

ஊதல் கொடி, ஓர் வகைக் கொடி, a kind of dark blue creeper — Itchnocarpus frutescens.

ஊதல் சரீரம், நீர் அல்லது வாயு சம்பந்தத்தால் பருத்த வுடம்பு, a body swelled up through aggravation of Vayu or accumulation of bad fluid in the tissues or cavities of the system; **2. கொழுத்த வுடம்பு,** body with excessive or undue fatness — Corpulency.

ஊதளை, சீமையாதளை, ஊதுளை, இது சாதாரணமாய்க் குளத் தோரங்களிலும், வயல், வாய்க்கால், குட்டை, முதலான நீரோடும் கண்களிலும் விளையும், இதன் விதையினின்று எடுக்கு மெண்ணையை மூட்டு நோய், வாத நோய் முதலிய வைகளுக்குத் தேய்க்க அவை குணமாகும், a kind of physic nut — Jatropha glandulifera. This is frequently met with on the shores of tanks and on beds of rivers, canals, springs etc. Oil from the seeds is useful in cases of

arthritis, diseases of the joints and other rheumatic affections as an external application.

ஊதறிகம், கழற்சிக் காய், grey bonduc — Caesalpinia bonducella.

ஊதற் காற்று, பனி காலத்தில் சில்லென்று வீசுங் குளிர் காற்று, a forcible biting cold wind experienced in the dewy season — Cold blast; **2. பனி அல்லது ஈரம் நிறைந்த காற்று,** wind swelled or charged or impregnated with dew or moisture.

ஊதற் கொடி, see **ஊதல் கொடி.**

ஊதா, சிகப்பு கலந்த நீல நிறம், a colour produced by a mixture of red and blue — purple; **2. சிற்சில பூண்டின் முதன் மொழி,** the first term in certain plants to indicate the colour of their flowers etc., as in **ஊதா முள்ளி.**

ஊதா கண்டங் கத்திரி, ஊதா நிறமான பூக்களை யுடைய கண்டங் கத்திரி. இது சாதாரணமாய் எங்குங் கிடைக்கக் கூடியது. இவ்வினத்தில் வெள்ளை பூக்களை யுடையது மிகவும் அபூர்வம். prickly nightshade with purple flowers — Solanum Xanthocarpum. It is a common variety found everywhere but one with white flowers is never or perhaps rarely found. See **கண்டங் கத்திரி.**

ஊதா கதம், காசித் தும்பை, Benares tumbai or Balsam flower — Impatiens genus.

ஊதா கிரியாத்துச் செடி, பூவின் நிறத்தினா லிப் பெயர் வாய்ந்தது. இதை இமயகிரி, பம்பாய், வங்காளம் முதலிய விடங்களில் காணலாம். இது இரண்டொரு அடி வளரும். சிறிய செடி, அடித் தண்டும் கிளைகளும் சதுரமாயிருக்கும், இலைகளில் 3 முதல் 5 நரம்புகள் வரைக்கும் பாய்ந்திருக்கும். ஓரங்கள் மிருதுவா யிருக்கும். பூக்கள் ஊதா நிறம், ஆற்றோரங்களில் காணலாம். சுரக் கஷாயமாகக் கொள்ளலாம். இதை நில வேம்புக்குப் பதிலாக வுபயோகப்படுத்தலாம். இதில் அனேக விதங்க ளுண்டு, purple chiretta or country gentian — Exacum grandiflorum. It is so called from the colour of its flowers. It is found on the Himalayas and Bombay and Bengal presidencies. A small plant 1 to 2 ft. high; stem and branches tetragonal; leaves, ovate and 3 to

5 nerved; margins smooth; flowers purple; found on margins of rivers; valuable febrifuge; just like gentian and used as a substitute for ground-neem.

There are different species viz — Cochin chinensis, court-allense, pedruculatum, insignis, tetrogonum, wightianum, perottetii.

NOTE: This should not be confused with blue- flowerd chiretta called 'elegant ophelia' Swertia affinis alias Justicia ciliavis. The flowers in this variety are whitish with dark purple spots.

ஊதாக் கத்திரி, ஊதா நிறமான கத்திரிச் செடி, New york purple brinjal — Sodamum malongena americana.

ஊதா சாமந்தி, ஊதா நிற சாமந்தி அல்லது சீமை சாமந்தி, a variety of chamomile with purple flowers; Cow-eye chamomile or Europe shaumanty — Anthemis nobilis.

ஊதா சிமிக்கி, நீலமும் சிகப்பும் கலந்த சிமிக்கிப் பூ, violet passion flower — Passiflora laurifloia.

ஊதாப் பூ, மாச கணி, cuspidate - leaved Jaungle geranium — Ixora nigricans.

ஊதா முள்ளி, நீலச் செம் முள்ளி, இது பார்ப்பதற் கழகான அடர்ந்த செடி, இது சுமார் மூன்று அடி உயரம்; பெரிய பிரகாசமான நீலப் பூக்கள்; மழைக் காலத்தில் பூர்க்கும். இதன் விதைகள் பாம்பு விஷத்தைக் குணப்படுத்தும்; வேரும் இலையும் வீக்கத்தைப் போக்கும்; கஷாயத்தை இருமலுக்குக் கொடுக்கலாம், purple barleria — Barleria cristata. It is an ornamental bushy shrub about 3 ft. high; blossoms in the cold season; seed an antidote for snake-bite; roots and leaves used to reduce swellings; an infusion of them given in coughs.

ஊ தாம்பல், See ஊதா வல்லி.

ஊதா வல்லி, நீலச் செவ்வாம்பற் கொடி, இதன் பூ சிறியதா யிருக்கும், இதனால் உறுப்பு மூலம் போம், purple Indian water-lily or American sweet-scented water-lily — Nymphaea odorate. The flower has a smell somewhat like that of the wall flower. It is supposed to cure external piles. See செங்கழு நீர், 2.

நீலவல்லி, இது நீலப் பூக்களை யுடைய ஓர் பூங் கொடி, வருஷம் முழுவதும் பூர்க்கும், blue Indian water-lily or Star flowered lily — Nymphaea stellata alias N.Cyanea. It is a perennial creeper with blue flowers, flowering all round the year.

ஊதா விந்திர புட்பம், ஊதாப் பூக்களுக்குள்ள இந்திர புட்பச் செடி, violet rainbow creeper — Thunbergia hawetey neana.

ஊதா வூமத்தை, ஊதா நிறமான பூக்களை யுடைய ஊமத்தை. இது 2 முதல் 3 அடி வரையில் உயரும். அடித் தண்டு மிருதுவா யிருக்கும், முட்கள் நிறைந்த காய், வருஷ முற்றிலும் பூர்க்கும், பாழ் நிலங்களில் முளைக்கும். இலை உறத்த வாசனை யுள்ளதாயும், கசப்பாயும், அருவருக்கத் தக்கதாயு மிருக்கும். இதன் எல்லாப் பாகமும் மருந்திற் குதவும். பச்சை யிலையை வதக்கிக் கட்டிக்குக் கட்டலாம். எண்ணையைத் தடவி, சிறங்கு, வாத நோய் முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். காய்ந்த இலையைப் புகைச் சுருட்டாகச் சுவாச காசத்திற்குப் பிடிப்பது முண்டு. இதன் விதையின் கஷாயம வலிப்பையும் நோயையும் கேழ்க்கும். இது அபாயமான சரக்காதலால் சாக்கிரதையாக வுபயோக்க வேண்டும்.

இதன் வேர்த் தூளை யுனானி வைத்தியர்கள் காக்கை வலிப்புக்குக் கொடுப்பார்கள். விதைகளிற் சிலது எடுத்து, அக்கரா காரம், இலவங்கம் முதலியவைகளைச் சேர்த்து மெல்லக் காம விச்சையை யுண்டாக்கும். விதையின் சத்தெடுத்துக் கண்ணோய்க் குப யோகிப்பதுண்டு. விதையைச் சாராயத்திற் கலந்து கொடுக்க அதிக போதையை உண்டாக்கும்.

இது மாந்திரீகத்திலும், போதை செய்தல் முதலிய பற்பல இழிவான காரியங்களிலுமுப யோகப்படும். தமிழ் வைத்தியத்திற் குறித்த கருமத்தை யென்பது வேறினம், அது அகப்படுவது அரிது, purple dature, purple thorn apple — Datura fasttuosa (Typica) alias Stramonium fustuosum. It is also known by various names such as Asiatic datura, foolish lant, Indian hose in hose, insane or mad plant, king rogue, oblivion plant, etc.

It is an annual plant 2 to 3 ft. leaves acuminated; stem smooth; fruits prickly; leaves are of a heavy

odour; faintly bitter; nauseous to taste. Seeds are brownish, without odour when not bruised, have a bitter taste and are poisonous. Flowers sweet scented; flowers all through the year; grows wild on waste lands; very common. In the best known thorn-apple all parts are medicinal; fresh leaves bruised are used in poultice for sedative action, with oil it is rubbed on body in itch and rheumatism; in asthma, dried leaves are smoked like tobaccom seeds are used in tincture as anodyne and anti-spasmodic; very dangerous if incautiously used; powdered root used by Hakeems in epilepsy.

In very small doses i.e. when a few seeds are chewed with the pellitory root (Anacyclus pyrethrum) and cloves, it serves as an aphrodisiac; an alkaloid daturina obtained from seeds is used by ophthalmic physicians, seeds are used in liquors to render them more intoxicating.

It is used mixed with food to rob or to murder, persons and is also used in magic sorcery etc. It is mixed with gunjah and smoked by gunjah smokers.

This should not be confounded with the black dhatura contemplated in Tamil Medicine which is quite a different species having superior virtues.

NOTE: It is supposed to possess some occult power and so, in olden days the seeds were used by the priests of Delphi in Greece and other ancient place of oracies to facilitate prophecies.

ஊதிகம், **சோமப் பூண்டிற்குப் பதிலாக உபயோகிக்கு மோர் பூடு,** a plant which can be readily substituted for Soma.

ஊதிகா, ***காட்டத்தி,*** downy mountain ebony — Bauhinia tomentosa.

ஊதிகை, ***முல்லைக் கொடி,*** cared-jasmine or needle - jasmine — Jasminum auriculatum.

ஊதிப் பார்த்தல், ***மந்திரித்தல்,*** attempting to effect a magnetic or psychic cure by chanting mantrams and blowing occasionally on the patients body; **2.** ***புடமிட்டுச் சோதித்தல்,*** to test by blowing metals to fusion, as a goldsmith does for determining their purity.

ஊதிய பொன், see ***ஊதின பொன்.***

ஊதியிருத்தல், **வீங்கியிருத்தல்,** to be in a swollen condition; **2.** **பருத்திருத்தல்,** to be stout, or bloated.

ஊதி யொடுக்கம், ***மூச்சு,*** breathing, respiration.

ஊதின பொன், ***புடமிட்ட பொன்,*** refined gold.

ஊதின மரம், **வண்டு துளைத்த மரம்,** tree pierced by beetle.

ஊதின வெள்ளி, **நெருப்பி லிட்டு கலப் பின்றி ஊதி யெடுத்த சொக்க வெள்ளி,** wrought silver, purified silver.

ஊது, **ஊது குழல்,** blow pipe.

ஊது கட்டி, **ஊதி யெடுத்த பொன் அல்லது வெள்ளிக் கட்டி,** an ingot of gold or a bar of silver obtained by the refining proces; **2.** **வீங்கிய கட்டி,** a swollen boil or abscess; **3.** **வாயு வினால் உப்பிய கட்டி,** an abscess that containes gas — Tympanitic abscess.

ஊது கணம், **கணச் சூட்டினால் குழந்தைகளுக்குச் சுரங் கண்டு செரியாமையினால் உடம்பு மெலிந்து, மேல் மூச்சு காணுமோர் வகைக் கணநோய்,** a congenital disease in children attended with swelling, fever, indigestion, weakness, hard breathing etc.

ஊது கணை, see ***ஊது கணம்.***

ஊது கண்டகி, **பூத மரம், இதற்கு ஜாரா மரம் என்றும் பெயர்,** double - coloured grewia — Grewia salvifolia; **2.** ***ஆல மரம்,*** banyan tree — Ficus bengalensis.

ஊது கரப்பன், **குழந்தைகளுக்குக் குளிர் காய்ச்சலுடன் கழலைக் கட்டியைப் போற் கண்டு, பூதம்போல் வீங்கிப் புண்ணாகி மூக்கை யரிக்கும் ஓர் வகைக் கரப்பன்,** an eruptive disease (carpang) in nursing infants characterised by ague, papular eruptions, gradual swelling of the body, inflammation and gnawing of the nose etc — A kind of Strophoulus.

ஊது கரப்பான், see ***ஊது கரப்பன்.***

ஊது கலம், ***உரல்,*** a vessel used for pounding graines for removing husk — Mortar.

ஊது காமாலை, **குடலில் வந்து விழும் பித்த நீர் தடைப்பட்டு**

இரத்தத்திற் கலப்பதனால், உடம்பு வீங்கி, மஞ்சள் நிறமாகத் தோன்று மோர் வகைக் காமாலை. இதனால் சுரங்கண்டு, முகம், கை, கால், முதலியன வீங்கி, இளைப்புக் கண்டு, அடி வயிறு கனத்து, முகம் வெளுத்து, மார்பு வற்றித் தலை நிமிர்ந்து, நாக்குப் புண்ணாகிச் சோர்வடையச் செய்யும், jaundice accompanied by swelling due to some obstruction (mechanical or caused by disease) which prevents the flow of bile into the intestines and as a result of which the bile is absorbed by the blood, and thereby the skin is rendered yellow. It is marked by all the symptoms seen in dropsy such as exhaustion, swelling, anemia, emaciation etc. —Jaundice with dropsy.

ஊது கிரந்தி, மேகத்தினால் உடம்பில் கொப்புளங்கள் எழும்பி வீக்கத்தை யுண்டாக்கு மோர்வகைக் கிரந்தி நோய், an ulcerous swelling in syphilis marked by blisters. It chiefly affects children begotten by parents suffering from venereal complaints — Pemphigus.

ஊது குழல், நெருப்பூதுங் குழாய், a blow-pipe; an iron tube used by gold smiths and also in kitchens etc., to kindle and fan the fire.

ஊது சங்கம், ஓர் வகைச் சங்கஞ் செடி, a plant of the species of Monetia; 2. ஊது சங்கு, white chunk used for sounding as horns are done, a hole being made through the base of it.

ஊது சுருட்டை, ஓர் வகைச் சுருட்டைப் பாம்பு, a snake the bite of which is accompanied by swelling — Echis Carinats (a speciaes of).

ஊதுதல், ஊதல், blowing as is done to fire; 2. நோய் அல்லது வீக்கம், வலி, முதலியவைகள் தீர ஊதுதல், blowing with the mouth. It is a form of treatment for curing certain diseases or for allaying pain, swelling etc., see *ஊதிப் பார்த்தல்;* 3. கும்மட்டி யிலிட்டுதல், refining metals like gold, silver etc. by blowing them as it is being done in a jeweller's pot; 4. வீங்கல், swelling; 5. பருத்தல், to be bloated; 6. நெருப்பு எரியும்படித் துருத்தியால் காற்று எழுப்புதல், blowing with the bellows to kindle a fire.

ஊது திட்டம், மருந்து, உலோகம் முதலியவைகளைத் தயாரிக்கும் பொழுது, துருத்தி கொண்டுதும் கால அளவு, the duration of time and the quantity of heat required for melting metals or for calcining medicines by the process of blowing.

ஊது பாண்டு, உடம்பில் கெட்ட நீர் பரவித் தங்குவதனால் வீக்கத்தை யுண்டாக்கு மோர் வகைப் பாண்டு, a form of dropsy marked by swelling due to accumulation of fluid in the tissues — Cutaneous dropsy.

ஊதுமா, ஓர் வகைத் தித்திப்பான மாக் கூழ், a sweet pasty pudding.

ஊது மாந்தக் கணம், குழந்தைகளுக்குச் செரியாமையினால் சுரம் ஏற்பட்டு அதற்கானும் வீக்கம், a congenital disease in children marked by swelling and fever caused by indigestion.

ஊது மாந்தம், குழந்தைகளுக்கு மூச்சு விட முடியாமல், வயிறு ஊதிக் கொண்டு கழிச்சலுடன், சுரம், வாந்தி, முதலியவைகள் காணு மோர்வகை மாந்த நோய், indigestion in children attended with swelling of the stomach, hard breathing, fever, diarrhoea, vomitting etc.

ஊது முகம், உலோகங்களை யுருக்கும் உலைவாயில், a forge; a melting furnace; 2. உருகி நிற்கும் நிலைமை, the state of fusion; 3. வீங்கிய முகம், swollen or bloated face; 4. பருத்த முகம், bloated face.

ஊது முகான், ஊதற் போன்ற முகத்தை யுடையவன், a person with a plumpy face.

ஊது முறை வரிசை, see *ஊது திட்டம்.*

ஊது யந்திரம், உருக்குவதற்காக உபயோகிக்குங் கருவி — துருத்தி, an instrument, utensil or machine for blowing fires — Bellows.

It is used in melting metals or in calcining metals or metallic preparations,

ஊது வத்தி, பரிமள வத்தி, a scented stick; a rool or mass composed of sweet - smelling resin, spices etc., burnt to disinfect or scent the air in a room — Pastil.

ஊது வழலை, கடித்தவுடன் உடம்பு முழுமையும் வீக்கத்தை யுண்டாக்கு மோர் வகை வழலைப் பாம்பு, a brown snake of southern India, whose bite causes the swelling of the whole body — Lycodontidae.

ஊது வாரம், வெள்ளி, an expression indirectly denoting silver; *2.* வெள்ளிக் கிழமை, a day of the week i.e., Friday.

ஊது விரியன், கடிப்பதனால், உடம்பில் வீக்கத்தை யுண்டாக்கு மோர் வகை விரியன் பாம்பு, a species of viper whose bite developes swelling of the entire body — Viperidae.

ஊது வெள்ளி, ஊதி யெடுத்த வெள்ளி, சொக்க வெள்ளி, purified silver; refined silver — Argentum purificatum.

ஊதுளை, நீர் நிலைகளின் ஓரங்களில் விளையுமோர் வகைப் பூண்டு, a plant found growing generally at the margins of places where water remains stagnant.

See ஊதளை.

ஊதை, காற்று, wind; *2.* குளிர் காற்று, chill breeze or cold blast blowing in the months of October and November; *3.* குளிர்ந்த காற்றினா லேற்பட்ட வாதம், rheumatism usually occuring after exposure to damp or cold or other vicissitudes of the weather.

ஊதைக் காற்று, see **ஊதக் காற்று.**

ஊதை நீர், வாத நீர், a fluid in the system caused by bad humours.

ஊதை வலி, வாதத்தினா லுண்டாகும் வலி, rheumatic pain supposed to be due to morbid fluid in the system.

ஊத்தங் காய், புதைத்துப் பழுக்க வைத்த காய், green raw fruits kept buried under heaps of straw for purposes of ripening them, as of plantains, mangoes etc.

ஊத்தட்டம், உலோகங்களை யுருக்குவதற்காக இடும் நெருப்பு, fire kindled for melting metals. See ஊது திட்டம்.

ஊத்தம், வீக்கம், swelling as of limbs or of body.

ஊத்தல், பித்தளை, brass.

ஊத்தாம் பிள்ளை, மூத்திரப்பை, a thin bag containing the urine; urinary bladder — Vesica urinaria.

ஊத்தாம் பிள்ளை யழற்சி, மூத்திரப்பை யழற்சி, inflammation of the urinary bladder — Urocystitis.

ஊத்தாம் பெட்டி, see **ஊத்தாம் பிள்ளை.**

ஊத்தாம் பெட்டி வீக்கம், see அட்டிலா வாதம்.

ஊத்திரம், தேட் கொடுக்கி, scorpion sting — Heliotropium indicum.

ஊத்தினம், ஊதும் வகையிற் சேர்ந்த உலோகங்கள் முதலியவை, a class of metals or other substances requiring a blow pipe for melting.

ஊத்து, உடம் பூதுதல், swelling of the body.

ஊத்த முறை, see **ஊது திட்டம்.**

ஊத்தை, அழுக்கு, dirt; *2.* ஊன், water oozing from flesh; *3.* சுரோணித நீர், menstrual blood — Catamenia; *4.* பல்லழுக்கு, the dark-brown foul matter which collects on the teeth ordinarily; a compoused accumulation about the teeth in stickness — Sordes; *5.* புல்ால், butcher's meat-fish; *6.* பீநாறி, filth; that which stinks.

ஊத்தைக் கழலல், அழுக்கு வெளிப்படல், coming out, as of dirt from the body; *2.* சுரோணிதம் வெளிப்படல், discharge of menses; *3.* கருப்பை யழுக்கு வெளியேறுதல், impurities which are expelled or cast out from the womb after the birth of the child — After-birth.

ஊத்தைக் கழற்றல், நஞ்சுக் கொடியை வெளிப்படுத்தல், expulsion of the after-birth; *2.* மாதவிடாயை வெளிப்படுத்தல், effecting a menstrual discharge.

ஊத்தைக் குடியன், ஓர் பைசாசம், இது மலம், இரத்தம் முதலிய அசுத்தத்தை யுட் கொள்ளும், a devilry on a person who is tempted to take faeces, blood and other impure excretions or filth.

ஊத்தைச் சரீரம் நாற்ற வுடம்பு, body — an embodiment of filth.

ஊத்தைச் சீலை, சூதகச் சீலை, a piece of cloth stuffed into the vagina for receiving the discharged menstrual blood — Catamenial cloth; *2.* அழுக்குச் சீலை, the piece of cloth placed at the vaginal orifice for receiving excretions immediately after the birth of a child.

ஊத்தை நாறி, பீநாறி, fetid tree — Sterculia foetida; *2.* துர்க்கந்த முடையவள், a dirty woman or a woman ceremonially unclean, said of a woman as a low term of abuse; *3.* வீட்டுக்கு விலக்கமான பெண், a woman in her menses.

ஊத்தை படிதல், *பற்களில் ஊத்தை பிடித்தல்,* the incrustation that forms on neglected teeth; **2.** *பற்களில் பாசி படிதல்,* the greenish or brownish secretions of calcareous matter seen at the roots of the teeth in cases of pyorrhea.

ஊத்தைப் பல், *அழுக்குச் சேர்ந்த பல்,* dirty tooth; **2.** *ஊன் படிந்த பல்,* tooth with the dark-brown foul matter collected on it in low fevers — Sordes; **3.** *சீழ் வடியும் பல்,* tooth with a discharge of pus as in pyorrhoea.

ஊத்தைப் பல்லன், *அழுக்கு நிறைந்த பல்லை யுடையவன்,* a man with unclean or dirty teeth.

ஊத்தைப் பாண்டம், *ஊத்தைச் சரீரம்,* body, full o filth, called contemptously in Philosophy; **2.** *நாற்றம் வீசும் உடம்பு,* body emitting a fetid smell.

ஊத்தைப் பிணம், *அழுக்கு வுடம்பு,* filthy body; **2.** *நாற்ற முள்ள சவம்,* stinking corpse or a decomposed carcase.

ஊத்தை யெடுத்தல், *பல்லினழுக்கை நீக்குதல்,* the cleaning of the teeth effected by dentists in cases of deposits of filth.

ஊத்தை வாசல், *பெண் யோனி,* the vagina from its serving as a passage for the discharge of menses.

ஊந்து, *கச்சோலம், ஏலத் தோல்* the husk of cardamom.

ஊம சிங்கன், *நாவிலுண்டாகு மோர் வகை விரண நோய்,* a disease of the tongue.

ஊமச்சி, *ஊமைப் பெண்,* a dumb woman; **2.** *ஓர் வகை நத்தை,* a kind of snail — Helix pomatia; **2.** *கிளிஞ்சில், இது பல வகைப்படும் அவையாவன:* a shell fish that sticks to rocks; Cockle — Cordium edule. It is of various kinds viz —

1. *சங் கூமச்சி,* a chank — Cymbium.

2. *தேருமச்சி,* a cockle or winding shell — Trochus.

ஊமணா மூஞ்சி, *அவ லட்சண முகம்,* a deformed or ugly face.

ஊமணை, *அழகின்மை, அவ லட்சணம்,* ugliness; repulsive to look at; **2.** *அந்தக் கேடு,* deformity; **3.** *ஊமை,* a dumb person; **4.** *மந்தன்,* an idiot.

ஊமணைச் சட்டி, *சூளையில் நன்றாய் வேகாத சட்டி,* a pot half or partially burnt in the kiln.

ஊமணைச்சி, *ஊமைப் பெண்,* a dumb woman.

ஊமத்தங் கூகை, *பெரிய ஆந்தை,* a very large kind of hooting owl Eptialtes limpigi.

ஊமத்தஞ் செடி, see *ஊமத்தை.*

ஊமத்தம், see *ஊமத்தை; ஊமத்தஞ் செடி,* Datura genus.

ஊமத்தி,
ஊமத்திதம்,
ஊமத்து, see *ஊத்தை.*

ஊமத்தூக நாறி, *பீ நாறி,* see *ஊமத்தை நாறி.*

ஊமத்தை, see *ஊதா ஊமத்தை.*

ஊமத்தை, *ஊமத்தஞ் செடி,* இது 2 முதல் 3 அடி வரைக்கும் உயரும். பூ வெளுப்பு, வெளிப்பக்கம் சிறிது ஊதாநிறம், காய் பந்து போலும், முட்கள் அடர்ந்து மிருக்கும். இது எங்கும் விளையும், இதன் பூவையும் மொக்கையும் தென் தேசத்தில் எல்லா மருந்துக் ... களிலும் விற்பார்கள். இதற்கு நஞ்சின் குணங்கள் உண்டு. ஆதலால் வெகு சாக்கிரதையாய் இதை உபயோகிக்க வேண்டும். இதன் இலையைச் சுவாச காசத்தில் சுருட்டாக வுபயோகிக்கலாம். வீக்கங்களுக்கும் வைத்துக் கட்டலாம். இதன் வேர்ப் பட்டைச் சூரணம் தலை வலியைப் போக்கும். இலைகளை வதக்கிக் கட்ட நாள்பட்ட வீக்கம் கீல் வாயு முதலியன போம்; மாதவிடாய் காலத்தில், இதன் இலை அல்லது விதையை அரைத்துப் பற்று போட வலி நிவர்த்தியாகும். இத அனேக விதமாக விருந்தாலும் குணத்தி லதிகமாக வித்தியாச மிராது. தற்கொலை செய்து கொள்ள எத்தனிப்பவர்கள், இதைத் தின்பதுண்டு. இதன் பாவனத் திரவம் அபினியைப் போல் மயக்கத்தைக் கொடுக்கும். இதன் இலையைக் கஷாய மிட்டு நாய் கடிக்கும் கொடுப்பதுண்டு. இதைச் சிலர் அக்கிக்கும் பூசுவதுண்டு. இதன் பூவைக் கடைகளிற் சில சமயம் மராட்டி மொக்கு என்று விற்பார்கள். இப்பூண்டி னொவ்வொரு அங்கமும் விஷத்தன்மை யுடையதால், இதை வைத்தியர்கள் வெகு சாக்கிரதையாகக் கையாள வேண்டும். இதில் வெள்ளை கருப்பு என இருவகை யுண்டு.

வெள்ளையைப் பார்க்கிலும், கருப்பே சிறந்தது. இதன் இலையை வாத வீக்கத்திற்கும், மேக வீக்கத்திற்கும், வைத்துக் கட்டக் குணந் தரும், ஒற்றடம் கொடுக்க வுதவும். முகத்திலுண்டான நரம்பைப் பற்றிய வீக்கங்களுக்கு இதன் காய்ந்த சருகை எரித்துக் கொழுப்புடன் கலந்து பூசக் குணமுண்டாகும்.

அன்றியும் இது, சீமையினம், நாட்டினமென விருவகைத் தாயினும் குணத்தி லதிக வித்தியாசங் கிடையாது. இது இங்கிலீஷ் மூலிகையான பெல்லடோனாவுக்குச் சமமானது.

அமெரிக்காவில் இந்தியர்கள் சிவந்த ஊமத்தம் பழத்தை ஒருவாறுப் பக்குவப்படுத்திப் பானவகையாகக் குடிப்பதுண்டு. இதன் இலையைச் சாராயத்தில் நனைத்து வலியுள்ள விடங்களில் வைத்துக் கட்ட வலி நீங்கும்.

இதன் இலையின் சாற்றை எண்ணெயிற் காய்ச்சி சரும நோய்க்குப் பூசுவதுண்டு. ஊமத்தைப் புல்லுருவியினால் வசிய முண்டாம்.

கொச்சின் சீனத்தில் இதனின்று கஷாயம் இறக்கி நாய்க் கடிக்குக் கொடுப்பார்கள். இது வயிற்றுப் பூச்சிகளைக் கொல்வ தன்னியில், அக்கி நோய்களுககுப் பூச்சு மருந்தாகவும் உபயோகிக்கக் குணத்தை யுண்டாக்கும். இவ்வினத்தில் கரூமத்தை அகப்படுவது மிக்க அரிது, இதன் குணங்களை விசேஷமாகத் தமிழ் வைத்தியத்தில் சொல்லப்படும். இதில் இரசங் கட்டும், வாதத்திற்குதவும், இவ்வினத்தில் தெரிந்த வகைகள் அடியிற் கூறப்பட்டுள்ளன. Thorn-apple — Datura genus. It is 2 to 3 ft high; flowers large, white inside and slightly blue outside; fruit prickly and round like a ball. It is common everywhere and the dried flowers and buds are sold in all the drug-bazaars of Southern India.

It has poisonous effects and so it should be handled with great care and caution. Leaves are smoked in cases of asthma and are also applied externally in swelling.

The bark of this root is pulverised and given in small doses in head ache. leaves are heated and applied externally in rheumatism and

other nerve affections; leaves and seeds are very useful for women in their menses as a relief from pain. Although they are of various kinds, they do not differ much in their properties. It is eaten by persons if they wanted to commit suicide.

The buds of Datura are sold in some bazaars of Southern India under the name of Maratti moggu (young tender unripe fruits of Eriodendron Anfructicosum). As every part of this plant is poisonous, great caution is necesary when employed by Vaidyans; the seeds used in tinctures give rise to giddiness like opium.

It consists of two kinds — white and black and the latter is far supeiror in quality. The leaves are applied externally to veneral and rheumatic swellings and they are also used in fomentation. Dried leaves mixed with the fat of the pig prove beneficial in relieving neuralgic pains, especially of the face. The two varieties of this plant are native and foreign, but they all posess the same medicinal properties. The plant has properties analogous to those of Belladona (English).

In Mexico, the American Indians prepare a drink from the pulp of the red fruit and use it for causing intoxication. The local application of the leaves of datura relieves pain when applied in the form of an epithem by steeping the leaves in arrack or spirit and placing them over the seat of pain. The juice of the leaves boiled in oil is applied to skin diseases and other cutaneous affections. The parasite of this plant is used in magic to win one's love and affection.

In Cochin-china, a decoction from this is prepared and given for dog-bite. The plant is an anthelmintic and is used externally in herpetic diseases. The black variety — not to speak of the blue or the purple — is very rare and Tamil Medical science seaks highly of its extraordinary properties in consolidating mercury and in its uses in alchemy.

The species best known in Southern India are shown below:—

1. மரு ளூமத்தை, burr weed — Xanthiam indicum alias Orientale alba.

2. ஊமத்தை அல்லது வெள்ளூ மத்தை, common thorn - apple — Datura.

3. ஊதா வூமத்தை, Indian purple datura, Insane plant — Datura fastuosa.

4. சீமை யூமத்தை, Foreign datura; Stramonium — Datura stramonium.

5. கொடி யூமத்தை, Datura creeper — another variety.

6. பேயூமத்தை, see மருளூமத்தை, in No. 1

7. பொன் னூமத்தை, Yellow datura — Datura fastuosa (a variety of).

8. அடுக் கூமத்தை, downy datura — Datura metel, bearing flowers standing one within another.

9. நீல வூமத்தை, see ஊதா ஊமத்தை.

10. கருமத்தை, Black datura — a rare variety (unidentified).

11. மதூமத்தை, Mad plant — Datura fastuosa (typica).

NOTE: In English Medicine; tincture; extract, liniment, plaster and poultice are the chief kinds of preparations from datura; the tincture is a cheap substitute for opium and the extract for that of belladona, The fresh juice of the leaves is a popular houshold application to inflammed breasts and other glandular swellings, Internally, the juice of the leaves is administered with curdled milk in gonorrhoea.

The seeds contain an alkaloid daturine, which is a powerful narcotic anodyne and antispasmodic.

ஊமத்தைக் கட்டு, கட்டிகளுக்காக ஊமத்தை யினின்று தயாரித்த வோர் கட்டு மருந்து, a soft composition of datura applied to sores etc — Datura poultice.

ஊமத்தைக் கூடு, கிளிஞ்சில், bivalve shell.

ஊமத்தைப் பிளாஸ்திரி, ஊமத்தை யினின்று தயாரித்த வோர் சீலை மருந்து, datura plaster.

ஊமத்தை விறகு, சாராயங் காய்ச்சுவதற்கும், வசிய மருந்துகளை எரிக்கவும், உபயோகப்படுத்தும் ஊமத்தைச் செடியின் விறகு, the fuel of Datura plant used for distilling arrack and for preparing love-philtre.

ஊமத் தோதிகம், பூவரசு, portia tree — Thespesia populnea.

ஊமம், see ஊத்தோதிகம்.

ஊமல், கிழங்கு நீங்கிய பனங் கொட்டையின் மேலோடு, the dried shell of the palmyra fruit devoid of its contents.

ஊமற் கச்சி, உலர்ந்த பனங் கொட்டையின் பாதி, a name for one-half of a dried palmyra seed.

ஊமற் கரி, பனங் கொட்டையைச் சுட்ட கரி, the charcoal obtained from palmyra seed.

ஊமன், ஊமையன், a dumb man — Aphasiac 2. கூகை, an owl; 3. பெருங் கோட்டான், a big species of owl.

ஊமாண்டி, ஊமை, a dumb person.

ஊமிகா, see ஊமின்.

ஊமியற் பூடு, வெள்ளைப் பூண்டு, garlic —Allium sativum.

ஊமின், சிறு பூளை, way-side weed — Achyranthes lanata.

ஊமை, கீரி, mungoose — Mungo Ichneu-mon; 2. ஊமன், a dumb person; 3. கிளிஞ்சில், bi-valve shell; 4. சிப்பி, oyster; 5. மகாரம், the mystic letter 'Ma'; 6. மூகை, மூங்கைத் தன்மை, dumbness; 7. மூன்று மாதத்திய கருப்பிண்டம், a foetus three months old.

ஊமைக் கடுப்பு, ஊமை வலி, dull pain.

ஊமைக் கட்டி, முகங் கொள்ளாத கட்டி, an abscess which disappears without breaking or pointing — Blind boil or dry abscess; 2. கூகைக் கட்டி, இதற்குப் பொன்னுக்கு வீங்கி யென்றும் பெயர், இது சாதாரணமாகச் சுரங் கண்டு, காதிற்குள் சீழ் கழுத்தண்டை வீங்கி, மெல்லவும் விழுங்கவும் முடியாதபடி வலிகொண்டு, பிறகு சில நாளைக்குள் தானாகவே மறைந்து விடும் தன்மையது. இதன் காரணம் தெரிய வராது, நமது நாட்டு சனங்கள் இதைப் போக்கப் பொன் நகையை இவ் வீக்கத்தண்டை பொருந்தும்படி யிடுவார்கள் a febrile disease marked by inflammation and swelling of the parotid gland situated near the ear. It is attended with fever, head-ache and pain beneath the ear. The painful swelling interferes with

mastication and swallowing and renders both actions painful; some days after, the symptoms gradually disappear of their own accord without treatment. The causative organsim is not definitely known — Mumps. People of our country wear a gold jewel over the swollen part believing that by doing so, a cure may be effected.

ஊமைக் கணவாய், ஓர் வகைக் கடல் *மீன்*, a species of cuttle — fish — Octapis vulgaris.

ஊமைக் காடை, *ஓர்விதக் காடை*, a slow quail that does not rise at once — Coturnix textilis.

ஊமைக் காயம், வெளிக்குத் தோற்றாது *உட்பக்கம்* கொள்ளும் வீக்கத்தோடு *கூடிய காயம்*, an internal injury arising from blows, without producing any swelling or other visible symptoms on the surface of the skin.

ஊமைக் காய், *உள்ளே பருப்பில்லாத காய்*, any fruit without kernel inside as is that of the palmyra; **2.** *சதைப்பற்றில்லாத காய்*, any fruit without pulp or kernal inside; c.f.a tender cocoanut.

ஊமைக் காய்ச்சல், *வெளிக் காட்டாத சுரம்*, intent or masked fever; dumb ague.

ஊமைக் கிளாத்தி, ஓர் வகைக் கடல் *மீன்*, a sea-fish known as trigger -fish — Monocanthus scriptus.

ஊமைக் கூறன், *ஊமையன் பேச்சு*, the indistinct speech of a dumb man.

ஊமைக் கோட்டான், ஓர் வகைப் *பெரிய கோட்டான்*, a large species of owl.

ஊமைக் கோட்டான் வெயில், மேக *மூட்டத்தில் உறைக்கும்* வெயில், sun's rays felt when the sunshine is obstructed by clouds.

ஊமைச்சி, ஓர் வகைக் கடல் *மீன்*, a light brown - coloured trunk-fish — Ostracion cornutus; **2.** ஓர் வகை *நத்தை*, cockle — Cardium edule. See also *ஊமச்சி*; **3.** ஊமைப் பெண், a dumb woman.

ஊமைச் செவிடு, *சவர்க்காரம்*, a secret term used in Alchemy for fuller's earth; **2.** சிறிது செவிடு, partial deafness; **3.** ஊமைத்தனத்தோடு கூடிய செவிட்டுத் தன்மை, deafness

followed by dumbness; deaf and dumb.

ஊமைச் சொறி, *மிக்கத் தினவை யுண்டாக்கும்* ஓர் வகைச் சொறி, skin disease marked by intense itching — Prurigo.

ஊமைத் தனம், பேச *முடியாமை*, muteness; inability to speak — Mutism; **2.** ஊமையாயிருத்தல், the state of being dumb; dumbness; **3.** மௌனம் சாதிக்குந் தன்மை, the state of being silent; **4.** *உரையாடாமை*, reservedness in speech — Taciturnity; **5.** *உடம்பினுள் காயம் அடைவதால்* பேசுந் தன்மையை இழத்தல், loss of the power of speech due to a central lesion — Aphemia.

ஊமைத் தன்மை, உதடுகள், நாக்கு, குரல்வளையிலுள்ள தொனித் தந்தி முதலியவைகள் பேசுவதற் கிசைந்தபடிச் செயல்பட ஒன்று சேர்ப்பதற்கு முடியாத தன்மை. இது வாயு கோளாறடைந்து, சிலேட்டுமத்தோடு கலந்து, நரம்பு பாகங்களை அநுசரிப்பதனா லேற்படும். இது அடியிற் கண்டபடிப் பலவித காரணங்களால் ஏற்படும், dumbness which is a state in which a person is unable to co-ordinate the action of his lips, tongue and the vocal cords in a way necessary to produce words. It is due to a disease in which the local Vayu which is deranged and saturated with Kapam, stuffs the nerves and thereby producess the loss of the power of speech. It may also be due to other different causes as mentioned below—

1. சாதாரணமாகச் செவிட்டுத் தன்மையால் ஏற்படும் ஊமைத்தனம், dumbness generally due to deafness — Auditory aphasia.

2. குரல்வளை யிலுள்ள தொனித் தந்தி, நாக்கு அல்லது உதடு இவைகளுக்குப் பிறவியிலே ஏற்பட்ட குற்றத்தினா லூமையாயிருத்தல், dumbness due to some congenital defects in the vocal cords, tongue or the lips — Motor aphasia.

3. கருப்பத்தில் பரம்பரையாக ஏற்பட்ட கோளாறினால் மூளையில் கேடுண்டாகி ஊமையாயிருத்தல், இது *அசாத்தியம்*, drumbness in cases where the brain is defective, as

in hereditary diseases. This is incurable

4. பேசத் தெரிந்தும், பேச்சுறுப்புகளுக்கு நோயினால் ஏற்படும் கோளாறுகளினால், கூட்டிப் பேச முடியாத் தன்மை, dumbness in which the patient knows what he wishes to say, but could not utter words on account of inability to coordinate the muscles, because of the disease of the speech-centre — Ataxic aphasia.

5. கர்ப்பிணியாக விருக்கும் போதும் அல்லது பிரசவக் கோளாறினாலும் ஏற்படும் ஊமைத் தன்மை, aphasia during pregnancy or the period of confinement (puerperism) — Puerperal aphasia.

6. பிறக்கும் பொழுது குழந்தைகள் தலை அமுக்குண்டு அதனால் மூளைக் கேற்படும் காயத்தினாலும், அல்லது பெரியோர்களுக்குத் தலையில் காயமுற மூளைதாக்கப் படுவதானாலும், ஏற்படும் ஊமைத்தனம், aphasia due to injury of the brain - centres, as in cases of pressure on the skull of children during birth or in adults receiving a servere blow on the head leading to concussion.

7. சன்னி, பாரிச வாயு முதலிய கொடிய நோய்களில் மூளை தாக்குண்டு அதனா லேற்படும் பேச்சுக் குளறல், aphasia where the brain which is affected becomes defective, as in acute diseses such as apoplexy, paralysis etc.

NOTE: The commonest cause of dumbness is deafness. If the person as a child never hears the sounds of words, he has no guide to from the sound himself. In this case, he may have all the mechanism required for producing correct word sounds but his dumbness will be due entirely to his lack of knowledge of sounds to use. Dumbness in those who can hear normally is due either to some brain abnormality or some congenital defects in the organs of speech.

ஊமைத் தேங்காய், நீராடாத தேங்காய், a cocoanut which does not sound i.e. make a splashing noise when shaken, being full of water; 2. இளநீர்த் தேங்காய் tender cocoanut; 3. உள்ளே ஒன்று மில்லாத தேங்காய், cocoanut without the formation of kernel or of anything inside.

ஊமைப் பூச்சி, அட்டை, leech.

ஊமைப் பூடு, மூன்று மாதத்திய கருப் பிண்டம், (fig) a foetus three months old.

ஊமைப் போரிகம், வேர்ப் பலா, trunk fruit — Artocarpus integrifolia.

ஊமை மரம், மலை வேம்பு, hill-neem — Melia sempervirens.

ஊமை யறுவள், முட்டை, egg.

ஊமையன், பேச முடியாதவன், மூகையான், a speechless man; the dumb; see ஊமன்.

ஊமை யெழுத்து, மனதில் நினைத்து அல்லது தியானித்துக கொள்வ தல்லால் வெளிப்படையாய் உச்சரிக்கக் கூடாத வெழுத்து அதாவது 'ஓம்'. இது தியானத்தில் மனதை ஒருமைப்படுத்த ஏதுவாக விருப்பது மல்லாமல், அலையும் மனதிற்கு ஓர் அமைதியையு முண்டாக்கும். இவ் வெழுத்தினா லெழும்பும் கிளர்ச்சியானது உடம்பினுள்ள அசைவுறாத் தத்துவங்களை யெழுப்புவது மல்லாமல், பரமாணுக்களுக்கும் ஊக்கத்தைத் தந்து, உடம்பைத் தத்துவ ஞானத்திற்குரிய பரிசுத்த நிலையை அடையச் செய்யும், the mystic letter which can only be contemplated or meditated upon but not pronounced audibly outside.

It is the cosmic sound which serves as a medium to concentrate the mind. The meditation on this mystic letter establishes tranquility in the mental plane by controlling the reatlessness of the mind.

The vibrations set up by this letter are so very powerful that they awaken the sleeping forces in the body. They arouse every atom in the body setting up movements until the polarization of the body is entirely altered and reconstructed and as a result of which 'purification' in the occult sense is achieved.

ஊமை யெழுத்து, ஒலி யற்ற எழுத்து, a letter without sound and hence cannot be uttered or pronounced; **2.** *மகாரம்,* it also refers to the letter 'Ma' having the power of attraction. See under **ஓம்.**

ஊமை வலி, *மந்த வலி,* dull pain.

ஊமை வீக்கம், *அடி அல்லது காயத்தினால் வெளிக்குத் தெரியாத உள்ளே யுண்டாகும் வீக்கம்,* contusion or internal swelling without visible sings, due to a blow or a bruise.

ஊமை வெயில், *மேகம் மூடிக கொண்டிருக்கும் பொழுது உறைக்கும் வெயில்,* sultry sunshine obstructed by clouds.

ஊம், *கோபத்தை குறிக்கு மோர் இடைச் சொல்,* an interjection expressing anger, **2.** *ஓர் மந்திர வெழுத்து,*

"ஊம் எனவே உயிராக வுலக மெல்லாம்
உடல் பிறப்பு மொன்றாகி உருவி நின்று'
(திருவள்ளு. நாதாந்த சாரம் 800)

A mantric letter 'oom' the proper utterance of which has some bearing is the evolution of the world; *3.* *ஊமை பேசுவதற்கு முன் தெத்தும் ஒலிக் குறிப்பு,* the ordinary ejaculation of a dumb person; *4.* *மவுனம்,* silence.

ஊம்பல், *சப்புதல்,* sucking or drawing with the mouth; **2.** *ஆண் குறியை வாயாற் சப்புதல்,* a sexual perversion consisting in the act of taking the penis in to the mouth — Fellatio.

ஊம்ப விடுதல், *தன்னுடைய லிங்கத்தை மற்றொருவருடைய வாயிலிட்டுச் சம்பும்படிச் செய்தல்,* introduction of the penis into the mouth, of another person for sucking — Fellatorism.

ஊம்பி, *ஆண் குறியை யெடுத்துத் தன் வாயிலிட்டுச் சப்பும் பெண்,* a female who takes the male organ in to her mouth — Fellatrice. See *சும்பனம்.*

ஊம்புதல், see *ஊம்பல்.*

ஊம்புவோன், *மற்றொருவனுடைய லிங்கத்தைத் தன் வாயிலிட்டுச் சப்புவோன்,* sexual pervert who takes the penis of another into his mouth — Fellator.

ஊயிலை, see *ஊமிகா.*

ஊய்ஞ்சு போதல், see *ஊய்ந்து போதல்.*

ஊய்தல், *பத மழிதல்,* being impaired in quality; **2.** *கனிந் தழிதல்,* to become over ripe.

ஊய்ந்து போதல், *பெருவாரி நோயாலிறத்தல்,* to die in plague or pestilence.

ஊரக மல்லி, *நாக மல்லி* snake-jasmine — Rhinacanthus communis.

ஊரணம், *புருவத்தின் இடையேயுள்ள மயிர்ச்சுழி,* a circle or spiral of hair between the eye-brows; **2.** *சிலந்திப் பூச்சி,* spider.

ஊரண்டி, see *ஊரண்டினார்.*

ஊரண்டினார், *கள்ளி,* spurge; Euphorbia genus; **2.** *ஊமத்தை,* which see; *3.* *ஊரருகே முளைக்கும் பூண்டு,* (lit) herbs or any plant growing near a village; *4.* *நாரி* cocoanut tree.

ஊரத்திகம், *கல் லத்தி,* stone fig — Ficus tomentosa.

ஊரப் பார்த்தல், *விஷ முதலியவற்றைப் போக்குதல், அல்லது மந்திரித்து இறக்குதல்,* to remove the poisonous effect by magnetic passes; to cause to disappear as if by a magician.

ஊரம், *ஊமத்தை,* which see; **2.** *பசலை,* spinach — Portulaca quadirfida.

ஊரல், *காய்ந்து வரும் புண்,* a healing wound; **2.** *கிளிஞ்சில்,* shell fish; bi-valve; *3.* *தினவு,* itching sensation; *4.* *ஓர் வகைத் தேமல்,* spreading yellow spots on the skin not elevated above the surface — Macula; *5.* *படர் தாமரை,* a ringworm on the body — Tinea circinata; *6.* *பசுமை,* greenness; *7.* *குளுவைப் பறவை,* a kind of water bird; *8.* *ஊருதல்,* creeping; *9.* *ஈரம்,* moisture; *10.* *உரிஞ்சல்,* sucking; absorbing. See also *ஊறல்.*

ஊரல் பதம், *பச்சைப் பதம்,* raw state.

ஊரறுகு, *சாதாரணமாக ஊருக்குள் முளைக்கும் அறுகு,* a common grass found grown in a country.

ஊரற் கஷாயம், *பச்சை அல்லது உலர்ந்த மூலிகைகளின் வேர்,*

பட்டை, இலை, பூ, விதை முதலியவைகளை வெந்நீரில் ஊறப் போட்டு எரிக்காமலே வடித்த குடி நீர், the hot or boiling water in which drugs like the root, the bark, the leaf, the flower or the seed whether green or dried has been soaked so as to extract the soluble parts or principles — Infusion.

2. சீதக் கஷாயம், இது மேற்கண்ட முறை படி மூலிகையைக் குளிர்ந்த சலத்தில் ஊறப் போட்டு எரிக்காமலே வடித்த குடிநீர், the cold water in which a drug or some of its part or parts is simply steeped and then strained — Cold infusion.

These are the processes adopted in Ayurveda, but this is not advised in the Tamil Siddha Medicine, in which the drug is boiled in water and then allowed to remain in it for sometime before it is strained.

ஊரற் சொறி, மிக்கத் தினவை யுண்டாக்கு மோர் வகைச் சொறி, a skin diseases marked by small papules and intense itching — Prurigo.

ஊரற் பரி, சேம்பு, இதன் இலையும், கிழங்கும் உணவுக் குதவும், a garden plant with esculent leaves and roots — Caladium nymphaeolium; 2. நீர்ச் சேம்பு, pitnelumbo, another variety.

ஊரற் புண், ஆறாப் புண் an unhealed wound; 2. பச்சைப் புண், a wound in its raw state; 3. தினவெடுத்து நீர்க்கசியும் புண், itching sore.

ஊரற் றடிப்பு, தினவுண்டாகி எழும்பும் தடிப்பு, a skin disease marked by smooth elevated patches and severe itching — Nettlerash.

ஊரா, ஊர்ப் பசு, a country cow as opposed to காட்டுப் பசு, a wild cow.

ஊராமை, பெண்களுக்குக் கருப்பை யிலுண்டாகி ஆமையைப் போல் ஊரும் கட்டி. இதை கெண்டைக் கட்டி யென்றும், வல்லைக் கட்டி யென்றும் சொல்வதுண்டு, a tumour developing in the uterus and crawling like the tortoise — Ovarian tumour. See கெண்டைக் கட்டி.

ஊராம்பல், ஓர் வகை மகோதரம், இதனால் மேல் வயிறு பொருமி, முகம் வெளுத்து, உடம்பு களகளத்து, தலை பாரம், மயக்கம் முதலிய குணங்கள் உண்டாகும், *(யூகி முனி 800)* a dropsy of the abdominal cavity marked by swelling, paresthesia or rumbling noise in the upper portion of the stomachic region, paleness of the face, low fever, heaviness of head, giddiness etc. — A kind of Ascites, c.f. நீராம்பல்.

ஊரி, மேகம் cloud, 2. கிளிஞ்சில், shell - fish; 3. சங்கு, a spiral shell - fish or its empty shell; conch; 4. இளமை youth; 5. தேள் கொடுக்கு, the sting of a scorpion; 6. புல்லுருவி, a parasitic plant — Loranthus genus.

ஊரி லுசரன், தூக்கணாங் குருவி, a kind of sparrow which lives on the top-most branches of tall trees — Pandulus.

ஊரி லுப்பு சோற்றுப்பு, common salt.

ஊரு, அட்டை, leech; 2. தொடை, thigh.

ஊருகால், சங்கு shell fish or its empty shell; 2. நத்தை, snail.

ஊருகிலானி, தொடையின் பலவீனம், weakness of the thigh.

ஊருக்கிரகம், தொடை வாதம், paralysis of the thigh. See ஊருத்தம்ப வாதம்.

ஊரு சுத்தி, கழுதை, ass. See ஊர் சுத்தி.

ஊரு சுத்திப் பால், கழுதைப் பால், asses' milk.

ஊருடம், see ஊருடை.

ஊருடன் முதலி,

ஊருடன் முதலியார், முருங்கை, Indian horse- radish tree — Morniga pterygosperma.

ஊருடன் மூலி, see ஊருடன் முதலி.

ஊருடை, see ஊருடன் முதலி.

ஊருதல், தவழ்தல், to crawl as an infant does; 2. நகர்தல், to creep as an insect does.

ஊருத் தம்பம், தொடை சுவர்ணை யற்றுத் தம்பித்துப் போதல், (lit) numbness of the thighs.

ஊருத்தம்ப வாதம், ஓர் வகைத் தொடை வாதம், இதற்கு மகாவாதம் என்றும் பெயர். இத உணவுக் குற்றத்தினாலும், பகல்

நித்திரை, இரவில் தூக்க மின்மை, முதலியவைகளினா லும் பிறந்து, ஆமத்தைக் கிரகித்துத் தொடைகளில் வாயு பரவித் தொடை மரத்தல், களத்தல் முதலிய வெவ்வேறு குணங்களைக் காட்டும், paralysis of the thigh or thighs characterised by loss of motion and sensation arising from the deranged condition of Vayu in the lower part of the body. It is due to errors in diet, day sleep, want of sleep during nights, etc.

It is also said to caused by irritation of the nerve-centres due to the spreading of Vayu in the region of the thighs as a result of the absorption of the unassimilated chyle carried to the lower limbs — Crural paralysis.

NOTE: Some authros define it as a swelling in the region of the thigh, caused by deranged Vayu sub-charged with the local fat. It is marked by lassitude, aching pain in the limbs, somnolence, numbness, heaviness and unseadiness in the thighs which appear foreign to the body, etc.

ஊருத் தம்பை, வாழை, planatin tree — Musa paradislaca.

ஊரு பருவனம், தொடையின் மூட்டு, the joint of the thigh.

ஊரு பலகம், தொடை யெலும்பு, thigh-bone; 2. இடுப்பெலும்பு, the hip-bone.

ஊருப்பு, சாதாரணமாக நாம் உணவி லிட்டுக் கொள்ளும் சோற் றுப்பு, common salt used in food — Sodium Chloride (Nacl).

ஊருப்புக் குற்றம், சோற்றுப்புக்கு இயல்பிலேயே அமைந்த நான்கு வகைக் குற்றங்கள் அல்லது தோஷங்கள், அவையாவன— The four inherent defects or bad qualities of common salt when consumed are:

1. உடம்பில் கசி வுண்டாதல், emitting moisture.

2. வியர்வை கக்கல், secretion of perspiration.

3. அமுரியி லிறங்கல், absorpiton in the urine

4. நரை யுண்டாக்கல், causing grey hairs.

ஊரு வஸ்தம், தொடை யெலும்பு, thigh bone.

ஊரு வாதம், சீதளத்தினா லுற்பத்தியாகித் தொடை நரம்புகளை அனுசரித்துக் குத்தல், குடைச்சல் வலி முதலியவைகளை யுண்டாக்குமோர் தொடை வாதம், a painful affection of the large nerve (sciatic) of the thigh marked by acute and agonising pain due to cold — Sciatica. It is sometimes confounded with rheumatism.

ஊருவார், வெள்ளிரிக்காய், cucumber — Cucumis sativus.

ஊருவார் பயன், see ஊருவார்.

ஊரேறு, ஊர்ப் பன்றி, country pig, domesticated pig.

ஊரை, காம மரம்; பேயீந்து, Malayan fernpalm — Cycas circinalis.

ஊர், வசிக்கு மிடம், கிராமம் அல்லது பட்டணம், residential places such as village city or town; 2. இது 'நாட்டு' என்பதைக் குறிக்க வேண்டிப் பிராணிகளின் பெயர்களுக்கும் பூண்டுகளின் பெயர்களுக்கும் முள்ளதாக உபயோகப்படு மோர் உபசருக்கம். It is a prefix used in the names of plants and animals to signify belonging to 'country' as in ஊர்க்கள்ளி, ஊர்ப்பன்றி முதலியன. It is opposed to 'காட்டு' which means 'wild'.

ஊர்க் கங்கை, குளம் அல்லது ஆற்று நீர், tank water or river water.

ஊர்க் கல், சுக்கான் கல், lime-stone.

ஊர்க் கள்ளி, ஓர் வகைக் கள்ளி, அதாவது கொம்புக் கள்ளி, any spurge, of the Enphorbia genus grown near a village or in a country, but it generally refers to the creeper kalli — Sacrostemma intermedium; 2. இபேக நாதமூலி, a plant (unidentified).

ஊர்க்கற் செம்மை, புடமிட்ட நிலைமை, refined state, as of gold.

ஊர்க் காரம், உவர் காரம், fuller's earth.

ஊர்க் குருவி, அடைக்கலங் குருவி, which see; 2. சிட்டுக் குருவி, another kind of sparrow.

ஊர்க் கூரம், பாகற் காய், bitter fruit — Mimordica charantia.

ஊர்க் கொள்ளை, *ஊழி நோய்,* a disease affecting the population of a village or a town or even a country — Epidemic.

ஊர் சுத்தி, *கழுதை,* ass.

ஊர்சுத்திப் பால், *கழுதைப் பால்,* asses' milk.

ஊர்சுத்தி யமுரி, *கழுதை மூத்திரம்,* asses' urine.

ஊர்ச்சங் கிழங்கு, *கார்த்திகைக் கிழங்கு,* the root of November - flower plant — Gloriosa superba (root of).

ஊர்ச்சசம், *பலம்* strength.

ஊர்ச்சம், *கார்த்திகை மாதம்,* the Tamil month corresponding to November; 2. *உயிர்,* life; 3. *மூச்சு,* breath.

ஊர்ச்சித சித்தம், *திடமானமானது,* strong or powerful mind.

ஊர்ச்சுற்று, *நகச் சுற்று,* a malignant disease of the nail-bed — whillow.

ஊர்ண நாபி, ஓர் வகைச் சிலந்திப் பூச்சி, a kind of spider clothed with a downy substance resembling wool.

ஊர்ணம், *ஆட்டு மயிர்,* sheep's hair; 2. *புருவ நடுச் சுழி,* the spiral or curve between the eye-brows.

ஊர்ணாயு, *ஆடு* sheep; 2. *சிலந்திப் பூச்சி,* see *ஊர்ண நாபி.*

ஊர்தல், ஊருதல், crawling as an insect does 2. *தவழ்தல்,* creeping on all fours as an infant does; 3. *தினவெடுத்தல்,* itching; 4. *பரவுதல்,* spreading in the system, as of blood; 5. *வடிதல்,* flowing or dripping as does juice from a sugarcane or an overripe fruit; 6. *உடம்பில் படருதல்,* extending over the surface of the skin; 7. *கழலுதல்,* to be loosened as in the flow of semen.

ஊர்தி, *எருது,* bull.

ஊர் திறம், ஓர் வகை இழிந்த கெம்புக் கல், an inferior kind of ruby used in the setting of a jewel.

ஊர்த்த சுவாசம், see *ஊர்த்துவ சுவாசம்.*

ஊர்த்துவ கத தோஷம், *அபான வாயு, பித்த கபஸ்தானங்களிற்கு மேல் நோக்கிச் சென்று பீனிசம், இருமல் முதலியவைகளோடு கூடிய*

இளைப்பு, தோளில் நோவு, தலை நோய், குரற் கம்மல், அரோசகம் என்னும் ஆறுவகைக் குணங்களையுங் காட்டுமோர் வகைச் சய ரோகம், a morbid affection arising from the bad humours chiefly of vatha and bile. It is marked by the following six symptoms viz — Catarrh, cough with fatigue, pain in the scapula, head-ache, sore-throat and loss of appetite.

The bad humour is said to be due to the ascent or the up-coursing tendency of the vital air called 'Apana' from the pelvic to the thoracic and the cerebral regions.

ஊர்த்துவக கதம், *(ஊர்த்துவம் + கதம்),* மேல் செல்லல், rising upwards; 2. மேல்முக நோக்கம், upward tendenncy.

ஊர்த்துவகதி, கீழிருந்து மேல் செல்வது, that which passes upwards.

ஊர்த்துவ கந்தம், தண்ணீர் விட்டான் கிழங்கு, climbing asparagus — Asparagus racemosus.

ஊர்த்துவ கமனி, மேலெழும்பி ஆகாய மார்க்கத்திற் செல்பவன், one who ascends in the aerial regions.

ஊர்த்துவ காயம், உடம்பின் மேற் புறம், the upper part of the body as opposed to *அதோ காயம்,* the lower part; 2. மேனோக்கிய முகம், the face in or the lock towards the upward direction; organs facing up wards; 3. *மானிட தேகம்,* the human body.

ஊர்த்துவ குதம், குடல் வாதம், குடற் சூலை முதலிய நோய்களில் மலம் கீழ் நோக்கிச் செல்லத் தடைபட்டு வாயின் வழிப்படுத்தும் குடல் ரோகங்கள், diseases of the bowels as in iliac passion, strangulated hernia etc., in which fecal matter rises upwards through the alimentary canal and the evacuation of the bowels is effected through the mouth instead of through the anus, due to some obstruction (mechanical or functional); 2. தொப்புளின் கீழிருக்கும் அபான வாயு, பலவித நோய்களின் காரணங்களை முன்னிட்டு மேல் நோக்கிச் செல்லுவதனால் வாயில் நாற்றம் முதலிய குணங்களை யுண்டாக்கும் ஓர் வகை நோய், a disease due to the vital air 'Apana' passing,

upwards through the alimentary canal from various causes. It is marked by fetid smell in the mouth.

NOTE: It is said that the air or gas generated in the intestines assumes an upward tendency and leaves the body through the mouth instead of through the anus.

ஊர்த்துவ கேசம், *மயிர்க் கூச்சலிடல்,* having the hair erect; horripilation.

ஊர்த்துவ சிதம், *பாகற்காய்,*balsam pear — Mimordica charantia.

ஊர்த்துவ சீலம், *நெருப்பு,* fire having a tendency to pass or spread upwards.

ஊர்த்துவ சுவாசம், *மூச்சு மேனோக்குவதால் தலை குனிய வொட்டாது, முக நரம்புகள் உப்பி, மேல் பார்வை, மயக்கம், பேச முடியாமை என்னும் குணங்களைக் காட்டு மோர் வகை இரைப்பு நோய்,*a kind of asthma attended with hard-breathing. It is accompanied by the following symptoms viz — inability to bend the head, swelling of the facial nerves, upwards look, giddiness, want of adequate, power to talk, etc; **2.** *மேல்மூச்சு,* hard breath; short breath as of a dying person.

ஊர்த்துவ தேகம், *நாபிக்கு மேற்பட்ட வுடம்பின் பகுதி,* that part of the body above the navel region; the upper part of the body.

ஊர்த்துவ நயனம், *சரபப் பட்சி,* a fabulous bird.

ஊர்த்துவ பாகம், *மேல் பாகம்,* the upper part; the higher part.

ஊர்த்துவ பாதம், *மேனோக்கிய பாதத்தை யுடைய எட்டுக்காற் பூச்சி,* a spider with legs turned upwards.

ஊர்த்துவ பாதனம், *சூடுண்டாக்கி ஆயாக மாற்றி மேலெ ழும்பும்படிச் செய்தல், அதாவது பதங்கித்தல்,* (in Medicine) a process by which a solid substance is raised or converted by heat into vapour, and then condensed again into a solid — Sublimation; **2.** *இரசம் மேலே எழும்படிச் செய்தல்,* the act of causing mercury to rise up; **3.** *இரசப் பதங்கம்,* sublimation of mercury.

ஊர்த்துவ பாதன யந்திரம், *அடிப் பாத்திரத்தில் இரசம் முதலிய வஸ்துவை யிட்டு ஆவியாக்கி மேற் பாத்திரத்திற் படியும்படிச் செய்வதற்குப யோகிக்கு மோர் உபகரணம்,* an apparatus or vessels used in the process of vaporizing and condensing substances such as mercury etc. — Sulimatory.

ஊர்த்தவ பித்தம், *மேனோக்கிய பித்தம்,* bile tending to pass upwards.

ஊர்த்தவ பித்த ரோகம், *ஓர் வகைப் பித்த நோய். இதனால் அதிக கோபம், சதா சண்டை செய்யும் சுபாவம், இரைந்து கூவுதல், பேதி, பிரமை, கண் சிவத்தல், தூக்கமின்மை, உடம்பு பருத்தல் முதலிய குணங்களுண்டாகும்,* a disease caused by the bile taking an upward course in the system. It is characterised by fierce anger, quarrelling nature, boisterous semperament, diarrhoea, mental excitement, blood-shot eyes, sleeplessness, swelling of the body etc.

ஊர்த்துவ பிரகன நாளம், *காரிரத்தத்தை மேனோக்கிக் கொண்டு போகும் ஓர் பெரிய நாளக் குழாய்,* one of the two great venous trunks going upward — Superior vana cava.

ஊர்த்துவ மந்தினம், *விந்து கீழ் நோக்காமை,* keeping or restraining the semen from flowing out i.e. abstaining from sexual intercourse.

ஊர்த்துவ மாயை, *சுத்த மாயை,* Absolute Maya as opposed to *அதோ மாயை அல்லது அசுத்த மாயை,* the non-absolute or the Material Maya.

ஊர்த்துவ முகம், *மேனோக்கிய முகம்,* an upward direction; towards a higher place; **2.** *அண்ணாந்த முகம்,* an upturned face.

ஊர்த்துவ முக ரத்த பித்தம், *ஓர் வகை இரத்த பித்த நோய், இதனால் உடம்பினி லுள்ள இரத்தமானது மேனோக்கிக் கண், செவி, மூக்கு, வாய் முதலிய மேலுறுப்புகளின் வழியாய் வெளி வரும்,* hemorrhage, in which the blood escape from the body through the openings of the organs in the upper portion of the body, i.e. the eyes, the nose, the ears, and the mouth; **2.** *நாளங்களி லேற்படும் இரத்த வொழுக்கு,* escape of blood from a vein — Venous hemorrhage. It is opposed to arterial hemorrhage.

ஊர்த்துவ முக வாதம், முகத்தை அண்ணாந்தபடி யிருக்கச் செய்யும் ஒரு வகை வாத நோய், paralysis turning the face upwards.

ஊர்த்துவ முக வாதம், மலபந்த வஸ்து, பகல் நித்திரை, சதா படுக்கை அல்லது உட்கார்ந்திருத்தல், மலசலம் அடக்கல் முதலிய காரணங்களை முன்னிட்டுக் கீழிருக்கும் அபான வாயு விசை கொண்டு, மேனோக்கிச் சமானனென்னும் வாயுவோடு கலந்து மேல் வயிற்றையும், மார்பையும், கையையும் பற்றி நிற்குமோர் வகை வாத நோய்.

இதனால் எலும்பில் வலி, குடல், விலா, முகம் இவ்விடங்களில் வலி, வயிற்றுப் பிசம், கனத்தல், மரத்தல், தாள் வாய்ப் பிடிப்பு, நடுக்கல், அறிவின்மை, பிரலாபம், வாயில் நுரை தள்ளல் முதலிய கெட்ட குணங்கள் ஏற்படும், a partial paralysis affecting the various muscles of the arm or the chest wall. It is said to be due to the upward determination of one of the vital airs called the 'Apana' which enters the thoracic region, where after combining with the local agent called 'Samanan'; it brings about the affection of the stomach and the chest. This may also be due to various other extraneous circumstances such as, bad food or other eatables tending to constipate the bowels, day sleep, constant lying on the bed without sufficient movement, sedantary habits, suppression of urine or stool, etc.

The symptoms of this disease are:— pain in the bony structure, and also pain in the bowels, the sides and the face, distension, of the stomach, heaviness of the body, numbness, lock-jaw, tremor, loss of senses, raving, frothy discharge from the mouth, etc.,

NOTE: Samana is a form of Prana. It is the agent of digestion and assimilation and is situated in the digestive organs. It not only controls the above said functions but it also helps in the transformation of chyle into blood and in the spreading or the distribution of energy throughout the body.

'Apana' another form of Prana is located in the lowest organ of excretion (in the rectal region). It controls the organs of evacuation and generation.

ஊர்த்துவ முக விரத்த வொழுக்கு, நாளத்தின் வழியாக மே னோக்கிய முகமாக இரத்தம் வெளிவருதல், escape of blood from a vein with an upward flow as opposed to அதோமுக விரத்த வொழுக்கு, that from an artery with a downward flow.

ஊர்த்துவம், மேல், upwards; 2. மேலெழும்பல், rising or tending upwards; 3. மேலே வைக்கப்பட்டது, anything placed higher or above; 4. நிமிர்ந்திருப்பது, that which is erect.

ஊர்த்துவ யந்திரம், பதங்கத்திற் குபயோகிக்கும் கருவி, an apparatus used in sublimations especially in that of mercury.

ஊர்த்துவ ரேதசு, சுக்கிலம் நஷ்டமுறாதபடி மேல் முகமாக நோக்கச் செய்பவன், he who keep up the semen so as not allow it to flow or escape downwards; this can be by done only by yogis. It is an art practised by Hatha yogis for purposes of rejuvenation; 2. பெண்ணிச்சையைத் துறந்தவன், one who has abstained from sexual intercourse Celebate; 3. கீழ் முகமாக நோக்காமற்படிக் கட்டிய விந்து, restrained semen.

ஊர்த்து வாங்கம், (ஊர்த்துவம் + அங்கம்) உடம்பின் மேற்பகுதியி லிருக்கும் அவயவங்கள், organs referring to the upper part of the body; 2. உடம்பின் மேற் பாகம், the upper part of the body i.e. the part above the abdomen or the waist.

ஊர்த்துவா மிச்சிர வாதம், உடம்பினுள் ளடி வயிற்றிலிருக்கும் அபான வாயு, மேல் முகமாக நோக்கிச் செல்வதால், தலைவலி, தலை கனத்தல், கழுத்து மரத்தல், முதலிய குணங்களை யுண்டாக்குமோர் வகைத் தலையைப் பற்றிய வாத நோய், neuralgia affecting chiefly the head or the facial region. It is marked by head-ache, heaviness in the head, loss of sensation, numbness of the neck, etc. It is due to the upward tendency of the vital air Apana and its passage through the upper portion of the body

ஊர் நாளம், கரடி, bear.

ஊர்ப் பன்றி, *நாட்டுப் பன்றி,* country or village pig; domestic pig as opposed to *காட்டுப் பன்றி,* wild pig or boar.

ஊர்ப்புலம், *ஆமணக்கு,* castor plant — Ricinus communis.

ஊர்ப்புல், *ஓர் வகைப் புல், இது கோரைக் கடுத்தது. 3 முதல் 6 அடி உயரம். மூன்று மூலையுள்ளது. மிருதுவா யிருக்கும். அனேகம் பூக்கள், விதை முக்கோணம், பள்ளத் தாக்குகளிலும், குளங்களி னோரங்களிலு முள்ளது. இது கோரையைப் போல் பாய் முடைய உதவும்,* creeping sedge grass — Cyperus pangoral alias Paphyrus pangoral. Next to Rotandus *(கோரை)* it is a very useful species; 3 to 6 ft high; three sided; smooth; seeds elliptically triangular; common in ditches and borders of tanks. Mats are made from this grass and sold chiefly in Calcutta.

ஊர்ப்புள், *ஊர்க் குருவி,* house-sparrow — Passer domesticus. See *அடைக்கலாங் குருவி.*

ஊர்மி, *வயிற்றின் மடிப்பு,* the folds of the abdomen; 2. *இன்ப துன்பங்களின் அலைவு,* the wave of pain or passion; 3. *உயிர் வாழ்க்கைக்கு ஏற்பட்ட ஆறுவித நிலை மாற்றங்கள்,* the six waves of existence viz — cold and heat of the body, greediness, illusion of the mind, hunger and thirst, of life. According to some others this varies into hunger, thirst, decay, death, grief and illusion.

ஊர்வசி, *தெய்வ லோகத்து நாடகப் பெண்கள் நால்வருள் ஒருத்தி, இவள், தமிழில், வாதம், சாலம், முதலியவைகளைப் பற்றி நூற்களை இயற்றியவள்,* one of the four beautiful maidens in the Celestial world renowned for their skill in dancing. She is the author of several works in Tamil on Alchemy and Magic.

ஊர் வரப்பன், *வெள்ளரி,* cucumber — Cucumis sativus.

ஊர்வன, *ஊரும் செந்துக்கள்,* creatures that creep or move on belly — Reptiles; all creatures belong to the class of Reptilia.

ஊர் வாசுகி, *சிறியாணங்கை,* snake - root plant — Polygala glabra.

ஊர் வாரிக் காய்ச்சல், *ஒரே ஊரில் ஏக காலத்தில் பல மனிதரைத் தாக்கி நோயுறச் செய்வது மன்றி, மிகுந்த சேதத்தையு முண்டாக்கும் ஓர் வகை தொத்துக் காய்ச்சல். இது கெட்ட காற்றினால் ஏற்படுவதாகக் கருதப்படும்,* an infectious fever occuring in extensive epidemics or pandemics attacking in numerable people in any region or regions at the same time. The disease is supposed to be due to a bad wind or contaminated atmosphere arising through the influence of the elementals in nature or other demons. See *ஊழிக் காய்ச்சல்.*

ஊவைக் காய், *ஓர் தித்திப்புக் காய், அக்ரோட்டு,* which see.

ஊழகம், *விடியற்காலை,* morning twilight; dawn.

ஊழ நாற்றம், see *ஊழல் நாற்றம்.*

ஊழ லாற்றி, *காட்டில் வளருமோர் வகை மரம். இது அழுகிய புண் புரைகளை ஆற்றும் குணம் வாய்ந்ததா லிதற்கிப் பெயர்,* a medicinal tree found in forests. It is so called from its virtue of curing sloughing ulcers or sores; 2. *(ஊழல் + ஆற்றி) ஊழ்த் தசையை மாற்று மருந்து,* any medicine or application capable of curing sloughing ulcers or wounds.

ஊழ லித்த, *பாண்டலான* having a stinking smell — Rancid.

ஊழலித்தல், *இளைத்தல்,* to be reduced or emaciated as from disease; 2. *பதனழிதல்,* to get rotten; to be decayed as meat fish, fruits etc do; 3. *சோர்வடைதல்,* to get dejected in mind; 4. *அருவருத்தல்,* to loathe; to be disgusted with.

ஊழலிப்பு, *பதனழிவு,* the state of being rotten; putrefaction.

ஊழலுடம்பு, *நாற்ற வுடம்பு* stinking body; 2. *அழுக்கு நிறைந்த வுடம்பு* body full of of filth; 3. *பருத்துத் தளர்ந்த வுடம்பு,* a stout and soft body hanging loose for want of firmness; a body with relaxation of muscles.

ஊழல், *அசுத்தை,* filth; 2. *கெட்டுப் போனது,* that which is rotten or decayed; 2. *சேறு,* mire.

ஊழல் நாறி, *மாதவிடாய்ப் பெண்,* a woman in her menses; 2. *நாற்ற வுடம்புள்ள பெண்,* a woman with a stinking body, said of a woman

in a low term of abuse. See ஊத்தை நாறி.

ஊழல் நாற்றம், கெட்ட வாசனை, putrified or rotten smell. A term usually used for rancid ghee.

ஊழல் மூக்கு, சதா சளி வடியும் மூக்கு, runing nose; the free discharge of a thin nasal mucous — Rhinorrhea.

ஊழறுதல், ஊழ்வினைப் பயன் நீங்குதல், (in Philosophy) liberation from Karma; 2. உடம்பினின்று அழிந்த நாற்ற முள்ள வஸ்துக்கள் அகலல், (In Medicine) discharge of foul matter from the body.

ஊழறுத்தல், வினைப் பயனை நீக்குதல், renunciation of Karma; 2. உடம்பிலுள்ள மாசுகளை அகற்றல், to remove filth or obnoxious matter from the system; 3. துன் மாமிசம், சீழ் முதலியவைகளைப் புண் புரைகளினின்று வெளிப்படுத்தல், (In Surgery) removal of purulent and putrid matter from an ulcer, abscess, etc.

ஊழற் சடதை, உடம்பு பருத்துத் தளர்வதனால் தொங்கும் சதை, flesh hanging loose owing to flabby nature; 2. துன் மாமிசம், proud flesh; 3. நாற்ற முள்ள சதை, rotten flesh.

ஊழற் சரீரம், பருத்துத் தளர்ந்த வுடம்பு, body grown beyond the proper or natural size; 2. நாற்ற வுடம்பு, stinking body.

ஊழ னாற்றம், கெட்ட நாற்றம், bad or offensive smell.

ஊழி, நெடுங் காலம், a very long time; 2. வாழ் நாள் life time; 3. விதி fate; 4. உலகம், world.

ஊழிக் காய்ச்சல், ஊரையே பற்றி நிற்கும் தொற்றுக் காய்ச்சல், an acute infectious epidemic disease marked by depression and distressing fever. It occurs in extensive epidemics or pandemics such as infleuenza, Plague, Pestilential fever etc., spreading throughout a country.

NOTE: It is supposed to be produced by a contaminated wind arising from the mischief of a malignant demon.

ஊழிக் காரம், இரசம், mercury — Hydrargyrum.

ஊழிக் காற்று, நச்சுக் காற்று, pernicious wind which is noxious to the society; a season of extensive prevalence of any particular disease.

ஊழிக் குருதி, விழுதி, unfoliate chilli — fruited caper — Cadaba indica.

ஊழித் தீ, வடவா முகாக்கினி, submarine fire; 2. கொடுந் தீ destructive fire 3. காட்டுத் தீ, wild fire.

ஊழி நாள், முடிவு நாள், period of termination.

ஊழி நோய், பெரு வாரி நோய், இது கெட்ட தேவதைகளின் செயலால் நேரிடு மெனக் கொள்ளப்படும், deadly epidemic disease which affects several persons in the whole country or in a particular community at the same time. It is supposed to be caused by the influece of demons; 2. ஊழிக் காற்றினால் ஏற்படும் தொற்று நோய்கள், infectious diseases such as plague, cholera, influenza etc., said to be caused by contaminated wind.

ஊழியங் கொள்வான், இரசம், mercury.

ஊழிலை, காய்ந்த இலை; சருகு dead or dried leaves.

ஊழுறுதல், குடைதல், scooping out as in carbuncles.

ஊழுழி காலம், யுகாந்தவரை, duration without end — Eternity; 2. (ஊழி + ஊழி + காலம்) நீடூழி காலம், very, very long time, denoting the longest period imaginable.

ஊழை, பித்தம், bile.

ஊழைக் கழிச்சல், பித்தக் கோளாறு, ஈரல் நோய், உணவின் குற்றம் முதலிய காரணங்களை முன்னிட்டு ஏற்படும் பித்தக் கழிச்சல், bilious diarrhoea due to the deranged condition of bile, congestion, inflammation, etc., of the liver and imprudence in diet — Irritative billious diarrhoea.

ஊழைக் காசம், பித்தக் கோளாறினால் உடம்பில் கனல் மிஞ்சி ஏற்படும் காச நோய், இது சம்போக மிகுதியினால் உண்டாகும், asthma arising from excessive heat in the body due to the deranged condition of bile. It is supposed to be caused by indulging in sexual intercourse to excess.

ஊழைக் காய்ச்சல், பித்த சுரம், fever arising from the deranged condition of the bile in the system due to

complications of the liver — Bilious fever.

ஊழைக் குருத்து, துளசி, holy basil — Ocimum sanctum.

ஊழைக் குன்மம், ஈரலுக் கேற்படும் அழற்சியினால் பித்தக் கோளாறுண்டாகி, அதனால் சூலை நோய், பசியின்மை, வாயு பொருமல், வெளுத்த முகம், பலவீனம் முதலியவைகளை யுண்டாக்கும் பித்த குன்மம், dyspepsia due to chronic inflammation of the liver. It is marked by occassional pains of a shooting character, loss of appetite, flatulence, sallow countenance, debility etc.

ஊழைச் சுரம், See ஊழைக் காய்ச்சல்.

ஊழைச் சூலை, பித்த வாந்தியோடு கூடிய வயிற்று வலி, severe griping pain in the bowels attended with vomiting of bile — Bilious colic.

ஊழை வாந்தி, பித்த குன்மம், சூலை நோய், முதலிய நோய்களிற் காணும் பித்தத் தோடு கூடிய வாந்தி, vomiting in which the vomited matter is marked by the presence of bile as in dyspepsia, biliousness, colic, etc.

ஊழ் வெயில், snu shine; 2. குணம், disposition; temper; 3. மலர்ச்சி, blossoming; 4. முதிர்ச்சி, maturity; 5. முடிவு, termination; 6. பகை hatred; 7. பழவினை, Karma or deeds in former or previous births; 8. பழவினைப் பயன், the result of Karma; 9. பதனழிவு, rottenness; 10. பழமை, oldness.

ஊழ்தல், முதிர்தல், growing old; the passing off of life.

ஊழ்த்த, புழுத்த, புழு வரித்த, worm eaten.

ஊழ்த்த கண்டகி, (ஊழ்த்த + கண்டகி = உளுத்த + முள்ளெலும்பு) முதுகின் முள்ளந் தண்டு எலும்புகள் மெதுவாகி நொறுங்கி அழிவ துடன், கட்டி யுண்டாகிச் சுற்றிலுமுள்ள சதையும முகிப் புரையோடி, சதா இரத்தமும் சீழும் வடியுமோர் வகை நோய், a disease attended with decay or death of the vertebrae which become softened and subsequently crushed. It is marked by cold abscess which burrows into the surrounding tissues, forming a sinus, from which is discharged fetid pus and blood constantly — Spinal caries.

ஊழ்த் தசை, புலால் flesh; 2. துர் மாமிசம், proud flesh; 3. அழுகிய தசை, decompossed flesh; 4. தீச்சுட்ட புண், இரத்தக் குறைவு முதலியனவால் உடம்பில் ஏற்படும் அழுகிய தசைப் பாகம், the mortification of flesh in a part of the body due to direct destruction by burns or to lack of sufficient blood supply etc. — Gangrene.

ஊழ்த்த நோய், ஆட்டின் ஈரலுக் கேற்படுமோர் நோய், a disease of the liver in sheep.

ஊழ்த்தல், ஊன், flesh of all kinds; 2. பதனழிவு, decaying; a slip of the proper time in cooking or preparing anything; 3. புலால் putrid meat or fish; 4. முதிர்தல், to grow old or to pass the prime of life; 5. முடை நாற்றம், stench; 6. வாடுதல், withering; 7. மடித்தல், perishing; 8. பருவம், seasonable time.

ஊழ்த்த வக்கரம், குழந்தைகளுக்கு வாய், உதடு, கண் ணிமை முதலிய இடங்களிலுள்ள உட் சவ்வின் அழற்சியினால் கொப்புளங்கள் எழும்பி, நாற்றங் கண்டு துன்புறுத்து மோர் விரண நோய், a disease in children marked by the development of foul ulcers on the mucous membranes of the cheeks and of the lips. It sometimes affects the gum and spreads to the tongue — Gangrenous stomatitis or Cancrum oris or Noma.

ஊழ் முறை, முன் சன்மத்திற் செய்த வினைப் பயனின் முறை, the order of experiences resulting from the operation of Karma attributed to previous births; 2. முன்வினைப் பயனின் கோட்பாடுகள், the theory of past Karma.

NOTE: The theory of karma is that we are happy or that we suffer according to the good or bad deeds done in the past and the whole scope of philosophy is to reach the glory of men.

ஊழ் வலி, பழய வலி, a long standing or chronic pain; 2. பூர்வ கர்மத்தின் வல்லமை, இதைத் தடுக்க ஒருவன் எத்தனை முயன்றாலும், அத்தடையை நீக்கி மேற்கொள்ள முடியாத காரியம், இது பற்றியே குறளில்,

''ஊழிற் பெருவலியாவுள... நான் முற்று''

எனக் கூறப்பட்டது.

(In Philosophy) that which is not in the power of mortals to prevent or stand against ie. the Karma or the result of actions in the previous births. This is well defined in the verse quoted above from the sacred Kural in Tamil.

ஊழ் விதி, (ஊழ் + விதி = பழய நியமிப்பு) அதாவது, முற்பிறப்பிற் செய்த தொழில்களினா லேற்பட்ட நியமிப்பு அல்லது கட்டளை. இதனால் ஒவ்வொருவரும் அவாளவாள் செய்த கருமங்களுக்கு உத்தரவாதமெனக் கொள்ளப்படும். இப்பிறப்போ நம்முடைய பூர்வ கருமத்தின் பயனாக அமையப் பெற்றது. இனி வரும் பிறப்போ, இப்பொழுது செய்து வரும் கருமத்திற் கீடாக உண்டாகும். ஆகவே அதைத் தடுப்பது முடியாத காரியம், வருந்துவதில் பிரயோசன மில்லை, the law of Karma is as per actions done in the previous birth and the decree of fate or destiny. According to it, man is made fully responsible for his own actions. Our present condition is the result of our past actions and our future will be moulded by our present efforts or actions.

The law of Karma is as true as the Law of Gravity. It cannot be defied without reeping the consequences and the best and the only was is to reconcile ourselves to our lot instead of worrying over things that are beyond our control.

ஊழ்வினை, (ஊழ் + வினை) பழய அல்லது நாட்பட்ட தொழில் (literally) old or long continued actions; 2. முன் பிறப்பிற் செய்த கருமம், the action or deed in the previous birth; 3. இப் பிறப்பிற்குக் காரணமாயுள்ள பழய அதாவது முன் பிறப்பிற் செய்த கருமங்கள், actions in the previous birth as the causes for the present life in all its aspects.

NOTE: Human form is the Karmic body in which we decide our fate. Luck or ill luck is the result of one's past actions and thoughts.

ஊழ்வினைப் பயன், முற் பிறப்பிற் செய்த கருமங்களினால் நேர்ந்த பயன், that which is evolved out as the result of the previous birth or fruits of past Karma. It is the happiness or misery entailed upon a person according to his actions done before his soul transmigrated from the previous body to the present; 2. இப்பிறப்பில் அனுபவிக்கும் சுகதுக்கங்கள், the present experiences of pleasures and sorrows with reference to the deeds in the past.

NOTE: There are different effects of Karma in life and they are the results of their own past. A man will have to live until such time as his Karma is fully worked out.

ஊளல், ஓர் வகை மீன், see உள்ளான்.

ஊளன், ஊளையிடும் நரி, நாய் முதலியன, those that howls such as, the wolf or the dog.

ஊளா, கருப்பும், நீலமும் கலந்த நிறமுள்ள நெடுவாய் மீன் என்னும் கடல் மீன், a dark blue coloured sea fish Sphyraena acutipinnics. It is a large fish and is also called Pescada or sea pike.

ஊளான், சாம்பல் நிறமாயும், வெள்ளியைப் போன்ற பளபளப்புள்ளதாயு முள்ள ஓர் வகைக் கடல் மீன், a sea fish of greyish silvery colour Crenidens indicus.

ஊளி, see ஊளா, 2. பசி hunger; 3. சத்தம், sound.

ஊளி சஞ்சம், மாத்திரைக் கோல், a rod used by conjurors or diviners — Magic wand.

ஊளை, நரி நாய் முதலியவை யிடுங் கூச்சல், the howl of a dog or of a jackal; 2. கெட்ட நாற்றம், offensive smell; 3. ஊத்தை, which see; 4. சளி, a viscid fluid excreted from the nose as in ஊளை மூக்கு — snot.

ஊளைக் கள்வன், நண்டு, crab.

ஊளைக் காது, சீழ் வடியுங் காது, ear with a purulent discharge — Otorrhoea.

ஊளைச் சதை, see ஊழற் சதை.

ஊளைச் சரீரம், see ஊழற் சரீரம்.

ஊளை மூக்கன், சளி வடியும் மூக்கன், a snotty fellow (not in decent use). It is said of a person in a low term of abuse.

ஊளை மூக்கு, சதா சளி வடிந்து கொண்டிருக்கும் மூக்கு, nose constantly discharging mucous Running nose.

ஊறப் போடல், மூலிகையினின்று சத்தெடுக்க, முன் ஊறும்படி நீரில் அமிழ்த்தி வைத்தல், the thoruough soaking of a drug in a liquid before preparing an extract from it — Insuccation.

ஊறல், களிம்பு, rust of copper or acetate of copper — Verdigris; 2. உடம்பின் தினவு, itching sensation in the body; 3. பஞ்ச லோகக் கலப்பு, an alloy of five metals viz — gold, silver, copper etc. 6. நீரூற்று, spring water; 7. சாறு, juice extracted by squeezing as from leaves; 8. கஷாயம் as in ஊறற் கஷாயம், tincture or infusion; 9. உலோகக் கலப்பு, an alloy; 10. பெண் குறியிலேற்படும் அதித நமைச்சல், intense itching of the external genitals of the female — Pruritus vulvae.

ஊறல், ஊறுதல், oozing as it does from a wound, the act of soaking, steeping or pickling; 2. ஊறுகை, the act or process of oozing out — Exudation; 3. ஆறி வரும் புண்ணில் இரத்தம் பரவுதல், spreading of blood in a healing sore — A process in cure.

ஊறல் கஷாயம் மூலிகைகளை பிடித்துக் குளிர்ந்த நீர் அல்லது வெந்நீரிலூறவைத்து வடித்தெடுக்குங் கஷாயம், a dilute liquid extract obtained from a drug or drugs by soaking it or them in water (cold or boiling); 2. சொறி சிரங்குக்குக் கொடுக்கும் கஷாயம், a decoction prescribed for itch or itching.

ஊறல் தெறித்தல், களிம் பற்றுப் போதல், being deprived of rust or verdigris; 2. உடம்பின் தினவு, அல்லது நமைச்சல் போதல், to be cured of itching sensation.

ஊற வைத்தல், மூலிகைகளை வெந்நீர், சாராயம் முதலிய இலாகிரி சரக்குகளில் மெதுவாகும்படி ஊற வைத்தல், keeping in or steeping herbs in water, spirit or other liquids for softening them till their essence is thoroughly absorbed in them — Maceration.

ஊறற் பதம், முழுதும் ஊறிய பதம், that stage or condition in which anything is completely soaked; 2. பச்சைப் பதம், anything softened with moisture or by soaking.

ஊறற் பாக்கு, தண்ணீ ரிலூறவைத் தெடுத்த பாக்கு, areca-nut steeped in water to remove some of its defets and to render it fit for use. 2. சம்போக காலத்தில் பெண்கள் புருஷர்களுக்குக் கொடுக்கும் எச்சற் பாக்கு, areca nut soaked in the saliva and given by females to their lovers in sexual intercourse; 3. வசியப்படுத்த எச்சில், விந்து, நாதம், அமுரி இவற்றில் ஊறவைத்துப் பெண்களுக்கு அல்லது புருஷர்களுக்குக் கொடுக்கும் பாக்கு, areca nut soaked in saliva, semen, menstural blood or urine. It is used by either men or women to their lovers for gaining or promoting their mutual affections.

ஊறற் புண், தினவெடுக்கும் புண், an itching sore; 2. ஆறி வரும் புண், a healing sore; 3. பச்சைப் புண், a sore with moisture and an opening for discharge — Raw sore.

ஊறாமை, கசியாமை, not oozing as blood from sores or ulcers.

ஊறி கணம், அரிதாரம், orpiment.

ஊறிலைக்கர், எருக்கிலை, the leaf of the plant Madar — Calotropis gigantea.

ஊறு, ஊறுதல், which see; 2. உணர்ச்சி, sense of touch; 3. கொலை, murder; 4. உடம்பு, body; 5. காயம், injury or wound; 6. வல்லூறு, king of falcons.

ஊறு காசம், கண்ணி லடிபட்டது போலக் கடுத்து, நொந்து, சிவந்து, எரிச்சல் கண்டு, இரவில் தூங்கும் பொழுது கண் முழுவதிலும் சதை விரிந்து மூடிக் கொள்வதுடன் கண் இடுங்கி, இமைகள் களத்து, இருண்டு பல விதமாய்த் தோன்றும் ஓர் வகைக் கண் நோய். இதில் கண்மணி சற்றுச் சிறுத்திருக்கும், a disease of the eye characterised by pain like the one of a traumatic nature, inflammation of the conjunctiva, burning sensation, swelling and adhesion of the eye-lids while sleeping due to the relaxation and thickening of the eye-lids, congestion of the cilliar region, and contraction of the pupil.

ஊறுகாய், ஊது வைத்த காய், any unripe fruit soaked in salt water; 2. காடி அல்லது உப்பிலிட்டு ஊறிய காய்கள், அவையாவன — எலுமிச்சை, நாரத்தை, மா, நெல்லி, களா, இஞ்சி முதலியன unripe fruits such as lime, green

bitter - orange, mango, gooseberry, Bengal currant (calah) ginger, etc., which are preserved in salt or vinegar — Pickle; 3. அடை காய், preserved dry-fruit.

ஊறுகோள், காயம், wound or injury; 2. கொலை, murder.

ஊறுதல், நீர்க்கசிவு, the oozing of water as from a boil or a wound; 2. தண்ணீரில் போட்டு வைத்தல், to retain steeped in any fluid as is done to greens in pickles; 3. புண்ணில் தசை வளர்தல், formation of a new layer of flesh over a healing wound; 4. மெலிந்த உடம்பி லிரத்தம் சேருதல், increase of blood in a convalasent's body; 5. வாயூறுதல், insalivation; 6. சதை பிடித்தல், picking up or putting on flesh; 7. பெருகுதல், to be increased in weight or flesh.

ஊறு நீர், புண்ணி லிருந்து கசியும் நீர், a thin serous fluid from a sore or from a wound — Ichor, see ஊனீர்; 2. ஊற்று நீர், spring water; 3. வாய் நீர், saliva; 4. பெண்கள் உதட்டிலூறும் நீர், the fluid supposed to ooze from women's lips from love; 5. யோனியி லூறும் நாத நீர், a secretion from the vagina in females during coition.

ஊறுபாடு, விரணம், wound or lasion 2. துன்பம் distress; 3. காய முண்டாக்குதல், inflicting injuries; 4. காயப் படுத்தும் விதம், இது நான்கு, அவையாவன: the different ways in which a wound may be caused. They are of four kinds, viz — 1. அடித்தல், beating; 2. குத்தல், stabbing; 3. வெட்டல், cutting; 4. எய்தல், shooting.

ஊறுபுண், ஆறி வரும் புண், a healing sore; closing wound.

ஊறும் பில்லி, சூனியத்தினா லுடம்பி லேற்படும் பொறுக்க முடியாத தினவு, an unbearable itching sensation due to the mischief of evil spirits in sorcery or wichcraft.

NOTE: Sorcery and witchcraft are the manuals Tantric science. They were the sole properties of the Dravadians. They were translated into Sanscrit by the Aryans after their migration into India.

ஊறெண்ணெய், மண்டை குளிர்ச்சி யடைவதற்கும், கபால வறட்சியைப் போக்கு வதற்காகவும், உச்சியிற் காலையில் தடவுமெண்ணெய், oil whether gingelly or medicinal smeared in the

mornings on the crown of the head for cooling the brain and for curing the heat or dryness in the head.

ஊறை, சவ்வரிசி, இது போர்னியூ தேசத்தினின்று இறங்கு மதியாகும் வஸ்து, sago or sago-rice. The common sago sold in the bazaars is obtained from the pith of Borneo sago palm — Metroxylon sago.

ஊற்றம், கெடுதி, injury; 2. பரிச வுணர்ச்சி, sensation of touch; 3. ஆற்றல், வல்லமை, strength or power; 4. மிகுதி, intensity; 5. பழக்கம், practice.

ஊற்றல், ஊற்றுதல், the act of pouring.

ஊற்றறிவு, பரிச வுணர்ச்சி, sense of touch.

ஊற்றாம் பெட்டி, மூத்திரம் ஊறும் பை, the bladder for the collection of urine — Urinary bladder.

ஊற்றின, கசிந்த, oozed out; 2. வெளியாக்கிய expressed.

ஊற்றின வெண்ணெய், வேக வைத்து வடித்த கொட்டை முத்து எண்ணெய், இதுசெக்கில் ஆட்டி வடிக்கும் எண்ணெயை விட மேன்மையானது, castor oil obtained by boiling the crused castor seeds — Hot drawn castor oil. It is a domestic preparation which is considered superior to that obtained from the oil-press or oil machine and is therefore much esteemed in medicine.

ஊற்று, நீரூற்று, spring or spa; 2. கசிவு, moisture or water oozing from the ground.

ஊற்றுதல், எண்ணெய் வடித்தல், to extract oil from the seeds, like the castor seeds by boiling them.

ஊற்று நீர், ஊற்றுக் கண்ணி லிருந்து வடிந்த தண்ணீர், percolated water; spring water — Aqua fortana.

ஊற்றுப் பூ, தேங்காய்ப் பிண்ணாக்கு, the refuse of the kernel of cocoanut after the oil is expressed from it — Cocoanut oil-cake.

ஊற்றெண்ணெய், வடித்த எண்ணெய், see ஊற்றின எண்ணெய்.

ஊனக் கண், உடம்பின் கண், physical eye; 2. ஞானக் கண், eye of wisdom; 3. பொட்டைக் கண், defective eye.

ஊனக் கதண்டு, கரு வண்டு, கதண்டு black beetle; 2. ஓர் வகை உபரசச் சரக்கு, one of the 120 kinds of natural bodies described in the Tamil Medical Science.

ஊனக் கால், குறைந்த கால், short leg; a short distorted limb; 2. பிறவி நொண்டி, disabled leg; a deformity of the foot generally of a congenital origin — Clubfoot.

ஊனஞ் சவ்வு, ஊன் வழியும் சவ்வு, membrane secreting serum — Serous membrane.

ஊன மாதல், நொண்டி யாதல், to be crippled; 2. பழுதுறல், to be maimed; 3. அங்கம் பழுதாதல், to be defective of any organ in the body.

ஊனமுரி, மூத்திரத்தில் ஊன் கலந்து போகுமோர் மேக நோய், albumin in the urine — Albuminuria. See ஆச்சிய கந்தம்.

ஊனம், குறைவு defect, as of bodily organs; 2. அறிவு, destruction; 3. பிணம் corpse or carcase; 4. ஊனீர், thin transparent part of the blood or any similar fluid — Serum; 5. கண்ணூனம், privation of the eye; 5. காலூனம், privation of a leg or a foot; 6. கொழுப்பு, fat; 7. தசை நீர், the thin liquid matter that drips from the flesh in roasting.

ஊனவன், மாமிச ரூபமாயுள்ள மனிதன், man in the shape of a mass of flesh.

ஊன வாளி, குறைவுபா டுள்ளோன், a maimed or lame person.

ஊனன், அங்கப் பழுதுடையவன், one who is defective of any part in the body; 2. நொண்டி, a cripple; 3. ஊனாங் கொடி, see ஊனான்.

ஊனாங் கொடி, see ஊனான்.

ஊனாம் பதி, கல் விருசு, a plant (unidentified).

ஊனாம்பல், see ஊதா வல்லி, இதனால் உறுப்பு மூலம் போம். It cures external Hemmorrhoids.

ஊனான், உன்னாயங் கொடி, a creeper — Convolvulus racemosus; 2. பெரு முசுட்டை, many flowered bindweed — Ipomaea staphylina

ஊனி, அமுக்கிராக் கிழங்கு, horse-root — Withania somnifera; 2. மாமிச வுடம்புள்ளோன், one with a corporeal existence or with a physical body.

ஊனின் பூடு, சிறு பூளை, woolly caper — Achyranthes lanata.

ஊனீர், தசை யினின்று வடியும் நீர், water oozing out from flesh or meat; 2. இரத்தத்தின் மேற்படியும் நீர், a thin watery and transparent liquid separated from the blood — Serum; 3. பெண் காமக்களை, a fluid secreted in the vagina during the sexual intercourse.

ஊனுடம்பு தசையினாலான வுடம்பு, body composed of flesh.

ஊனுப்பு, மூன்று மாதத்திய பிண்டத்தினின்று எடுக்கும் சத்து, essence purely of salt extracted from a foetus three month's old as per process laid down in the Tamil Medical Science; 2. பூனீருப்பு, an efflorescent salt found on the surface of the soil of Fuller's earth in a particular season.

ஊனுப்பு செய நீர், பூனீ ருப்பு செய நீர், a strong smelling liquid collected from the preparation of Pooneer by placing or exposing it to the night's dew; 2. மூளைச் சத்தினின்று தயாரிக்கும் செய நீர், a liquid prepared and collected from essence of the human brain by the same process as mentioned above.

ஊனுருக்கி, இது சாதாரணமாய் உடம்பிலுள்ள தசை, நிணம், சுக்கிலம், கொழுப்பு, எலும்பு, முதலிய சத்துக்களைப் போக்கி, அதனால் அவைகளைச் சார்ந்த வுறுப்புகளை ஈன மடைவித்து மெலியச் செய்யும் நோய்களுக்கு ஏற்பட்ட ஓர் பொதுப் பெயர். இது அடியிற் கண்டபடி நுரையீரல், குடல், குண்டிக்காய், எலும்பு, நிணநீர்க் கோளம் முதலிய உறுப்புகளைக் கருதிப் பல விதமாகக் கொள்ளப்படும். a disease marked by progressive wasting or emaciation of the body due to the degeneration of the various constituent parts o the body such as the muscle, the lymph, the semen, the fat, the bone, etc — Tuberculosus. It consists of several kinds according to the affection of the various organs in the body such as the lungs, the intestines, the kidney, the bladder, the lymphatic glands, etc., and they are:—